
# திருக்குறள்.

மூலமும்-விசேஷ ஞான விருத்தியும்.



மா. கோபாலகிருஷ்ணக் கோன்,

புஸ்தக வியாபாரம்,

மதுரை & சென்னை.

1935

விலை அணா ஆறு.

ப,ுடு : 665

உ

# திருக்குறள்.

மூலமும் பரிமேலழகர் உரையும்.

இஃது

ஞானபாகமாகிய

கடவுள் வாழ்த்து, நீத்தார் பெருமை,

நிலையாமை, துறவு, மெய்யுணர்தல்,

அவாவறுத்தல், ஊழ என்னும்

இவ் ஏழு அதிகாரங்களும்,

---

மதுரைத் தமிழ்ச்சங்க வித்வான்

ஸ்ரீ. நா. கிருஷ்ணசாமி நாயுடவர்கள்

எழுதிய

விசேஷ ஞானவிருத்தியும் அடங்கியது.

மதுரை

ஸ்ரீ மீனாம்பிகை பிரஸில்

பதிப்பிக்கப்பெற்றது.

1935.

[விலை]

MARAIMALAI ADIGAL LIBRARY MADRAS-1

# பிழை திருத்தம்.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 100 | 14 | லபுத்தை | புலத்தை |
| 112 | 11 | அவ்வித்தய | அவ்வியத்த |
| 162 | 16 | பதெல்லா | பவெல்லா |
| 187 | 1 | கிட்டையியே | கிட்டையிலே |
| 204 | 1 | நீயவு | தீயவு |
| 222 | 14 | ல்லா | லால் |

ஸ்ரீ:||

# முகவுரை.

---

மதுரைத் தமிழ்ச்சங்கத் தலைமைத்
தமிழாசிரியரும் செந்தமிழ்ப் பத்திராதிபரும
மஹா வித்வானுமாகிய
பிரமஸ்ரீ திரு. நாராயணையங்காரவர்களெழுதியது

மதுரைத் தமிழ் வித்துவான் வேதாந்த விற்பன்ன ஸ்ரீ நா. கிருஷ்ணசாமி நாயுடு அவர்களால் திருக்குறளிற் சில அதிகாரங்கட்கு மூலமும் உரையும் வரைந்து பதிப்பிக்கப்பட்ட இப்புத்தகத்தை ஒருமுறை பார்த்தேன். அதனுள் கடவுள் வாழ்த்து, நீத்தார்பெருமை, நிலையாமை, துறவு, மெய் யுணர்வு, அவாவறுத்தல், ஊழ் என்னும் இவ்வேழு அதிகாரங்களின் மூலமும் உரையும் விசேட ஞான விருத்தி என்னும் ஒரு குறிப்புரையும் வரை

யப்பட்டுள்ளன. விசேட ஞானவிருத்தியில் பல வகையான ஞானநூற் கருத்துக்களும் நூலாசிரியருடைய நுண்ணுணர்விற் றோன்றிய அதிசூக்கும விடயங்களும் பிறவும் அமைந்துள்ளன. அவற்றால் இதனை ஆக்கியோரான நாயுடவர்கள் அறிவின் விரிவும் பலவகை அத்வைத ஞான நூலுணர்ச்சியும் விளங்குகின்றன. இஃதொரு புதுமுறையாயுள்ள வுரை; இது, படித்த பண்டிதர்கள் இலமென்றசைஇ யிராமல் அறிவு நூலாகிய ஏதேனும் ஒரு புத்தகமெழுதி எளிதிற் பயன் படைத்தற்கு வழிகாட்டி யாயிருக்கிறது. இப்புத்தகத்தைப் பலரும் வாங்கிப் படிப்பார்களாகில் இதனை யாக்கியோரையும், பதிப்பித்தோரையும் ஊக்கி இன்னும் பல இத்தகைய அத்வைத சம்பந்தமான புத்தகங்கள் பதித்துதவச் செய்தற்கு உபகாரமாயிருக்குமென்றெண்ணுகிறேன்.

இங்ஙனம்,

திரு. நாராயணையங்கார்.

# சிறப்புரை.

"அறனறிந்தேம் ஆன்ற பொருளறிந்தேம் இன்பின் திறனறிந்தேம் வீடு தெளிந்தேம்-மறனெறிந்த வாளார் நெடுமாற! வள்ளுவனார் தம்வாயாற் கேளா தனவெல்லாங் கேட்டு" என்று கொடிஞாழன் மாணி பூதனார் கூறியவாறு தெய்வத் திருக்குறளைப்பற்றி அது உலகமுழுதும் போற்றும் ஓர் ஒப்பற்ற நூலாதலான் அதன் பெருமையை நாம் வியந்துகூற வேண்டியதில்லை. ஆனால் அதில் உள்ள நூற்று முப்பத்து மூன்று அதிகாரங்களில் இச்சிறு நூலில் எடுத்துக்கொள்ளப்பெற்ற ஏழு அதிகாரங்களே நாயனார் ஞான மார்க்கமாகக் கூறப்பெற்றனவாதலான் அத்வைத சிரவண மனன நிதித்யாசனங்களில் பழகிவரும் அப்பியாசிகளுக்கு இது அனுதினம பாராயணம் பண்ணுதற்கோர் அத்தியாவசியமாகுமென்பதே எமது துணிபு. இந்நூலில் மதுரைத் தமிழ் வித்வானும், அத்வைத ஆராய்ச்சி யாளருமாகிய

ஸ்ரீ நா கிருஷ்ணசாமி நாயுடவர்கள் "விசேஷ ஞானவிருத்தி" என ஓர் உரை எழுதியிருப்பதை முற்றிலும் பார்த்தேன். ஒரு சிறுபுல் நுனியில் தங்கியிருக்கிற அதி நுட்பமான ஒரு சிறு பனித்துளி அதனெதிரி லிருக்கும் ஒரு பிரமாண்டமான மரத்தினது முழு உருவத்தையும் அப்படியே தனக்குள் பிரதிபலித்துக் காட்டுமாப்போல நாயனூரது கடுகினோர் துளிக்கொப்பான சிறு வாக்கியங்களில் அமைந்து கிடக்கும் கடலுககொப்பான ஞானவிருட்சத்தையே இவ்வுரை பிரதிபலித்துக் காட்டுகின்றதென்றுதான் துணியவேண்டும். இனி ஈசுர சத்தம், பிரம சத்தம் இவ்விரண்டு சத்தத்திற்கும் சமானூர்த்தமே தோன்றினும் தமக்குள் எவ்வளவோ பேதமுண்டென்பதை அப்பியாசிகளே அறிவாராதலின் நமது நாயுடவர்களும் அவற்றிற்கிணங்கப் பிரமநிலையைக் குறிக்கும்போது அதனை ஆன்மாவென்றும், ஜீவநிலையைக் குறிக்கும்போது அவற்றை ஆன்மாக்கள் என்றும் ஒருமையிலும் பன்மையிலும் வைத்து அவ்வவற்றின் வேறுபாடு தோன்றப் பகுத்திருப்பது பாராட்டற்பாலது.

பொதுவாக எந்த நூலினும் அதனதன் உள்ளுறை எதுவாயிருப்பினும் அதனை ஆய்வார் பண்புக்கேற்றவாறு அவரவர் விருப்பம் ஆங்கு எழுதல் இயல்பு. அங்ஙனமே திருக்குறளைப் புலவர்கள் சங்கநூல்களில் ஒன்றாகிய சிறந்த தருமநீதி நூல் என்று தலைமேல் வைத்துக்கொண்டாடுகின்றனர். ஆனால் நமது நாயுடவர்கள் தமது முடிவுரையில் திருக்குறள் ஒரு ஞானப் பெருங்கடல் என்கின்றனர். அது எமக்கும் உடன்பாடே. அது இந்நூலொடு பழகுவார் நுணுகி யுணர்வாராக. இதற்கு "ஈதலே யறமு மறித்தமா மனைத்து மிகழ்ந்துவை விடுதலே வீடு, மாதலாற் றனக் குரியவில் வாழ்க்கை யதனையே யறமெனக் கூறிக், கோதிலா வீட்டி னிலக்கண மிருத்தல் குறித்துமெய் யுணர்வையுந் துறவு, டோதினர் வேதந் தனைத்தமி ழுருவத் தொளித்தெமக் களித்தவள் ளுவரே" என்னும் சாந்தலிங்க சுவாமிகள் வாக்குமோர் சான்று.

நாயனார் குறள் ஒவ்வொன்றிற்கும் நாயுடவர்கள் எடுத்துக்காட்டாகப் பல அத்வைத நூல்களிலிருந்து எடுத்துக்காட்டிய ஞானப்பனுவல்கள் ஒவ்வொன்றும் நாயனார் பெருமையை மேன்மேலும் உலகுக்கு அறிவுறுத்திக்கொண்டே செல்லுகின்றதென்றுங் கூறலாம்.

இந்நூல் அதிகஞ் செலவாதல் அருமையே யாயினும் அறிந்த பெரியோர்கள் ஆதரிப்பது திண்ணமாதலால் இதனைச் சுத்தப் பதிப்பில் புத்தகமாக்கி வெளிப்படுத்திய மதுரை ஸ்ரீமான் இ. மா. கோபாலகிருஷ்ணக்கோனார் அவர்களுக்கும், ஸ்ரீ மீனாம்பிகைப் பிரஸ் மானேஜர் வேதாந்த பூஷணம் ஸ்ரீ கந்தசாமி பிள்ளையவர்களுக்கும் நம் தமிழ்நாடு நன்றி செலுத்துமென்றுகூறுதல் நனி பொருந்தும்.

இங்ஙனம்

பிரம்மஸ்ரீ பிரமானந்தசுவாமிகளின்பாதசேவை

சிவானந்த சுவாமி,

ஸ்ரீ காசி.

ஸ்ரீ சங்கரபூஜ்ய பகவத்பாதாசாரிய
சுவாமிகளவர்கள்

திருவாய்மலர்ந்தருளிய

# விவேக சூடாமணி.

## மனுடத்தன்மை முதலியவற்றின் துர்ப்பலத்தன்மை கூறல்.

சீவருக் கிங்கு மாந்தர் சென்மமே யரிதா
மத்தின், மேவுதற் கரிதா மாண்மை மேவினு
மறையோன் றன்மை, யாவதற் கரிதா மத்தை
யடையினும் வேதந் தானே, யோவலற் றோது
மார்க்க மொன்றுவ தரிய தாகும். 1

அத்தினும் வித்து வானா யமைவதிங் கரிதா
மத்தின், வித்தர வான்மா னான்ம விவேகமெத்
தரிதே யத்தின், சுத்தமா ஞானமற் றேசொரூப
மாய் நிற்கு முத்தி, புத்திசே ரனந்த சன்மப்
புண்ணிய மன்றி யெய்தா. 2

பேசிய வடைவா யாவும் பெற்றிட லொண்
ணாத தேனு, மீசனல் லருளி னாலே யிசைவதா

யருமை யான, மாசிலா மநுடத் தன்மை மன்னிய முமுட்சுத் தன்மை, தேசிக ராசன் சேவைத் திறமையிம் மூன்றும் போதும். 3

மனுடஜந்மம் அடைந்தும்
சுவார்த்தத்தில் முயற்சியாதவனுக்கு
ஆத்மஹத்தியும் மூடத்துவமுமாமெனல்.

எத்திற வேது வாலோ வெய்திய மநுடத் தேக, மத்திலு மார ணார்த்த மறிவதற் கேது வாக, வொத்தவாண் மையைய யடைந்து மூண் மையா முத்தி சேர, வெத்தனஞ் செய்யா மூடனென்றுமான் மாவைக் கொன்றோன். 4

பின்னமி லான்ம ரூபம் பிரிவறத் தானாய் நின்று, மன்னவ னசத்தாந் தேக மாதியை யபிமா னித்திங், குன்னிய வான்ம ரூப முணர்ந்து தானடையா தத்தாற், றன்னுடை யான்ம ரூபந் தன்னையே கொன்ற வன்றான். 5

அருமையா மநுடத் தேக மடைந்தி லாண்மை தன்னை, மருவியும் யாவன் றன்சேர்

மாசிலாப் பயனை வேண்டித், தரணியின் முய
ன்றி டாமற் றவிருவ னவனை யன்றி, யொரு
வனு மூடனுண்டோ வுள்ளவா றோருங் காலை. 6

## ஆத்மபோதத்தாலன்றி வித்தாதியால் முத்திசித்தியாதெனல்.

ஓதிய பலவா நூலை யொழுங்குறப் படித்து
மென்ன, தீதிலாத் தேவர் தம்மைத் தினமுமர்ச்
சித்து மென்ன, நீதியாங் கன்ம மியாவு நித்த
முஞ் செய்து மென்ன, கோதிலாத் தேவர் தம்
மைக் குறித்துபா சித்து மென்ன, 7

ஈதலா லின்ன மின்ன னெத்தனை யியற்றி
யென்ன, வாதியாம் பரசி வைக்கிய மறிந்திடு
மறிவா லன்றி, யோதொணுக் கற்பகோடி யுற்ற
கா லத்தி னாலுங், கோதிலா முத்தி சிததி கூடுவ
தென்று மில்லை. 8

வித்தமா தியினா லென்றும் விமலமா முத்தி
யாசை. வைத்திட வேண்டா மென்னும் வா

மான சுருதி தானே, மெத்திய சன்மங் கட்கு
மெய்ம்முத்தி யேனுத் தன்மை. சுத்தமா யில்லை
யென்று துலங்கவே சொல்லு மன்றோ. 9

ஆகையால் வித்து வான்றா னமலமா
முத்தி சேர, வாகிய சகலி ருப்பம் வரையற
விடுத்து மேலோ, னாகிய நல்லா சானை யடைந்
தவ னுபதே சித்த, வேகமாம் பொருளிற் சித்த
மிருத்தியே முயல வேண்டும். 10

அனிசமிப் பவமாம் பவ்வத் தமிழ்ந் திடுந்
தன்னைத் தானே. இனியயோ கத்தி னாலே
யெய்திய சொரூப ஞான, மெனுமகா நாவாய்
கொண்டே யிப்பவ வாரி நின்றுங், கனபரப்
பிரமமாகுங் கரையின்மே லேற்றவேண்டும். 11

புத்திரர் மாதர் வித்தம் பொருந்துமே டணை
யை விட்டிவ், வத்திர மான கன்ம மனைத்தையு
மறவே தள்ளிப், புத்திமா னான தீரன் பொருந்
திய பவத்தை விட்டு, முத்தியாம் பேற்றைச்
சேர முயற்சிசெய் திடவே வேண்டும். 12

உ

கடவுள் துணை.

# முதல் அதிகாரம்.

## கடவுள் வாழ்த்து.

அஃதாவது:—தான் வழிபடு கடவுளையாயினும், எடுத்துக்கொள்ளப் பட்ட பொருளுக்கு ஏற்புடைக் கடவுளையாயினும், வாழ்த்துதலாம்.

அவைகளுள் இவ்வாழ்த்து ஏற்புடைக் கடவுளை யென்றறிக. எப்படி யென்றால் சத்துவ முதலிய முக்குணங்களாலே அறமுதல் மூன்றாகிய உறுதிப் பொருளுக்கு அக்குணங்களாலே மூவராகிய முதற் கடவுளோடு சம்பந்தம் உண்டாயிருக்கையால் அம் மூன்று பொருள்களையும் சொல்லத்தொடங்கிய இவர்க்கு இம்மூவரையும் வாழ்த்துதல் முறைமையாதலின் இவ்வாழ்த்து அம்மூவர்க்கும் பொதுப்படச் சொல்லினாரென்றறிக.

அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.

பதவுரை.

எழுத்தெல்லாம்—எழுத்துக்களெல்லாம்
அகரமுதல —அகரமாகிய முதலையுடையன
உலகு —உலகம் (அதுபோல்)
ஆதிபகவன் —ஆதிபகவனாகிய
முதற்று —முதலையுடைத்து.

(கருத்துரை) எழுத்துக்களெல்லாம் அகரத்தை முதலாக உடையன, அதுபோல உலகம் கடவுளை முதலாக உடையது என்பதாம்.

ஏகாரம் தேற்றத்தில் வந்தது.

தமிழெழுத்துக்களுக்கு மாத்திர மல்லாமல் வட எழுத்துக்களுக்கும் முதலாதல்நோக்கி எழுத்தெல்லா மென்றார். ஆதிபகவனென்னும் இரு பெயரொட்டுப் பண்புத்தொகை வடநூல் முடிபாதலின் இயல்பாயிற்று.

உலகென்றது இங்கே உயிர்களின் மேலே நின்றது. காணப்பட்ட உலகத்தைக் கொண்டு காணப்படாத கடவுளுக்கு இருப்பைச் சொல்ல வேண்டுதலின் ஆதிபகவன் முதற்றே யென்று உலகின்மேல் வைத்துச் சொல்லினர். அப்படிச சொல்லினராயினும், உலகிற்கு முதல் ஆதிபகவனென்பது கருத்தாகக் கொள்க

§ நாதமாத்திரையான இயல்பாற் பிறத்தலால் அகரத்திற்குத் தலைமையும், செயர்க்கையறிவாலன்றி இயற்கையறிவால் முழுதும் அறிதலால் ஆதிபகவனுக்குத் தலைமையும் கொள்க. தலைமைபற்றி வந்த அகரத்திற்கும், ஆதிபகவனுக்கும் * பிம்பப் பிரதிபிம்பபாவம்

---

§ நாதம் உயிர் முயற்சியால் எழுகிற உதான வாயுவால் ஆவது.

*பிம்பப் பிரதிபிம்ப பாவம்-ஒப்புமையால் பிம்பமும் பிரதிபிம்பமுமெனத் தோன்றல்.

சொல்லுதலால் இது எடுத்துக்காட்டுவமை யணி [இப்பாட்டால் முதற்கடவுளினிருப்புச சொல்லப்பட்டது]

### விசேட ஞானவிருத்தி.

அகரம் தனித்தும் மற்றை எழுத்துக்க ளோடு தோய்ந்தும் நிலவுகுதல் போன்று பக வன் சுத்த சைதன்னிய வஸ்துவாகத் தனித்தும் மற்றைப் பொருள்களோடு தோய்ந்தும் நிலவுகு வனென்பதும் அகரமின்றெனில் அதன் வர்க் கங்களாகிய ஆகார முதலிய எழுத்துக்கள் எவையுமின்றாதல் போன்று பகவன் இன்றெ னில் அவனது வர்க்கங்களாகிய உலக முதலிய எவையுமின்றென்பதும் பிம்பப் பிரதிபிம்பப் பாவமாக இவ்வுவமை யணியால் எடுத்துக் காட்டியருளினார் என்ப. இதனைத் "தர்ப்ப ணச் சாயல்போற் சைதன்னியந்தன்னி லிப் பிர பஞ்சமென் றுந்தீபற இல்லை யிதுவென் றே யுந்தீபற" என்ற சொரூபஉந்தியார் மஹா வாக்கியத்தினுலுமுணரலாம். (க)

கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ
னற்றா டொழாஅ ரெனின்

பதவுரை.

வாலறிவன் —மெய்யறிவையுடையவனது
நற்றாள் —நல்லவடிகளை
தொழாரெனின் —வணங்காராயின்
கற்றதனால் —யாவும் கற்ற இக்கல்வியறி[வினால்
ஆய —உண்டாகிய
பயன் —பிரயோசனம்
என் —யாது

(கருத்து) மெய்யறிவுடைய கடவுளை வணங்காராகில் கற்றதனாற் பயனில்லை என்பதாம்.

என்னென்னும் வினைப்பெயர் என்னென்றாய் இல்லையென்னும் பொருளைக் குறிப்பித்து நின்றது. கொல்-அசைநிலை. பிறவிப் பிணிக்கு மருந்தாகலின் நற்றாளென்றார். ஆகமவறிவுக்குப் பயன் அவனடிகளை வணங்கிப் பிறவியை அறுத்தலென்பது இதனாற் சொல்லப்பட்டது.

## விசேட ஞானவிருத்தி.

'ஆகம அறிவு' என்பது அறம், பொருள், இன்பம், வீடு என்கிற புருஷார்த்தம் நான்கையும் பயக்கவல்ல கல்வி அறிவு. கல்வி அத்தங்கள் நான்கையும் அளிப்பதோடு இம்மையிற் புகழையும் ஈயவல்ல சிறப்பு வாய்ந்தகாயினும் "கல்வி கற்பது கடவுள் நிலைகாணவே" என்று ஈங்குச் சிறப்பு நோக்கி எடுத்துக் கூறப்பட்ட தென்ப. "ஆன்மா ஒன்றே நித்தியம்; ஆன்மாவைத் தவிர சரீராதிப் பிரபஞ்சங்கள் அனைத்தும் அநித்தியம்" என்கிற திடஞானமாகிய நித்தியா நித்திய வஸ்து விவேக பரிபக்குவம் சித்திக்க வேண்டுமானல் அதற்குத் தத்துவ போதம் பெறவேண்டுமாதலானும் அத் தத்துவ போதத்திற்கு வித்தாயிருப்பது ஞானத்தைப் பிரதிபாதிப்பதாகிய சுருதி யுத்தி அனுபவமாதலானும் அவற்றுள் சுருதி ரூபமாயிருப்பது கல்வி யாதலானும் அத்தகைக் கல்வியைக் கற்றுங்கூட ஆன்மாக்கள் அபக்குவர்களாய்

கற்பிதமான இம் மாயப்பிரபஞ்சத்தில் 'கண்டது காட்சி கொண்டது கோலம்' என மயங்கித் துன்பத்தை இன்பமென மருண்டு ஓயாது பிறந்திறந்துழன்று நாசமடைகின்றாராதலானும் ஈங்கே 'கற்றதினாலாய பயனென் கொல்' என வியப்புறத் திடுக்கிடக் கூறுவாரானார். 'கொல்' என்னும் இடைச் சொல்லை வேறு பொருளின்றி நிற்குமோர் அசை நிலை எனத் தள்ளி விடாமல் புதியது புகுதல் என்னும் உத்தியால் வியப்புப் பொருள் தரவந்ததெனக் கொள்ளுதல் சாலச் சிறக்கும் என்ப. (உ)

மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ்வார்.

பதவுரை.

மலர்மிசை —(அன்பரது நெஞ்சமாகிய) தாமரை மலரிடத்து

ஏகினான் —சென்றவனது

| | |
|---|---|
| மாணடி | —பெருமை பொருந்திய வடி |
| சேர்ந்தார் | —சேர்ந்தவர் [களை |
| நிலமிசை | — எல்லாவுலகங்களுக்கும் மே [லாகிய உலகத்திலே |
| நீடுவாழ்வார் | — அழிவில்லாமல் வாழ்வார். |

(கருத்து) கடவுளடிகளைச் சேர்ந்தவர்கள் மோட்சத்தில் வாழ்வார்கள் என்பதாம்.

மலர்போலு நெஞ்சை மலரென்றது உவமையாகுபெயர். அன்பினாலே நினைப்ப நெஞ்சில் அவர் நினைத்த வடிவோடு விரை செல்லுதலினாலே ஏகினானென இறந்தகாலத் தாற் சொல்லினார். இது விரைவு பற்றி வந்த காலவழுவமைதி. சேர்தல் — இடைவிடாது நினைத்தல்.

## விசேட ஞானவிருத்தி.

பரிபூரணமாய் எங்கும் நிறைந்து நிற்கின்ற பாரமார்த்திக சுத்த சைதன்னிய நித்திய

வஸ்துவை அது இது என்று சுட்டிக்கூற முடியாதாதலாலும் பரமான்மா, பரிபக்குவமடைந்த ஒரு சீவான்மாவை நோக்கித் தமது பரிபூரண வியாபகந் தோன்றப் "பலவினியுரைத் தென் இந்தப் பல்லுயிரனைத்தும் எல்லா உலகமும் ஒடுங்கி நிற்ப தென்னிலோரிடத்திலுன்னே" என்று கூறியருள் அதற்கந்தச் சீவான்மா தமது பரிபூரண வியாபகமுந் தோன்ற "இலை இலை நீயும் நின்பால் இலங்கிய உலகும் என்றன் அலகிலா உளத்திலாங்கோர் அணுவெனு மிடத்திலுள" என்று கூறியருளினாராதலாலும் பசுவினிடத்து அதன் உடம்பு முழுதினும் பால் மயமாயினும் அதன் மடியினிடத்தே தான் பாலெனச் சுரத்தல் போல் அன்பரிடத்து அவர் உடம்பு முழுதினும் கடவுள் மயமாயினும் அவரது உள்ளத்தினிடத்தேதான் கடவுளென அமர்ந்திருந் தருள் சுரக்கின்றா ராதலாலும் நாயனாரும் கடவுளை "மலர்மிசைஏகினான்" என்று சுட்டிக் கூறியருளினார் என்ப "அன்ப

ராய்த்தனை நினைபவர்க்கத்திருக்குறளும் இன்ப நாடகத்திறை” என்றார் கைவல்லிய உரையாசிரியராகிய பொன்னம்பல சுவாமிகளும். [௩]

வேண்டுதல்வேண்டாமையிலானடி சேர்ந்தார்க்
கியாண்டு மிடும்பை யில.

பதவுரை.

வேண்டுதல் —(யாதொரு பொருளையும்)
வேண்டாமை —வெறுத்தலும் [விரும்புதலும்
இலான் —இல்லாதவனது
அடி —அடிகளை
சேர்ந்தார்க்கு —சேர்ந்தவர்க்கு
யாண்டும் —எக்காலத்திலும்
இடும்பை —பிறவித்துன்பங்கள்
இல —உண்டாவனவல்ல

(கருத்து) கடவுளடிகளைச் சேர்ந்தவர்களுக்குப் பிறவித்துன்பங்களில்லை என்பதாம்.

பிறவித் துன்பங்களாவன:— தன்னைப் பற்றி வருவதும், பிறவுயிரைப் பற்றி வருவதும், தெய்வத்தைப்பற்றி வருவதும் என மூவகையால் வருகிற துன்பங்களாம். அடி சேர்ந்தார்க்கு அவ்விருப்பு வெறுப்புகள் இல்லாமையால் அவை காரணமாக வருகிற மூவகைத் துன்பங்களும் இல்லையாயின.

## விசேட ஞானவிருத்தி.

மேகமானது ஒரு வித்துவினிடத்து விருப்பில்லாமலும் ஒரு வித்துவினிடத்து வெறுப்பில்லாமலும் சமமாக வருஷிப்பது போலவே ஈஸ்வரனும் ஓர் ஆன்மாவினிடத்து விருப்பில்லாமலும்ஓர்ஆன்மாவினிடத்துவெறுப்பில்லாமலும்சமமாகவேசிருஷ்டிக்கின்றாராதலானும் அங்ஙனமாக ஒருவர் தனவந்தராயும் ஒருவர் தரித்திரராயும் ஒருவர் புத்திமானாயும் ஒருவர் அபுத்திமானாயும் ஒருவர் ஆனந்திப்பவராயும் ஒருவர் துக்கிப்பவராயும் ஒருவர்

புண்ணியவானும் ஒருவர் மகாபாவியாயும் ஒருவர் அழகிய ரூபராயும் ஒருவர் ஆபாச ரூபராயும் இவ்வாறு பேதப்பட்டுழலுதலுக்குக் காரணம் பட்டுநூற்கிருமியானது தன் வாயாலேயே நூல் நூற்றுப் பின்னர் அந்த நூலினாலேயே தான் கட்டுண்டு வருந்தி மாண்டொழிவது போல ஆன்மாக்களும் தங்கள் தங்கள் வினைப் பயனாகிய புண்ணிய பாவங்களில் கட்டுண்டு ஸ்தூல சரீராபிமானராய் ஜீவனென்னும் பெயருடையராய்ப் பிரகிருதியினாலேயே ஈஸ்வரனைத் தன்னினும் வேறென மதித்து அவித்தையாகிய உபாதியுடையராய் மருண்டு பிறந்திறந்துழல்கின்றாராதலானும் இம்மருள் நீங்காத வரையிலும் ஜனன மரண சம்ஸாரபந்தம் ஆன்மாக்களைவிட்டு நீங்குவதில்லையாதலானும் ஈஸ்வரனது பாரபட்சமற்ற சிருஷ்டி மகத்துவத்தை உணராத ஆன்மாக்கள் அவரது சிருஷ்டி 'விஷம சிருஷ்டி' என்று வெறுப்பாராயின்

"இந்தச் சீவனால் வருமாறு பலனை யெலாமிவன்
செயலென்னாமல் அந்தத்தேவனால் வருமென்ற
மூடர்கள் அதோகதி யடைவார்கள்" என்ற
படி நரக முதலிய நானாவிதத் துன்பங்களை
அவர்கள் அடைவாராதலாலும் ஆன்மாக்கள்
கடைத்தேறும் பொருட்டு ஈஸ்வரனது சர்வஞ்
ஞத்துவ கல்யாண குண சிருஷ்டி மகத்துவம்
துலங்கவே இங்ஙனம் "வேண்டுதல் வேண்டா
மை இலான்" என்று ஈஸ்வரனது குண விசே
டங்களைக் கூறி யருளினா ரென்ப. (௪)

இருள்சேர் இருவினையுஞ் சேரா விறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

பதவுரை.

இறைவன் —தலைவனது
பொருள்சேர் —மெய்ம்மை சேர்ந்த
புகழ் —கீர்த்தியை
புரிந்தார்மாட்டு —விரும்பினவரிடத்து

இருள்சேர் —மயக்கத்தைப்பற்றி வருகிற
இருவினையும் —(நல்வினை தீவினை யென்னும்) இரண்டு வினைகளும்
சேரா —உண்டாகாவாம்.

(கருத்து) கடவுளுடைய கீர்த்தியை விரும்பினவரிடத்து நல்வினை தீவினை யென்னுமிரு வினைகளும் அடையா என்பதாம்.

இப்படிப் பட்டதென்று ஒருவராலும் சொல்லப்படாமையால் அஞ்ஞானத்தை இருளென்றும், நல்வினையும் பிறத்தற்கு ஏதுவாதலால் அதனையும் கூட்டி இருவினையும் சேராவென்றும் சொல்லினர்.

தலைமைக் குணங்களில்லாதவரை உடையரென்று நினைத்து அறிவிலார் சொல்லுகிற புகழ் பொருள் சேராதாகலின் அவை முழுதுமுடைய தலைவனது புகழ், பொருள் சேர் புகழெனப்பட்டது. புரிதல் எப்பொழுதும் சொல்லுதல் என்னும் பொருளது.

## விசேஷ ஞானவிருத்தி.

"பொருள் சேர் புகழ் புரிந்தார் மாட்டு" என்றாராதலின் புகழ், துதி, கீர்த்தி என்பன ஒரு பொருட் சொற்களானதால் ஈஸ்வரனது பரிபூரண நித்தியத்துவ சச்சிதானந்த சாட்சாத்கார வைபவ குணங்களாகிய கீர்த்திப் பிரபாவங்களை மனதினால் தியானித்து, வாக்கினால் துதித்து, தேகத்தினால் ஆராதனை முதலியன புரிந்து, சமம், தமம், உபரதி, திதிட்சை, சிரத்தை, சமாதானம், மூட்சுத்துவம் என்கிற சமாதி சாதன சம்பத்தியாகிய தம்மையுமார் என்று உன்னே நாடுகின்ற தத்துவஞான அக்கினியானது காட்டினிடத்தே அமோகமாகப் பற்றி எரியும் அக்கினி அக்காட்டிலுள்ள சர்வ மரங்களையும் எரித்துச் சாம்பராக்குவதுபோல் சிருஷ்டி காலந்தொடங்கிப் பிறவிக்குக் காரணமாக இருந்துவருகின்ற நல்வினை தீவினை என்கிற இரண்டு வினைகளையும் எரித்துச்

சாம்பராக்கிவிடுமாதலால் அதனை "இருள்சேர் இருவினையும்சேரா" என்றுங் கூறினரென்ப. இதனைப் பகவான் பார்த்தனுக்குரைத்த உபதேசத்தில் "குறியால் வருகுண ஞானமெயனலே கொள விடுமேல், பொறியால் வருவினையானவை பொடியா மிதொர் பொருளே" என்று உபதேசித்தவாற்றுலு முணரலாம் (ரு)

பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீ ரொழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்.

பதவுரை.

பொறிவாயில் —(மெய், வாய், கண், மூக்குச் செவி என்னும் ஐம்பொறிகளை வழிகளாக வுடைய

ஐந்து —ஐந்தாசைகளையும்

அவித்தான் —அறுத்தவனது

பொய்தீர் —மெய்யான

ஒழுக்கநெறி —ஒழுக்க வழியிலே

நின்றார் — (வழுவாது) நின்றவர்
நீடுவாழ்வார் — பிறப்பில்லாமல் எக்காலத்திலும் ஒரு தன்மையராய் வாழ்வார்.

(கருத்து) கடவுள் வழியிலே நின்றவர்கள் நீடூழிவாழ்வார்கள். என்பதாம்.

ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஓசை எனப் புலன் ஐந்தாகலின் அவற்றிலே செல்லுகிற ஆசையும் ஐந்தாயிற்று. ஐந்தவித்தான் ஒழுக்க வழி அவனாற் சொல்லப்பட்ட வேதமார்க்கம். இவை நான்கு பாட்டாலும் கடவுளை நினைந்தோரும், வாழ்த்தினோரும், அவன் வழி நின்றோரும், மோட்சத்தைப் பெறுவரென்பது சொல்லப்பட்டது.

## விசேஷ ஞானவிருத்தி.

தண்ணீரினுள் பிரதிபலிக்கின்ற சூரியனது பிரகாசமான சாயையானது அத்தண்ணீர் சலனமடையும்போது தானும் சலன

மடைவதாயினும், எதார்த்தமான சூரியன் ஆங்கே சலனமடைவதில்லையாதல் போன்று இங்குப் பாரமார்த்திக சுத்த சைதன்னிய வஸ்துவாகிய பிரமமும் தமது மாயை என்கிற தண்ணீரினுள் பிரதிபலித்து ஆன்மாக்களாகச் சத்த பரிச ரூப ரஸ கந்தமென்கிற அலைகளால் மொத்துண்டு சலனமடைகின்றன போல் தோற்றப்படுவதன்றி எதார்த்தமான பிரமத்திற்கு அதனால் யாதொருசலனமும் இன்றாதலால் ஈஸ்வரனைப் "பொறிவாயில் ஐந்தவித்தான்" என்று சுட்டியும், ஈஸ்வரன் ஆன்மாக்களினது முமூட்சுத்வத்தின்பொருட்டே வேதாகமநியமங்களை ஆக்கியருளி யிருத்தல் பற்றி அவற்றைப் "பொய்தீர் ஒழுக்க நெறி" என்றும் அவற்றில் நியமித்துள்ளபடி நடந்துவரும் ஆன்மாக்களை "நெறி நின்றார் நீடுவாழ்வார்" என்றும் விளக்கிக் கூறியருளினரென்ப. (௬)

தனக்குவமை யில்லாதான் றாள்சேர்ந்தார்க் கல்
மனக்கவலை மாற்ற லரிது. [லான்

பதவுரை.

| | |
|---|---|
| தனக்கு | —தனக்கு |
| உவமையில்லாதான் | —(ஒருவிதத்தினாலும் நிக [ரில்லாதவனது |
| தாள் | —அடிகளை |
| சேர்ந்தார்க் கல்லால் | —சேர்ந்தவர்க் கல்லது |
| மனக்கவலை | —நெஞ்சிலே தோன்றுகின்ற துன் [பங்களை |
| மாற்றல் | —நீக்குதல் |
| அரிது | —முடியாது |

(கருத்து) கடவுளுடைய திருவடியைச் சேராதவர்களுக்கு மனக்கவலை நீக்குதலில்லை என்பதாம்.

இங்கே அரிது இல்லை யென்னும் பொருளில் வந்தது. மனக்கவலை என்பது அடிகளைச் சேராதவர் பிறவிக்கு ஏதுவாகிய காமவெகுளி மயக்கங்களை நீக்கமாட்டாமையினாலே பிறந்தும், இறந்தும், அவற்றால் வருகிற துன்பங்களுள் அழுந்துவா ரென்பதாம்.

## விசேஷ ஞானவிருத்தி.

சுத்த சைதன்னிய பிரமவஸ்துவாகிய சர்வ சாட்சியினிடத்திலே அக்கினியிற் சூடு போல அபின்னமாக ஒரு சக்தியிருந்து அந்தச் சத்தி அதீதப் பிரமத்திலடங்கியிருக்கும்போது சுத்தப் பிரமமெனப் பெயர்பெற்று ஆரோபமாக விசிரிம்பித்த போது சுத்தப் பிரமத்தை வியாபித்து பரை வியாபகத்திலிருந்து பரப் பிரமமெனப் பெயர்பெற்று ஆங்கே இலட்சணை சூனியமாயிருக்கின்ற பரை யென்னும் இச்சத்திக்குப் பிரமத்தினுடைய சந்நிதானத்தில் புருஷ சமுகத்திலே ஸ்திரீக்கு இன்பம் சனித்தாற்போல அவிகிருதமான (வேறுபடாத) சத்வ ரஜஸ் தமோகுணங்க ளுண்டாய் அக்குணங்களுள் சத்துவத்தில் சத்துவம் பிரதானமாகும்போது அதிற் பிரதிபிம்பித்த ஈசுரன் ஜகத்தை ரட்சித்தலால் விஷ்ணுவாயும், சத்துவத்தில் இராசதம் பிரதானமாகும்போது அதிற்

பிரதிபிம்பித்த ஈசுரன் ஜகத்தைச் சிருஷ்டித்தலால் பிர்மாவென்றும், சத்துவத்தில் தாமதம் பிரதானமாகும்போது அதிற் பிரதிபிம்பித்த ஈசுரன் ஜகத்தைச் சங்காரம் பண்ணுதலால் உருத்திரனென்றும் பெயர் பெறுவதன்றி அச் சர்வ சாட்சிக்கு மேற்பட்ட வஸ்து ஒன்றின்மையென்பது பிரபஞ்சத்தோற்றக்கிரமம்பற்றி ஈண்டு அப் பிரமவஸ்துவைத் "தனக்குவமையில்லாதான்" என்று சுட்டினாரென்ப. (எ)

அறவாழி அந்தணன் றாள்சேர்ந்தார்க் கல்லாற்
பிறவாழி நீந்த லரிது.

பதவுரை.

அறவாழியந்தணன் —தருமக் கடலாகிய கடவுளது
தாள் —அடியாகிய (மரக்கலத்தை)
சேர்ந்தார்க்கல்லால்—சேர்ந்தவர்க் கல்லாமல்
பிறவாழி —(அதனின்) வேறாகிய கடல்களை

நீந்தல் — கடத்தல்
அரிது — கூடாது

(கருத்து) கடவுளடிகளைச் சேராதார்க்குப் பொருளும் இன்பமுமாகிய கடல்களைக் கடத்தல் கூடாது என்பதாம்.

அறம்பொருளின்பமெனவுடனெண்ணப்பட்ட மூன்றுள், அறத்தை முன் பிரித்ததனால் மற்றைப் பொருளும் இன்பமும் பிறவெனப்பட்டன. பலவேறு வகைப்பட்ட அறங்களெல்லாம் கடவுளுக்கு வடிவாகலின் அறவாழி அந்தணனென்றார். அம்மரக்கலத்தைச் சேராதவர் கரைகாணாது அவற்றுள்ளே அழுந்துவாராகலின் நீந்தலரிதென்றார், தாட்புணை யென்னுமையால் இது ஏக தேசவுருவகம்.

விசேஷ ஞானவிருத்தி.

ஆன்மாக்கள் இன்பத்தை அனுபவிக்கும் பொருட்டே இரவும் பகலுமா யுழைத்துப் பணத்தைச் சம்பாதிக்கின்றாராதலாலும் அவ்

வாறு சம்பாதிக்கும் பணத்தைக்கொண்டு தாம் இன்பமனுபவித்தலோடு நின்றுவிடாமல் பிறவிக்கடலைக் கடந்து ஜீவப்பிரம ஐக்கிய நிலையை அடைவதற்குச் சாதனமாகிய அறத்தைப் புரிந்தே அதன்வழி வீடுபெற வேண்டியிருத்தலானும் பிரம்மத்துக்கு வடிவம் அன்பென்றும் அவ் அன்பின் வழியே ஆற்றுகின்ற அறமென்றும் வேதாகமங்கள் நிரூபகஞ் செய்கின்றபடியானும் ஈண்டு அறத்தின் பெருமை இன்னதென்று தோன்றப் பிரமத்திற்கு வடிவு அறமேயென நிறுவித்து அதனை ஆழியென உருவகித்து மற்றைப் பொருள் இன்பம் முதலிய அனைத்தையும் பிற என்பதனுள் அமைத்து அவற்றின் ஆசைபற்றி உழலும் ஆன்மாக்களுக்கு ஓய்வின்றாதலின் அவற்றையும் ஆங்கே ஆழி என உருவகப்படுத்தி விளக்கினரென்ப. இதனை "ஈதலறம் தீவினைவிட்டீட்டல் பொருள் எஞ்ஞான்றும் காதலிருவர் கருத்தொருமித் —தாதரவு பட்டதே இன்பம்

பரனை நினைந் திம்மூன்றும் விட்டதே பேரின்ப வீடு" என்ற ஔவைப் பிராட்டியார் திருவாக் காலும் அறிந்துகொள்ளலாம். (அ)

கோளில் பொறியிற் குணமிலவே யெண் குணத்
தான்றாளை வணங்காத் தலை

பதவுரை.

கோளில் —(தத்தமக்கேற்ற புலன்களைக்) கொள்ளுதலையில்லாத
பொறியின் —பொறிகள்போல்
எண் குணத்தான் —எண்வகைப்பட்ட குணங்களையுடையவனது
தாள் —அடிகளை
வணங்காத்தலை —தொழாத தலைகள்
குணமிலவே —பயன்படுதலுடையனவல்லவேயாம்.

(கருத்து) கடவுள் பாதங்களை வணங்காத் தலைகள் பயன்படாவாம் என்பதாம்.

எண் குணங்களாவன, தன் வயத்தனாதல், தூய உடம்பினனாதல், இயற்கையுணர்வின னாதல், முற்று முணர்தல், இயல்பாகவே பாசங்களினீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்ப முடைமை என்பனவாம். இவை சைவாகமத்திற் சொல்லப்பட்டன. காணாத கண் முதலானவைபோல் வணங்காத தலைகள் பயனிலவெனத் தலைமேல் வைத்துச் சொல்லினும் இனம்பற்றி வாழ்த்தாத நாக்களும் அப்படியே ஈண்டுப் பயனிலவா மென்பதுங்கொள்க.

இவை மூன்றுபாட்டாலும் அவனை நினைத்தலும், வாழ்த்தலும், வணங்கலும் செய்யாவிடத்தே உண்டாகிற குற்றஞ்சொல்லப்பட்டது.

## விசேஷ ஞானவிருத்தி.

தனுகரண புவனபோக மென்பன நான்கினுள் தனு என்கிற சரீரத்தினிடத்துக்கரணம் என்கிற உள்ளம், மனம், புத்தி, சித்தம், அகங

காராதிகள் பொறி என்கிற மெய், வாய், கண், மூக்குச, செவி வழியாகப் புலன் என்கிற சப்த ஸ்பரிச, ரூப, ரஸ, கந்தங்களை ஏற்றுப் புவன மென்கிற உலகத்தினிடத்து போகமென்கிற சுக துக்கங்களை அனுபவிப்பதற்காகவே, ஈஸ்வரன் ஆன்மாக்களுக்காகத் தூச்சிலே (தனுவை) அமைத்தருளி அதன் தலையினிடத்தேயே மேற் கூறிய பொறி புலன்களையும், அவற்றின் தத்துவங்களை உணர்த்தும் அறிவையும் பொருந்துமாறு செய்துளா ராதல்பற்றி அந்நன்றியை ஆன்மாக்கள் ஈஸ்வரன்பால் செலுத்தி, அவனது திருவடிகளை அத்தலையாலேயே வணங்க வேண்டுமென்கிற சிறப்புத் தோன்ற "எண் குணத்தான் றளை வணங்காத்தலை" என்றும் அவ்வாறு வணங்காவிடில் அத்தலைகள் பொறிகளின் வழிப் புலன்களை அனுபவித்தும் பயனின்றாகிப் பிறப்பிறப்புக்களை உண்டாக்கிக் கொண்டிருத்தல் பற்றிக் "கோளில் பொறியின் குணமிலவே" என்றும் கூறியருளினு

ரென்ப. இதனை "எண்சாண் உடம்பிற்குச சிரசே பிரதானம்" என்கிற முதுமொழியானும் "தலையே நீ வணங்காய்" என்கிற திருநாவுக்கரசு நாயனு ரருளிச்செய்த திருவங்க மாலைப் பாசுரத்தானும் அறியலாம். (க)

பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தார்
இறைவ னடிசேரா தார்.

பதவுரை.

இறைவன் — தலைவனது
அடி — பாதமாகிய மரக்கலத்தைச் (சேர்ந்தவர்)
பிறவிப் பெருங்கடல் — பிறவியாகிய பெரிய [கடலை
நீந்துவர் — கடப்பார்
சேராதார் — (அதனைச்) சேராதவர்
நீந்தார் — (அக்கடலைக்) கடக்கமாட்டார்

(கருத்து) கடவுள் பாதங்களைச் சேர்ந்தவர்கள் பிறவிக்கடலைக் கடப்பார்கள், சேராதவர்கள் பிறவிக்கடலைக் கடக்கமாட்டார்கள் என்பதாம்.

சேர்ந்தவரென்பது வருவிக்கப்படுதலால் ஈங்கிது சொல்லெச்சம் எனப்படும்.

பிறவி ஒன்றுக்கொன்று காரண காரிய சம்பந்தப்பட்டுக் கரையில்லாமல் வருதலால் பிறவிப் பெருங்கடலென்றூர்.

கடவுளடிகளேயே நினைப்பவர்க்குப் பிறவி நீங்குதலும் உலகியல்பை நினைப்பவர்க்கு அது நீங்காமையும் ஆகிய விரண்டும் இதனுல் நியமிக்கப் பட்டன.

## விசேஷ ஞானவிருத்தி.

சமுத்திரமானது தன்னிடத்திலிருந்து தன்னையே தஞ்சமென்று நினைத்துத் தன்னிடத்திலுள்ள ஜீவராசிகளையே கொன்று தின்று ஜீவித்துவருகிற திமிங்கிலம், மீன் முதலிய ஜலராசிகளுக்கு மாத்திரம் தான் இடங்கொடுத்துக்கொண்டு, தன்னைவிட்டு நீங்கி அக்கரை சேரவேண்டுமே என்று எண்ணி அக்கரையுடன் தன்னைவிட்டு நீந்திச செல்லுகின்ற

கப்பல் தோணி முதலிய மரக்கலங்களைத் தானும் அவற்றிற்கு உதவிபுரிந்து அக்கரையிற் கொண்டு சேர்க்கின்றதுபோன்று, பிரபஞ்ச மாகிய இப்பிறவிச் சமுத்திரமும் தன்னிடத் திலிருந்து தன்னையே தஞ்சமென்றடைந்து தன்னிடத்துள்ள வல்துக்களையே கொன்று தின்று ஜீவித்து வருகிற தனுராசிகளாகிய ஆன்மாக்களுக்கு மாத்திரம் தான் இடங் கொடுத்து அவற்றைப் பிறப் பிறப்புக்களில் உழலுமாறு செய்வித்துக்கொண்டு, தன்னை விட்டு நீங்கி இறைவனடியாகிய அக்கரை சேர வேண்டுமே என்று எண்ணி அக்கரையுடன் தன்னை விட்டு நீந்திச்செல்லுகிற ஆன்மஞான முடையவர்களைத் தானும் அவர்கட்கு உதவி புரிந்து சாட்சாத்காரமாகிய இறைவன் திருவடி என்கிற அக்கரையிற்கொண்டு சேர்க்கின்ற ,டியால் ஈண்டுப் பிறவிப் பெருங்கடல் நீந்து பவர்களை "இறைவனடி சேர்ந்தார்" என்றும் அவ்வாறு நீந்தாத மந்தமதி யுடையவர்களை

"இறைவனடி சேராதார்" என்றும் விளக்கியருளினரென்ப. இதனை "நரகந்தரம்புவி இம்மூன்றிடத்து நனிமருவு நரகந்தரங்கித்து வேங்காலற் கஞ்சுவர் நாயகவா நரகந்தரம் புட் பிடரே றரங்கர்நல் லாய்க்குலத்தி நரகந் தரங்கமுற் றூரடியார்க்கு நமனஞ்சுமே" என்னும் திவ்யகவி பிள்ளைப்பெருமாளையங்கார் அவர்கள் பாசுரத்தானும் உணரலாம். (கо)

முதலதிகாரம் கடவுள் வாழ்த்து முற்றிற்று.

## 3-ம் அதி. நீத்தார் பெருமை.

அஃதாவது முற்றத்துறந்த முனிவரது பெருமையைச் சொல்லுதலாம். அற முதலாகிய பொருள்களை உலகத்துக்கு உள்ளவாறு அறிவிப்பவர் அவராதலால் இது வான்சிறப்பின் பின் வைக்கப்பட்டது.

ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவற் றுணிவு.

பதவுரை.

பனுவல் —நூல்களது
துணிவு —நிச்சயமானது
ஒழுக்கத்து--(தமக்குரிய) ஒழுக்கத்திலேநின்று
நீத்தார் —துறந்தவரது
பெருமை —மகிமையை
விழுப்பத்து—மேலானபலபொருள்களுள்ளும்
வேண்டும்-இதுவே மேலானதென்றுவிரும்பும்

(கருத்து) நூல்களது நிச்சயமானது துற ந்தவர் மகிமையை மேலானதென்று விரும்பும் என்பதாம்.

தமக்குரிய ஒழுக்கத்திலே நின்று துறந்த வது தங்கள் தங்கள் வருணாசிரமங்களுக்கு ரிய ஒழுக்கங்கள் தப்பாமல் நடக்கப் புண்ணி யம் வளரும், அதுவளரப் பாவம்தேயும், அது

தேய அறியாமை நீங்கும், அது நீங்க இது நித்தியம் இது அநித்தியம் என்கிற பகுத்தறிவும் நிலையில்லாத இம்மை மறுமை இன்பங்களில் வெறுப்பும் பிறவித் துன்பங்களும் தோன்றும்; அவைதோன்ற மோட்சத்தில் ஆசை உண்டாம், அது உண்டாகப் பிறவிக்குக் காரணமாகிய வீண் முயற்சிகளெல்லாம் நீங்கி மோட்சத்துக்குக் காரணமாகிய யோகமுயற்சி உண்டாம். அது உண்டாகத் தத்துவஞானம் பிறந்து எனதென்பதாகிய மமகாரமும் நானென்பதாகிய அகங்காரமும் விடும். ஆதலின் இவ்விரண்டு பற்றுக்களையும் இம்முறையே வெறுத்து விடுதலாம். நூல் செய்தவாது துணிவு அவரவர்கள் அருளிய நூலின்மேல் ஏற்றப்பட்டது.

## விசேஷ ஞானவிருத்தி.

ஆன்மாக்களது ஜன்மாந்தரங்களின் தமாதர்ம சம்ஸ்காரங்களை முன்னிட்டுச் சத்துவகுணப் பிரதானர் பிராமணர் என்றும், சிறிது

சத்துவகுணங்கலந்த ரஜோகுணப் பிரதானர் சத்திரியர் என்றும், சிறிது தமோகுணங் கலந்த ரஜோகுணப் பிரதானர் வைசியர் என்றும், சிறிது ரஜோகுணங்கலந்த தமோ குணப் பிரதானர் சூத்திரர் என்றும் வகுத்து அவற்றை வருணாசிரம தருமம் என நிறுவித்து, அவ்வருணாசிரம தரும முறைப்படி அவரவர் களுடைய சுபாவீக கர்மானுஷ்டானங்களை முறையே புரிந்து துறவுபெறவேண்டுமென்று வேதம் விதிக்கின்றதாதலானும் அதனை ஆமோ தித்து அவ்வாறு விதித்திருக்கிற வருணாசிரம முறைப்படி துறவடைந்தாரே ஜீவன்முத்தர்க ளாய் ஐக்கியம் பெறுவார்கள் எனப் பகவான் அர்ஜுனனுக்கு உபதேசித்திருக்கின்றா ராத லானும ஈண்டு நாயனாரும் அவ்வுண்மை தோன்ற "ஒழுக்கத்து நீத்தார்" என்றும் இவ் ண்மை ஈஸ்வர சங்கற்பமாகிய வேதாகம ழுவேயன்றி சாதாரணமான தன்றென்பது ்தோன்ற பனுவற்றுணிவு என்றும் கூறியருளி

னாரென்ப. இதனைத் "தீராவகைதஞ் செயலே செயவே நாராயணனா முதனாயகனுக் காராத னையா மதனாலவனே வாராவழியாம் வரமே தருமால்" என்ற பகவற்கீத மகாவாக்கியத் தினாலும் அறியலாம். (க)

துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்
திறந்தாரை யெண்ணிக்கொண் டற்று.

பதவுரை.

துறந்தார் —(அகங்கார மமகாரங்களை)
பெருமை —மகிமையை [விட்டவரது
துணைக்கூறின் — எண்ணிக்கையினாலே
சொல்லி அறியப்புகுந்தால்
(அளவு படாமையால்)
வையத்து —இவ்வுலகத்திலே
இறந்தாரை —(பிறந்து) இறந்தவரை

எண்ணிக்கொண்டற்று —எண்ணி (இத்தனை
பேர்களென்று) அறியப்
புகுந்தாற்போலும்

(கருத்து) துறந்தவர் பெருமையைச்சொல்லில் இறந்தவர்களை எண்ணிக்கொண்டாற் போலும் என்பதாம். கொண்டாலென்பது கொண்டெனத் திரிந்து நின்றது.

விசேஷ ஞானவிருத்தி.

வெட்டவெளியான ஆகாசத்தின்கண் ஒன்றுமில்லையாயினும் ஆங்குப் பல வர்ணங்கள் அமைந்த மேகங்கள் முதலியன அடுக்கடுக்காகத் தோற்றப்படுவனபோல் சுத்த வஸ்துவாகிய அதிட்டானத்தில் இல்லாமலே அநாத்துமாக்களுக்கு மூலமாயும், அஞ்ஞான ஸ்வரூபமாயும், பிரமாண அப்பிரமாணங்களுக்குப் [illegible]ாதுவாயும், ஜெகதாகாரமாய்ப் பரிணமித்திருக்கிறதாயுமாயுள்ள மாயையிற்கட்டுண்டு மாடு மனை வீடு வாச லென மயங்கிச் சிருஷ்டி

காலந்தொடுத்துப் பிறந்திறந்து உழலுகின்ற அமோகமான ஆன்மாக்களை எண்ணிக் கணக்கிடமுடியாததுபோலவே கான்படு வலையினின்று மான் விடுபட்டவாபோல்மாயையினின்று விடுபட்டுத் துறவடைந்த ஏகதேசமான ஆன்மாக்களையும் எண்ணிக் கணக்கிட முடியாதென்று அஞ்ஞானத்தில் அழுந்திக்கிடந்து உழல்கின்ற ஆன்மாக்களது இழிவுதோன்றவும் அதனைவிட்டு நிவர்த்திபடைந்த ஆன்மாக்களது உயர்வு தோன்றவும் ஈண்டுத் துறந்தார் பெருமைக்குப் பிறந்திறந்தார் எண்ணிக்கையை நாயனார் எல்லைகாட்டிக் கூறினாரென்ப. இதனை "அஞ்ஞானி ஆயிரம்பேர் இருந்தாலும் மோர் அறிவறிந்த ஞானிக்கிங் கவராவாரோ" என்ற சிவப்பிரகாச சுவாமிகள் திருவாக்கானும் துறவிக்கு வேந்தன் துரும்பு" என்ற முதுமொழியானும் உணரலாம். (உ)

இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற் றுலகு.

பதவுரை.

இருமை —(பிறப்பு வீடென்னும்) இரண் [டனது
வகை —(துன்ப வின்பக் கூறுபாடுகளை
தெரிந்து —ஆராய்ந்து (அப்பிறப்பை நீக்கு
ஈண்டு —இப்பிறப்பிலே [தற்கு)
அறம் —துறவறத்தை
பூண்டார் —கொண்டவரது
பெருமை —மகிமையே
உலகு —உலகத்தில்
பிறங்கிற்று —உயர்ந்தது

(கருத்து, துறவறத்தைக் கொண்டவரது
ருமையே இவ்வுலகிலுயர்ந்தது என்பதாம்.

பெருமையே என்பதின் ஏகாரம் விகாரத்
தால் தொக்கது அது உலகமுழுதாண்ட

வரசர் முதலானவருடைய பெருமையைப் பிரித்தலாற் பிரிநிலை ஏகாரம் எனப்படும்.

இவை மூன்றுபாட்டானும் துறந்தவரது பெருமையே எல்லாப் பெருமைகளினும் உயர்ந்ததென்பது சொல்லப்பட்டது.

## விசேஷ ஞானவிருத்தி.

மரம் புல் முதலிய ஓரறிவுயிர்களும், சிப்பி சங்கு முதலிய ஈரறிவுயிர்களும், சிதல் எறும்பு முதலிய மூவறிவுயிர்களும், தும்பி வண்டு முதலிய நாலறிவுயிர்களும், விலங்கு புள் முதலிய ஐயறிவுயிர்களும் நன்மை இன்னது தீமை இன்னது எனப் பகுத்துணர் தற்கேற்ற பகுத்தறிவற்றனவாதலால் அவற்றை நீக்கி ஐயறிவோடு அப் பகுத்தறிவையும் ஒருங்குபெற்றிருக்கிற மானிட தேகத்தைத் துச்சிலாக்கொண்டுள்ள ஆன்மாக்களுக்கே பந் மோட்சமென்கிற இரண்டினது துன்பவின்

பங்களின் கூறுபாடுகளை ஆராய்ந்தறிதற்கேற்ற சக்தியுளதாதல்பற்றி "ஈண்டு" என இப்போக பூமியிற் பிறந்த மானிடப் பிறவியை விசேடமாகச் சிறப்பித்தும், இம்மானிடப் பிறவிக்கேயன்றி மற்றைத் தேவர் நரகர் முதலிய எப்பிறவிக்கும் பந்தமோட்சப் பாகுபாடுணர்ந்து, ஜீவபரம ஐக்கிய நிலைபெறுதற் கேதுவின்றாதல்பற்றி "இருமை வகை தெரிந்து" என்றும் இம்மானிடப் பிறவியினும் காட்சியும் காண்பானும் தானே தானாயத் துவைத பேதமற்று, அத்வைதமுற்று ஆன்மஞானமடைந்த துறவிகளே உலகில் என்றும் நின்று பொன்றாப் புகழடைந்தாராதல்பற்றி "பெருமை பிறங்கிற்றுலகு" என்றும் கூறியருளினாரென்ப. இதனை "எண்ணரிய பிறவிதனில் மானிடப் பிறவிதானியாகினும் அரிதரிது காண்" என்ற தாயுமான சுவாமிகள் வாக்கானும் உணரலாம். (௩)

மறைமலையடிகள் நூல் நிலையம்
MARAIMALAI ADI...

உரனென்னுந்தோட்டியானோரைந்துங்காப்பான்
வரனென்னும் வைப்புக்கோர் வித்து.

பதவுரை.

உரனென்னுந் தோட்டியான் — அறிவென்னும் அங்குசத்தினாலே

ஓரைந்தும் — பொறிகளாகிய யானைகள் ஐந்தையும்

காப்பான் — தன் தன் புலன்களின் மேல் செல்லாமல் காப்பவன்

வரனென்னும் வைப்புக்கு — எல்லா நிலங்களினும் மேலானதென்று சொல்லப்படுகிற மோட்ச நிலத்துக்கு

ஓர் வித்து — ஓர் வித்தாவன்

(கருத்து) ஐம்பொறிகளை ஐம்புலன்களிற் செல்லாமற் காப்பவன் மோட்ச நிலத்துக்கு வித்தாவான் என்பதாம்.

அந்நிலத்திலே போய் முளைத்தலின் வித்தென்றார். இங்கே பிறந்தும் இறந்தும் வருகிற மனிதனல்லனெனப் பகுப்பதால் இது ஏகதேச வுருவகவணியின் பாற்படும். (௪)

## விசேஷ ஞானவிருத்தி.

அறிவை அங்குசமென உருவகித்தாரானது பற்றி ஈண்டு ஐம்பொறிகளும் ஐந்து யானைகள் ஆயின: மதம்பொழிந்த யானைகள் மதத்தால் அகங்கரித்து காடு மலை நாடு நகரங்களிற் புகுந்து அனைத்தையும் நாசஞ்செய்யத் தொடங்கும்போது அவற்றின் குறிப்பறிந்த பாகன் தன் கையிலுள்ள அங்குசத்தால் மத்தகத்திற் குத்தி மதத்தை இறக்கித் தன்வசப்படுத்துதல் போன்று ஆன்மாவாகிய பாகனும் பொறிகளாகிய மதங்கொண்ட யானைகள் பிரபஞ்சாதிக் காடு மலை நாடு நகரங்களிற் புகுந்து துற்காரியங்களில் பிரவேசித்தற்காக நற்காரியங்களை நாசஞ்செய்யத் தொடங்கும்போது அறிவாகிய அங்குசத்தால் மத்தகத்திற்குத்தி மதத்தை இறக்கித் தன்வசப் படுத்துமாறு (பிரமான்ம ஐக்கிய நிலையில் நிற்குமாறு) செய்ய வேண்டுமென்பது பற்றி "உரனென்னுந் தோட்டியானோரைந்துங்காப்பான்" என்றும், அத்

தகைய ஆன்மாவே ஆனர்த்த நிவர்த்தி ஆனந்தப் பிராப்திரூபமான பிரமான்ம ஐக்கிய நிலை அடைவதற்கதிகாரம் பெறுவதாதலால் அதனை "வரனென்னும் வைப்புக்கோர்வித்து" என்றும் கூறினரென்ப. இதனைப் "போத மெனுமங்குசத்தாற் பொய்ப்பொறியாம் யானைகளை வாதமறத் தானடக்கி வைத்திடுவ தெக்காலம்" என்ற தாயுமான சுவாமிகளது திருவாக்கானும் உணர்ந்துகொள்ளலாம். (௪)

ஐந்தவித்தா னாற்ற லகல்விசும்பு ளார்கோமா
னிந்திரனே சாலுங் கரி.

பதவுரை.

ஐந்தவித்தான் — புலன்களிற் செல்லுகின்ற ஐந்தாசைகளையு மொழித்தவனது
ஆற்றல் — வல்லமைக்கு
அகல்விசும்புளார் — அகன்ற பொன்னுலகத்து [ள்ள
கோமான் — தலைவனாகிய தேவர்க்கு

இந்திரனே —தேவேந்திரனே
சாலுங்கரி — போதுமான சாட்சியாம்.

**(கருத்து)** கௌதம முனி வல்லமைக்குத் தேவேந்திரனே சாட்சியாம் என்பதாம்.

ஐந்தாசைகளையும் நீக்காமல் சாபத்தை அடைந்து நின்று அவ்வாசைகளை நீக்கின வனாகிய கௌதமமுனிவனது வல்லமையைத் தெரிவித்தானாகலின் ஈங்கே இந்திரனே சாலுங்கரி யென்றார்.

## விசேஷ ஞானவிருந்தி.

ஆகாயத்தி லிருந்து காற்று உண்டாய் அண்டபகிரண்ட மடங்கலும் அலைமோதித் திரிவது போன்று அந்தக்கரணத்தி லிருந்து மனது உண்டாய் அது சரீரமென்கிற தேரில் பொறிகளென்கிற ஐந்து பரிகளைப்பூட்டிப் புலன்களென்கிற ஐந்து கடிவாளம் மாட்டிக் காமக்குரோத லோபமத மாச்சரியம் என்கிற ஐந்து காட்டின் வழியாகச் சாரத்தியஞ்செய்து திரிகின்றதாதலால் எல்லா அனர்த்தங்களுக்

கும் காரணம் காமம் என்பதுபற்றி ஈண்டுக் காமத்தால் சாபம்பெற்று மெலிந்த இந்திரனை உதாரணங்காட்டி "இந்திரனே சாலுங்கரி" என்றும், அவ்வாறு திரிகின்ற மனத்தை அறிவென்கிற அரசன் மதியென்கிற மந்திரியைக் கொண்டு புலனென்கிற கடிவாளத்தைத் தான் பிடித்துப் பொறி என்கிற பரிகளை மடக்கிச் சமம் தமம் என்கிற * ரோட்டின் வழியாகச் சாரத்தியஞ் செய்தால் அது சாதன சதுட்டயமென்கிற கோட்டையிற்கொணர்ந்து நிறுத்துமென்பதுபற்றி "ஐந்தவித்தான் ஆற்றல்" என்றும் கூறியருளினரென்ப. இதனைப் "பொறி புலனடக்கி நின்ற பூரணைப் பெரியோராற்றல் அறிவரி தறிவதானல் அகலிகை அமரர் கோமான் நெறியனுப் பிசகியாங்கே நின்றதால் சாபந்தந்த கிறியறு கௌதமர்க்காங் கிரமமே உலகிற்சாலும்" என்ற குண்டலகேசிசெய்யுளாலும்உணரலாம். [*ரோட்-பாதை] (ரு)

செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்.

பதவுரை.

| | |
|---|---|
| பெரியார் | —(ஒத்தபிறப்பினராகிய மனிதர்களிலே) பெரியோர் |
| செயற்கரிய | —செய்தற்கரியவைகளை |
| செய்வார் | —செய்வார்கள் |
| சிறியர் | —சிறியோர் |
| செயற்கரிய | —செய்தற்கரியவைகளை |
| செய்கலாதார் | —செய்யமாட்டாதாராவர் |

(கருத்து) பெரியோர் செய்தற்கரியவைகளைச் செய்வார்கள். சிறியோர் செய்தற்கரியவைகளைச் செய்யார்கள் என்பதாம்.

எனவே பெரியோர் செய்தற்கெளியவைகளைச் செய்யாரென்பதும் சிறியோர் அவைகளைச்செய்வாரென்பதும் தோன்றுதலறிக.

செய்தற்கெளியவை மனத்தை வேண்டியபடியே போகவிடுதல், ஆசைகொள்ளுதல், கோபித்தல், இவை முதலானவையாம். செய்

தற்கரியவை இயமம், நியமம், ஆதனம், பிராணு யாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என எண்வகை யோகங்களாம்.

## விசேஷ ஞானவிருத்தி.

ஆழியகடலுள் அமிழ்ந்து நீந்தத்தெரியாமல் தத்தளிக்கின்ற ஒருவன் ஆங்கே தற்செயலாக வருகிற ஒருமரக்கட்டையை அவாவிப் பிடித்து அதன் மீதேறி இருந்துகொண்டு பின்னர் பிழைத்துய்ய வழிபார்ப்பதல்லாமல் அசிரத்தையாக அக்கட்டையை அகலவிட்டுவிட்டால் அவன்கதி அதோகதியாவது போலவே நல்வினைப்பயனால் சுவர்க்கத்திற்கும் தீவினைப் பயனால் நரகத்திற்கும் இவ்விரண்டினும் எஞ்சிநின்ற பயனால் புவனத்திற்கும் போக்குவரத்தாகக் காற்றில் பஞ்சு சுழல்வது போல் சுழன்றுகொண்டிருக்கிற ஆன்மாக்கள் தற்செயலாகக் கிடைத்திருக்கிற இம்மானிட சரீரத்தைப் பெற்றுங்கூட மோட்ச இச்சையில்

அசிரத்தையாய்ப் போக இச்சையில் மருண்டு மனத்தை அதன் இஷ்டப்படி போக விடுதல் பற்றி அவரைச் "சிறியர் செயற்கரிய செய்கலாதார்" என்றும் இத்துன்பங்களை எல்லாம் உணர்ந்து மாய்கையெனத் தள்ளி யோக முதலிய அரிய செயல்களைச்செய்வதற்கேற்ற மானிடப்பிறவி நழுவுதற்குமுன்னரே ஆத்மாவுரிய தன்னை அறிய விரும்பும் துறவிகளைச் "செயற்கரிய செய்வார் பெரியர்" என்றும் கூறியருளினரென்ப. இதனை "இந்த மானிடதேகமும் நழுவிடில் இனிவருகிற தேகம் வந்த மானிட தேகமென் றெண்ணிட வகையிலையதனாலே பந்தமற்றனைப் பரம்பொருள் நீயெனப் பார்த்திட மறந்தீங்கே பித்தவிட்டனை என்றிடிற்கெட்டனை பிறப்பிறப்பகலாதே" என்ற சுயம்பிரகாச ஆத்மஞான விளக்கச் செய்யுளாலும் அறிந்துகொள்ளலாம். (௬)

சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே யுலகு

பதவுரை.

| | |
|---|---|
| உலகு | —உலகமானது |
| சுவையொளி<br>யூறோசை<br>நாற்றம் | இரசமும், உருவமும், ஸ்பரிசமும், சத்தமும் கந்தமும் |
| என்று | —என்று சொல்லப்பட்ட |
| ஐந்தின் | —பஞ்ச தன் மாத்திரை |
| வகை | —கூறுபாட்டை [களது |
| தெரிவான் கட்டே | —ஆராய்பவனறிவினிட [த்ததேயாகும் |

(கருத்து) உலகமானது பஞ்சதன் மாத்திரைகளை யறிபவனிடத்தே என்பதாம்.

ஐந்தின் வகையாவன, அவையைந்தும், அவற்றிலே தோன்றிய பூதங்களைந்தும் அவற்றின் கூறாகிய ஞானேந்திரியங்களைந்தும், கன்மேந்திரியங்களைந்தும் ஆக இருபதுமாம்.

வகை தெரிவா னென்றதனால் தெரிகின்ற புருடனும், அவன் தெரிதற்குக் காரணமாகிய மான், அகங்காரம், மனம் எனப்பட்டவையும் அவற்றுக்கு முதலாகிய மூலப்பகுதியும் சேர்த்துக் கொள்ளப்படும்.

இவ்விருபத்தைந்து தத்துவக்கூட்டமல்லது உலகென வேறில்லையென்று உலகினது இருப்பையறிதலால் அறிவினிடத்ததாயிற்று.

இவை நான்குபாட்டாலும் பெருமைக்குக் காரணங்கள், ஐம்பொறியடக்கலும், யோகப் பயிற்சியும், தத்துவ ஞானமும், ஆமென்பது சொல்லப்பட்டது.

## விசேஷ ஞானவிருத்தி.

பகிர்முக மாகக் கண்ணால் ஒன்றைப் பார்க்கும்போது அது இன்ன உருவம் என்று கிரகிப்பதும், காதால்ஒன்றைக் கேட்கும்போது அது இன்ன விஷயம் என்று கிரகிப்பதும், மூக்கால் ஒன்றை முகரும்போது அது இன்ன

வாசனை என்று கிரகிப்பதும், நாவால் ஒன்றை ருசிக்கும்போது அது இன்ன உருசி என்று கிரகிப்பதும், கையால் ஒன்றைத் தொடும் போது அது இன்ன ஸ்பரிஸம் என்று கிரகிப்பதும் மனமே யாதலாலும் இம்மனமானது இருதயகமலத்தின் மத்தியில் நான் நான் என்று சுயம்பிரகாசிக்கும் ஆத்மாவினது அதிசய சக்தியின் சொரூபமாய் அவ் ஆத்மாவினின்று பகிர்முகமாக வெளிப்படும்போது நான் நான் என்று அகங்கரித்தும் எனது என்று மமகரித்தும் சம்சாராதி ஜனன மரணங்கள் முதலான பல அனர்த்தங்களை உண்டுபடுத்துகின்ற தாதலாலும் "மனமொடுங்கில் மற்றெல்லாம் ஒடுங்கும்' என்று அறிகின்ற ஆன்மாக்களை ஈங்கே "சுவை யொளி யூறோசை நாற்றமென் றைந்தின் வகை தெரிவான்" என்றும் அம்மனதை அவ்வாறு செல்லவிடாமல் அகமுக நாட்டமாகக் திருப்பி அனவரதம் செய்துவரும் சமம் தமம் முதலிய பிரமவிசாரத்தால் ஆன்

மாக்கள் அப் பிரமஸ்வரூபமேயாமாதலால் பிர மத்திற்கு எப்படி உலகு கட்டுப்பட்டதோ அப் படியே ஆன்மாக்களுக்கும் உலகு கட்டுப்பட்ட தாதல்பற்றி "வகை தெரிவான் கட்டே உலகு" என்றும் கூறினரென்ப. இதனைத் "தேகமுதல் நானென்னல் துவிதவிர்த்தி திகழ்சாட்சி நானென்னல் சாட்சிவிர்த்தி ஏகபரம் நானென் னல் அகண்டவிர்த்தி இம்மூன்று விர்த்தி களில் இரண்டைத் தள்ளி யாகுமகண் டா கார விர்த்தி தன்னை அனவரத மாதரவாயப் யாசித்துச் சோகமுறுஞ் சித்தவிகார்ப் பங்க டீர்ந்து சொன்னவகண் டேகரசச் சொரூப மாவாய்" என்ற ரிபுகீதைச் செய்யுளாலும் உணர்ந்துகொள்ளலாம். (எ)

---

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்.

பதவுரை.

நிறைமொழி —(பயன்) நிறைந்த சொல்லை
மாந்தர் —முனிவரது [யுடைய

பெருமை —மகிமையை
நிலத்து —நிலவுலகத்தில்
மறைமொழி —அவராணையாகச் சொல்லிய [மந்திரங்களே
காட்டிவிடும்-(பிரத்தியட்சமாகக் காட்டிவிடும்

(கருத்து) முனிவரது மகிமையை அவர்கள் மந்திரங்களே காட்டும் என்பதாம்.

பயனிறைந்தமொழியாவது அவர் அருளினாலே சொன்னாலும், கோபத்தினாலே சொன்னாலும் அதனதன் பிரயோஜனத்தைக் கொடுத்தேவிடுகிற சொல். காட்டுதல்-பிரயோஜனப்பட்டு அம்மகிமையை அறிவித்தல்.

விசேஷ ஞானவிருத்தி.

ஓடுகின்ற வெள்ளநீரில் உடன்செல்லும் துரும்பைப்போன்று சிருஷ்டிகாலந்தொடங்கி நாளிதுவரை "என் மனைவிமக்கள் வீடுவாசல் சொத்து சுதந்திரம்" என்று மமகரித்து வெற்றெலும்பைக் கடித்துத் தன் பல்லில்வரும்

இரத்தத்தையே நக்கிச் சுவைகொள்ளும் குக்கலை ஒத்துப் பொறிகளின்வழியே புலன்களை நுகர்ந்து துன்பமயமாகிய புவனபோகங்களை இன்பமென்றெண்ணி "நான் அநுபவிக்கின்றேன்" என அகங்கரித்து தளாவி வருகிற மனதைத் திடீரென்று கட்டுப்படுத்த முடியாதாதலின் முதலில் சுருதிகொண்டு அதற்குப் போதித்தும், பின்னர் யுத்திகொண்டு அதற்கு நிரூபித்தும், அந்தக்கரணம் தூயதாய் ஞானமுண்டாம் பொருட்டுத் தியானவிரத இயம நியம அநுஷ்டானங்களால் அணுவணுவாய் அநுபவிக்குமாறு அதனைப்பழக்கியும் வெள்ளநீரை எதிர்த்து மெள்ளச் செல்லும் அரும்பெண அம்மனதைத் தன்வசப்படுத்தித் துறவறம் பூண்டொழுகுவாராதல்பற்றி அவ்வருமை தோன்ற அவரை "நிறைமொழி மாந்தர்" என்றும் அவர் வாக்கிலிருந்துவரும் வசனங்கள் மணி மந்திராதி ரூபமாய் அணிமா மகிமா கிரிமா இலகிமா முதலிய அஷ்ட சித்திகளுடையன

வாய் ஆன்மாக்களது அஞ்ஞானங்களை நீக்குதல்போன்று விஷம் நோய் முதலியவற்றையும் நீக்கி அவர்களை உயிர்ப்பிக்கின்ற சக்திவாய்ந் திருப்பதால் அவ்வாக்கியங்களை 'மறைமொழி'' என்றும் அவ் வாக்கியங்கள் அத் துறவிகளது மகிமையை உலகில் துலக்கிககொண்டிருத்தலால் ''மாந்தர் பெருமை' என்றும் கூறியருளினரென்ப. இதனைப் ''பவமறமனத்தைக் கொன்று பற்றறத்துறந்தமேலோர் அவரவர் மொழியினாலே அவர்புகழ் அறியலாமே'' என்ற அகம்பிரம விளக்கத்தாலும் அறியலாம். (அ)

துணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்த லரிது.

பதவுரை.

| | |
|---|---|
| குணமென்னுங் குன்று | (துறவு, மெய்யறிவு, ஆசையில்லாமை, முதலான) நற்குணங்களாகியமலையின்மேல் |

ஏறி நின்றார்—ஏறிநின்ற முனிவராது
வெகுளி —கோபமானது
கணமேயும் —(தானுள்ள அளவு) க்ஷண
[காலமேயாயினும்
காத்தல் — கோபிக்கப்பட்டவராலே
அரிது —அரிதாம். (தடுத்தல்

(கருத்து) முனிவர்கள் கோபமானது கோபிக்கப் பட்டவராலே தடுத்தல் கூடாது என்பதாம்.

ஆசையாமையும், பெருமையும் பற்றிக் குணங்களை மலையாக உருவகம் செய்தார். அனுதியான பழக்கத்தினலே ஒரோவிடத்துக் கோபம் தோன்றியபோதே அதனை மெய்யுணர்வு அழிக்கும் ஆதலால் கணமேயுமென்றும், நிறைமொழி மாந்தராதலால் காத்தலரிதென்றும் சொல்லினர்.

இவை இரண்டு பாட்டாலும் அவராணை சொல்லப்பட்டது. (கூ)

## விசேஷ ஞானவிருத்தி.

அரசனில்லாவிடத்து லௌகிக சம்பந்தமாக இல்லறம்பூண்ட குடிஜனங்கள் தங்கள் தங்கள் காரியங்களில் முறைவழாது பிரவேசித்து ஒருவரைஒருவர் நேசித்துத் தந்தமக்கேற்பட்ட வீடுவாசல் மனைவிமக்கள் சொத்து சுதந்தரங்களை முறையே அநுபவித்து அறம்பொருள் இன்பங்களை நிலைநிறுத்த முடியாமல் அல்லோலப் பட்டுழலுவார்போன்று துறவிகளில்லாவிடத்து ஆன்மாக்கள் தெய்வீக சம்பந்தமாக ஜீவேசுர ஜகத்துக்கள் நசியுமாறு இம்மானிட ஜனனம் எடுத்ததின் பயனாகிய நித்தியானித்திய வஸ்து விவேகம் சமாதி சாதான சம்பத்தி முதலிய நற்கருமங்களில் பிரவேசித்து அனர்த்த நிவர்த்தி ஆனந்தப் பிராப்தி அடையமுடியாமல் அல்லோலப்பட்டுழலுவாராதல்பற்றி ஈண்டுத் துறவறம் பூண்டாரின் பெருமை துலங்க அவரைக் "குணமென்னும் குன்றேறி நின்றார்" என்றும் குளிர்காய்வான்

எப்படி அக்கினியைவிட்டு விலகாமலும் அதனை நெருங்கிச்சென்று அணுகாமலும் இருப்பரோ அப்படியே ஆன்மாக்கள் துறவிகளிடத்து அசிரத்தையாக நெருங்காமலும், சிரத்தையாக அகலாமலும், பயபக்தி விசுவாசத்துடன் அவர்கள் கூறிய அறவொழுக்கங்களைக் கடவாமலும், அவர்கள் விஷயத்தில் அபசாரமாக நடந்து கொள்ளாமலும், சர்வ ஜாக்கிரதையாக இருந்து வர வேண்டுமென்பது பற்றி, "வெகுளி கணமேனும் காத்தலரிது" என்றும் கூறினாரென்ப. இதனை "ஐம்புலனடக்கிநின்ற ஆன்ற மெய்த் துறவோர் கோபம் கைம்புலத்திருந்த நெல்லிக் கனியெனக் காணலாமே" என்ற ஜீவன்முத்தி விளக்கச் செய்யுளாலும் உணரலாம். (கூ)

அந்தணரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான்

பதவுரை.

எவ்வுயிர்க்கும் —எல்லாவுயிர்களின்மேலும்
செந்தண்மை —செவ்வையான அருளை
பூண்டு —விரதமாகக்கொண்டு

ஒழுகலர்ன் — நடக்கையினுலே
அந்தண
ரென்போர் } — அந்தணரென்று சொல்லப் படுவோர்
அறவோர் — துறவறத்தினின்றவர்.

(கருத்து) அந்தணரென்று சொல்லப்படுவோர் முனிவர்களே என்பதாம்.

அந்தணரென்பது அழகிய தன்மையை யுடையவரென்னுங் காரணப் பெயராகலின் அவ்வருளுடையார்க் கல்லது மற்றவர்க்காகா தென்பது கருத்து. மற்று அசைநிலை.

அப்படி ஆணையை யுடையவ ராயினும் உயிர்களிடத்தே அருளுடையவரென்பது இதனாற் சொல்லப்பட்டது.

விசேஷ ஞானவிருத்தி.

இதுவரையும் துறவறம் பூண்டாருடைய பெருமை திறமை ஆணை அருளுடைமை தத்துவ ஞானம் முதலியவற்றைக் கூறி வந்தநாயனர் இவ்வதிகாரமுடிவில் "அந்தணர் என்போர் அறவோர்" என்றுராதல்பற்றி

இயற்கையிலேயே அந்தணர் என்னும் பெயருக்குரியா ராகிய பிராமணர்கள் மாத்திரம் பிரமசரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சன்னியாசம் என்கிற ஆச்சிரமத்தினுள் அவர்கள் "எந்த நிலையில் இருப்பவராயினும் துறவிகளே யாவர்" என்றும், மற்றையோர்களில் இந்திரியவாயிலாக விஷயங்களிற்பற்றி யுழலும் மனதைப் பகீரதப் பிரயத்தனத்தால் அடக்கிப் பெண்டுபிள்ளை, காணி, பூமி முதலிய பந்தபாசங்களை முடுக்கிப் பிரபஞ்சாதி உபாதியைப் பிரமசொரூபமாகப் பார்க்கும் சத்துக்களே துறவிகள் அதாவது செயற்கையில் அந்தணர் ஆவார்கள் என்றும் விளக்கியதுடன் பிராமணர்கள் ஓதல், ஓதுவித்தல் வேட்டல் வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்னும் ஆறு சற்கர்மங்களையுடையவராய்ப்பிரணவம், காயத்திரி முதலிய அரிய மந்திரங்களின் வாயலாகசசர்வான்மாக்களுக்கும் ஞானத்தைப் போதிப்பவராய் இருள்வடிவமாகிய இப்பிரபஞ்சத்தில் அருள்வடிவ மாகிய அன்பனைக் காணுதற்குத் தெருள்வடிவ மாகிய தீபம்போற் பிரகாசித்துக்

கொண்டிருப்பவராயிருத்தல் பற்றி அவரை "எவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண்டொழு கலான்" என்றும் விளக்கி யருளினரென்ப. இதனை "நல்லற மனைத்தையும் நாளுஞ்செய் தோம்பிநால் சொல்லற மனைத்தையும் துலக்கிநின் றேதியும் அல்லற மனைத்தையும் அகற்றிய அந்தணர் இல்லறத் திருப்பினு மிருஷிகளாவரே" என்ற ஆத்மஞான விளக்கச் செய்யுளாலும்அறியலாம். (ம)

நீத்தார் பெருமை முற்றிற்று.

## ௩௫-ம் அதிகாரம் நிலையாமை.

### ஞானம்.

அதாவது:—

அநேக நோன்பு, விரதங்கள் முதலியவை களினல் கரணங்கள் பரிசுத்தமான விடத்து உண்டாவதும், மோட்சத்தைத் தருவதும்,

ஆகிய அறிவு. அது நிலையாமை முதல் அவா வறுத்தல் இறுதியாக நான்கு அதிகாரத்துள் அடக்கிச் சொல்லப் படுகிறது.

அஃதாவது

தோற்றமுடையவை யெல்லாம் நிலை பெறாத தன்மையாம். இதனை அறிந்தவிடத்தே யல்லாமல் பொருள்களிலே பற்றுவிடாதாக லின் ஞானபாகத்தின் முன் வைக்கப் பட்டது.

நில்லா தவற்றை நிலையின வென்றுணரும்
புல்லறி வாண்மை கடை.

பதவுரை.

நில்லாத வற்றை--நிலையில்லாதவைகளை
நிலையின வென்று—நிலையுடையவை யென்று
உணரும் —நினைக்கின்ற
புல்லறி வாண்மை } —அற்ப புத்தியை யுடையவரா யிருக்கை
கடை —(துறந்தார்க்கு) இழிவு.

(கருத்து) அழிவை அழியாததாக நினைக்கும் அறியாமை, அறிவுடையோர்க்கு இழிவு என்பதாம்.

தோற்றமுடையவைகளை அழிவில்லாதவையென்று நினைக்கும் அற்ப புத்தியால் அவைகளின் மேலே பற்றுச் செல்லுதல் பிறவித்துன்பத்துக்கு ஏதுவாகலால், அது மோட்சத்தை அடைவோர்க்குத் தவறுமென்பது இதனாற் சொல்லப்பட்டது.

இனிப்புல்லறிவாளர் பெரும்பாலும் பற்றுச்செய்வது சிற்றின்பத்துக்கு ஏதுவாகிய செல்வத்தினிடத்திலும், அதனை அநுபவிக்கும், உடம்பினிடத்திலும், ஆதலின் வருகிற பாட்டுக்களால் அவைகளினது நிலையாமையை வேறெடுத்துச் சொல்லுவாராஞர்.

## விசேஷ ஞானவிருத்தி.

"இதுதான் உயிர்" என்று உடம்பினிடத்து மிக்க அபிமானங்கொண்டு ஓயாது உழைத்து மிகப்பிரயாசைப்பட்டும் உணவு

முதலியவற்றால் வருந்தி வளர்த்தும்வந்த அவ்வுடம்பே நிலையில்லாமல் அழிந்தொழிவது பிரத்தியட்ச மாதலால் அவ்வுடம்பைக்கொண்டு போஷிக்கப்படுகிற உலகும் அவ்வுலக இன்பமாகிய அனைத்தும் நிலையில்லாதனவாய் அழிந்திழிந் தொழிவன என்பது கூறுமலே அமையுமென்னும் உறுதிபற்றியும் ஈஸ்வரனாலேயே ஜீவர்கட்குப் போகத்தின்பொருட்டு ஆகாசாதிக் கிரமமாகப் பஞ்சீகரணமாக்கப்பட்ட சரீரம் இந்திரியம் முதலியவைகளின் சங்காதங்களும் அச்சங்காதங்களின் போக்கியரூபமான சம்பூரணப் பிரபஞ்சங்களும் முயற்கொம்பு, ஆகாயத்தாமரை, கானனீர் களைப் போல் பிரம்ம சாயையினால் உண்டாகின்ற கற்பனையேயன்றி எதார்த்த மன்றென்னும் உறுதிபற்றியும் இங்கே சுத்த சைதன்னிய வஸ்துவைத் தவிர மற்றை அனைத்தையும் "நில்லாதவற்றை" என்றும், அவற்றை உறுதிப்பொருளென நம்பி யுழலும் ஆன்மாக்களது மந்த குணத்தைப் "புல்லறிவாண்மை"

என்றும், அதனால் ஏற்படும் அனர்த்தங்களை விளக்கிக் "கடை" என்றும், கூறினரென்ப. இதனைத் "தேன்முகம் பிலிற்றும் பைந்தாட் செய்ய பங்கயத்தின் மேவும் நான்முகத் தேவே நின்னால் நாட்டிய வகிலமாயை கான் முயற்கொம்பே என்கோ கானலம் புனலே என்கோ வான்முக முளரி என்கோ மற்றென் கோ விளம்பல்வேண்டும்" என்ற தாயுமான சுவாமிகள் பாசுரத்தானும் உணரலாம். (க)

கூத்தாட்ட வைக்குழாத் தற்றே பெருஞ் செல்வம்
போக்கு மதுவிளிந் தற்று.

பதவுரை.

பெருஞ் செல்வம் — (ஒருவனிடத்தே) பெரிய செல்வம் வருதல்

கூத்தாட்டு — கூத்தாடுதல் செய்கின்ற

அவை — சபையினிடத்தே

குழாத்
தற்று } —(காண்போர்) கூட்டம் வரு
தல்போலும்

போக்கும் —(அச்செல்வம்) போகுதலும்

அது —அக்கூட்டமானது

விளிந்
தற்று } —(அக்கூத்தாட்டு முடிந்தவிடத்
தே) போகுதல் போலும்

(கருத்து) செல்வம் கூத்தாட்டில் கூட்டம்போல் வரும். அது போதல்போல் போம் என்பதாம்.

பெருஞ்செல்வமெனவே சுவர்க்க செல்வமும் அடங்கிற்று.

போக்குமென்றவும்மையால் வருதலென்பது கொள்ளப்பட்டது.

எப்படி அக்கூட்டமானது கூத்தாட்டுக் காரணமாகச் சபையினிடத்தே பலவிதத்தால் தானே வந்து, அது போனவிடத்தே தானும்

போகுமோ, அப்படியே செல்வமானது ஒருவனது நல்வினை காரணமாக அவனிடத்தே பலவிதத்தால் தானேவந்து, அது போனவிடத்தே தானும் போமென்பதாயிற்று.

## விசேஷ ஞானவிருத்தி.

'செல்வம்' என்பது "நாங்கள் எப்பொழுதும் நிலைத்திராமல் சென்றுகொண்டே இருப்போம்" என்று அவைகளே சொல்லுமாப்போல் அமைந்த காரணக்குறி யாதலானும் அத்தகைய நிலையில்லாத பொருளை உணர்ந்தாலன்றி நிலையுடைய பொருளில் மனம் செல்லாதென்கிற நியமம்பற்றி ஆத்மஞானிகள் வெறுக்கவேண்டிய முதல் வஸ்து செல்வமாதலால் அதற்கு வெறுக்கை என்று மற்றொரு பெயர் வழங்குதலானும் இத்தகைய நிலைமையற்ற செல்வத்தையே நிலைமையுற்றதென ஆன்மாக்கள் மருண்டு தங்கள் வாணாள் முழுதும் வீணாளாக்கிச் "செல்வம் செல்வம்"

என்று அல்லலில் உழன்று அதனைச் சம்பாதித்துச் சேர்த்துவைப்பதிலேயே கவலடைகின்றாதலானும் ஊழ்வினைப்பயனால் செல்வஞ் சேர்ப்பதில் திறமையற்றாருங்கூட "நாமும் செல்வவந்தனர் ஆகவேண்டுமே" என்கிற பேராசை பற்றிப் பேயாய் அலைந்து திரிந்து நாசமடைகின்றாதலானும் அத்துணைப் பொருளையும் அடக்கியே அனர்த்தவடிவான அதன் ஆற்றலை மெசசுவார்போன்று "பெருஞ் செல்வம்" என்று தூறியும் அதன் போக்குவரத்தைக் கூத்தாட்டுக் களரியுடன் ஒப்பிட்டுக் கூறியும் விளக்கி யருளினரென்ப. இதனை "நாடகத்தி லன்றிரவு நண்ணும் ஜனக்குவியல் ஆடி முடிந்தங் ககல்வதுபோல்-தேடவரும்-செல்வமும் செல்வமெனச் சென்றிடுமே மாயாத வல்வினையுந் தந்திடுமே வந்து" என்னும் அரிசில்கிழார் திருவாக்கானும் அறிந்துகொள்ளலாம். (உ)

அற்கா வியல்பிற்றுச் செல்வ மதுபெற்ற
லற்குப வாங்கே செயல்.

பதவுரை.

| | |
|---|---|
| செல்வம் | —செல்வமானது |
| அற்கா | —நிலேயாத |
| இயல்பிற்று | —இயல்பையுடையதாகும் |
| அதுபெற்றால் | —அச்செல்வத்தைப் பெற்றால் |
| ஆங்கே | —பெற்றபொழுதே |
| அற்குப | —(அதனாலேசெய்யப்படும்) அறங்களை |
| செயல் | —செய்யக்கடவன் |

(கருத்து) செல்வம் பெற்ற பொழுதே (நிஷ்காம) தருமஞ் செய்யக் கடவர் என்பதாம். அல்காவென்பது - விகாரப்பட்டு நின்றது.

ஊழ்உள்ள விடத்தேயல்லது பெறக்கூடாமையால் அது பெற்றால் என்றும், அவ்வூழ் இல்லாவிடத்தே நில்லாமையால்ஆங்கேயென்றும் சொல்லினர். அதனாலே செய்யப்படும் அறங்கள்:—

பயனைக் குறியாது செய்யும் கடவுட் பூசையும், தானமும் முதலானவை. அவை ஞானத்துக்கு ஏதுவாய் மோட்சத்தைக் கொடுத்தலால் அவற்றை அந்தப என்றும், செயல் என்றும் சொல்லினர். [இவை இரண்டு பாட்டாலும் செல்வ நிலையாமை சொல்லப் பட்டது.]

## விசேஷ ஞானவிருத்தி.

வீடுபெறுவதற்கு ஏது ஞானமாதலானும் ஞானம் பெறுவதற்கு மார்க்கம் நல்வினையாதலானும் நல்வினையின் செயல் அறமே ஆதலானும் அவ்வறம்புரிதற்குச் சாதனம் செல்வமே ஆதலானும் செல்வம் நிலையற்றதாயினும் அதில் அறம் என்னும் பெரும்பயன் அமைந்து கிடத்தலால் செல்வ நிலையாமையைக் கூற வந்த விடத்து நாயனர் அதனாலாகிய அறத்தையும் ஈண்டு வலியுறுத்துதல்பொருட்டு "அதுபெற்றல் அற்குப வாங்கே செயல்"

என்றும், ஆன்மாக்கள் வீடுபெறுதற்குச் செல் வம் நிஷ்காம தருமத்தின் வழியாக மாத்திரம் சாதனப்படுவதன்றி அஃதின்றேல் அது தனி யாக வீடுபெறுதற்குச் சாதனப்படுவதன்று தலோடு ஆன்மாக்களைப் பிறப் பிறப்பிற்கும் ஆளாக்கி அனர்த்தத்தை உண்டுபடுத்துகின்ற தாதல்பற்றி அதனை "அற்காவியல்பிற்றுச் செல்வம்" என்றும் கூறி யருளினரென்ப. இதனைச் "சிறியரே மதிக்குமிந்தச் செல்வம் வந்துற்ற ஞான்றே வறியபுன் செறுக்கு மூடி வாயுள்ளார் மூகராவர் பறியணி செவி யுளாரும் பயிறரு செவிடராவர் குறிபெறு கண்ணுளாரும் குருடராய் முடிவரன்றே" என்னும் குசேலோபாக்கியானச் செய்யுளா லும் "கழிபெருஞ் செல்வக் கள்ளாட்டயர்ந்து மிக்க நல்லறம் விரும்பாது வாழும் மக்களிற் சிறந்த மடவோருண்டோ" என்னும் மணி மேகலைச் செய்யுளாலும் அறியலாம். (௩)

நாளென வொன்றுபோற் காட்டி யுயிரீரும்
வாள துணர்வார்ப் பெறின்.

பதவுரை.

| | |
|---|---|
| உணர்வார்ப் பெறின் | (அது) அறிவாரைப் பெற்றால் |
| உயிர் | —உயிரானது |
| நாளென | —நாளென்று அளவு செய்யப் படுவதாகிய |
| ஒன்றுபோல் | —ஒருகாலவளவுபோல் |
| காட்டி | —(தன்னைக்) காட்டி |
| ஈரும் | —அறுத்துச் செல்லுகின்ற |
| வாளது | —வாளினது வாயினிடத்தது |

(கருத்து) உடல் நாளாகிய வாளின் வாயினிடத்தது என்பதை அறிவாரில்லை என்பதாம்.

காலமென்னும் அருவப்பொருள் உலகியல் நடத்தற்பொருட்டுச் சூரியன் முதலாகிய அளவைகளால் கூறுபட்டதாக்கி வழங்கப்படுவதல்லாமல் தானாகக் கூறுபடாமையால் நாளென வொன்று போல் என்றும், அது தன்னை வாளென்று அறியமாட்டாதவரை நமக்குப் பொழுதுபோகா நின்றதென்று மகிழும்படி மயக்கலால் காட்டி என்றும், இடைவிடாமல் அறுத்தலால் வாளதென்றும், அது அறுக்கின்றபடியை அறியவல்லவர் இவ்வுலகத்தில் அரியராயிருக்கையில் உணர்வார்ப் பெறின் என்றும், சொல்லினார் அறுக்கப்படுவது உடம்பாகலால் உயிரென்பது இங்கே உடம்பைக்காட்டி நின்றது வாளினது வாயை வாளென்கையால் ஆகுபெயர். (இதனால் உடம்புகளுக்கு அளவுசெய்யப்பட்ட நாள் கழிகிறவிதம் சொல்லப்பட்டது.) (௪)

## விசேஷ ஞானவிருத்தி.

ஈஸ்வரன் ஆன்மாக்களைச் சிருஷ்டிக்குங்கால் பிரமன் என்றும், காக்குங்கால் திருமால் என்றும், அழிக்குங்கால் சங்கரன் என்றும், முப்பெயர் பெற்றுத் தன்னால் சிருஷ்டிக்கப்பெற்ற ஆன்மாக்களது சரியை கிரியை யோக ஞான கிருத்தியங்களைத் தானே நேரிற்கண்டு களித்தற்பொருட்டுச் சூரியனென வடிவுகொண்டு அந்தரத்தில் நின்று தானுஞ் சுழன்று மற்றைச் சரீராதிப் பிரபஞ்சங்களையும் தன்னை நோக்கிச் சுழலுமாறு செய்து காலையில் பிரமாவாகவும், நடுப்பகல் விஷ்ணுவாகவும், மாலையில் சங்கரனாகவும், சகலான்மாக்களுக்கும், தரிசனமளித்து அதன் மூலம் அவ்வான்மாக்களது வாணாளையும், அளந்தறிகின்றானாதலின் சூரியனை மும்மூர்த்

திகள் என்றே தியானிக்கவேண்டுமென்பது பற்றியும், ஒருதயந்தொடங்கிப் பின்வரும் உதயமளவிற் கழிந்தகாலத்தை நாள் என்றும், நாளிலிருந்தே வாரம் மாதம் வருஷம் என எண்ணி ஆயுள் கணக்கிடப்படுதல் பற்றியும், ஈங்கு நாயனர் நாள் எனக்கூறி அது ஆன் மாக்களது உடம்பை அறுக்கும் வாள் என உருவகித்து இவற்றை உணரப்பெற்ற ஆன் மாக்கள் ஆன்ம சாட்சாத்காரமுடையராய்க் காலாதீதராவரென்னும் நிச்சயம்பற்றி அவ் வருமைதோன்ற "உணர்வார்ப்பெறின்" என் றும், விளக்கினரென்ப. இதனை "நானே தான் காலமென்னும், நனியருவப்பொருளாகி நானே தான் சூரியனய் நாட்களையுண்டாக்கு கின்றேன் நானே தான் கிரகமென நவிலாயு ளூட லறுத்து நானே தான் உலகனைத்தும், நடுவிருந்து சுழற்றுகின்றேன்" என்னும், கீதாசார மகாவாக்கியத்தாலும் உணரலாம்.(ச)

நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை
மேற்சென்று செய்யப் படும்.

பதவுரை.

நாச்செற்று —(பேசாதிருக்கும்படி) நாவை அடக்கி
விக்குள் —விக்கலானது
மேல்வாராமுன் —எழுவதற்கு முன்னே
நல்வினை —(மோக்ஷத்துக்கு ஏதுவாகிய) அறமானது
மேற்சென்று —விரைந்து
செய்யப்படும் —செய்யப்படுவதாகும்.

(கருத்து) நாவடக்கிச் சேத்துமமெழுமுன் அறத்தை விரைந்து செய்யப்படும் என்பதாம்.

நாவை அடக்கி விக்கல் மேலெழுதலுக்கு ஐயமில்லாமையாலும், அது நேரிட்டபோது நல்வினையைச் செய்தலேயல்லாமல் சொல்லலும் ஆகாமையாலும், வாராமுன் என்றும், அதுதான் இன்னகாலத்திலே வருமென்று

அறியக்கூடாமையால் மேற்சென்று என்றும், சொல்லினர். நல்வினை செய்யும் வழியின் மேல் வைத்து நிலையாமை சொல்லியபடி. (இதனால் அந்த நாள் கழிந்தால் உண்டாகும் நிலையாமை சொல்லப்பட்டது.)

விசேஷ ஞானவிருத்தி.

உடம்பு அழியும் இயல்பின தாதலான் அது பொய் எனப்படுமாதலானும், அங்ஙன மாயினும், மேலோர் அதனை மெய் என்று விளம்புதல் அப்பொய்யுடம்பைப் பெற்றே அறம் பொருள் இன்பமென்கிற மூன்று சாதனங்களையும் முறையே அடைந்து பின்னரே மோட்ச வீடடைதல் முடியும் என்கிற முறைமைகொண் டாதலானும், அவ்வுடம்பு நாவை அடக்கிச் சேத்துமம் எழுமுன் (அதாவது மரணவஸ்தை நேருமுன் மோட்சத்துக் குரிய நல்வினைகளை விரைந்து செய்துகொள்ள வேண்டுமென்பதுபற்றி ஈண்டு "நாச்செற்று விக்குண் மேல்வாராமுன்" என்றும், நல்வினை

என்பது நற்செய்கை அனைத்தினுக்கும் பொது வேயாயினும், சிறப்புநோக்கி அஞ்ஞானம், அகங்காரம், அவாவிருப்பு முதலிய குற்றங்களேதும் மனத்துக்கண் அணுகாது தூய்மையோடு பயன்கருதாது செய்யப்படுகிற இம்மை மறுமை வீடு என்கிற மூன்றையும் பயக்கவல்ல அறமே என்பது பற்றி அதனை "நல்வினை மேற்சென்று செய்யப்படும்" என்றும், கூறினரென்ப. இதனைப் "புயலெப்படியோ பூமியின் வசமாய்ப் பொருந்திச் சுழ்வதுபோல் மயலெப்படியோ மாயையின் வசமாய் மனதுஞ்சுழல்கிறதால் செயலெப்படியோ பேசவுமுடியாச் சேத்துமமெழுகையிலே உயலெப்படியோ நல்லறம்புரியா உயிர்காள் உலகினிலே" என்ற நாராயணதேசிகர் வாக்காலும் "காலைச் செய்வோமென் றறத்தைக் கடைப்பிடித்துச் சாலச் செய்வாரே தலைப்படுவார்" என்ற திருமுனைப் பாடியார் வாக்காலும் உணரலாம். (௫)

நெருந லுளனொருவ னின்றில்லை யென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு.

பதவுரை.

இவ்வுலகு—இந்த வுலகம்
ஒருவன் —ஒருவன்
நெருநல் —நேற்றைக்கு
உளன் —உளனாயினான் [பிறந்தனென் றபடி] (அவனே)
இன்று —இன்றைக்கு
இல்லை —இலனாயினான் (இறந்தானென் றபடி)
என்னும் பெருமை } —என்று சொல்லும் (நிலையாமையின்) மிகுதியை
உடைத்து —உடையதாயிருக்கின்றது.

(கருத்து) இவ்வுலகம் நேற்றிருந்தவனின் றில்லைஎன்னும் பெருமையுடையது என்பதாம்.

பெண்பாலுக்கும் உண்டாயினும் சிறப்புப்பற்றி ஆண்பாலைச் சொல்லினார். இந்த நிலையாமையே உலகத்திலேமிகுந்ததென்றபடி.

(இதனால் அவ்வுடம்புகள் ஒரோவிடத்துப் பிறந்த வளவிலே இறத்தலும் சொல்லப் பட்டது.

## விசேஷ ஞானவிருத்தி.

உலகு உடல் என்பன இவ்விரண்டும் ஒரே இனமாகிய பஞ்சீகிருத பஞ்ச மகா பூதங் களாலாகியதும், சுகதுக்காதி போகத்திற் கிடனாகியதுமாகிய பிறத்தல், இறத்தல், வளர் தல், திரிதல், குறைதல், கெடுதல், என்னும், ஆறு விகாரங்களையுடையனவாதலானும், உட லின்றி உலகு விளங்காமையான் அவ்வுலகும், உலகின்றி உடல் விளங்காமையால் அவ்வுட லும் ஒருங்கே காணப்பட்டு மறைந்துபோ கின்ற அநித்தியப் பொருளேயன்றி நித்தியப் பொருள் அன்றாதலானும், இவகே நாயனார் அநித்தியமாயும், ஒன்றாயும், சகலத்திற்குங் காரணமாயும், சடமாயும், எவ்விடத்தும் காரி யங் காணப்படுவதாயும், வியாபகமாயும், ஆன்

மாக்களுக்கு மாயேயமான தனுவாதிகளை உண்டாக்குவதாயும், பின்னர் அதை அழிப்பதாயுமுள்ள மாயையினது வல்லமையை விளக்கி உலகின் அநித்தியத்தை உடலின் மீதேற்றி "நெருநலுளனொருவன் இன்றில்லை" என்றும், பின்னர் அவ் உடலின் அநித்தியத்தை உலகின் மீதேற்றிப் "பெருமையுடைத் திவ் வுலகு" என்றும், உலகும் உடலும் ஒருங்கே ஒவ்வொரு காரிய தத்துவங்களும், அதனதன் காரியத்திலொடுங்கி ஒன்றுமில்லாதழியும் அநித்தியப்பொருள் என்பதை ஆன்மாக்கள் எளிதில் உணரவைத்தனர் என்ப. இதனை "வீற்றிருந்தாள் அன்னை வீதி தனிலிருந்தாள் நேற்றிருந்தாள் இன்று வெந்து நீறானாள்—பாற்றெளிக்க—எல்லீரும் வாருங்கள் ஏதென் றிரங்காமல் எல்லாஞ் சிவமயமே யாம்" என்ற பட்டினத்தடிகள் திருவாக்காலும் உணரலாம். (க)

**ஒருபொழுதும் வாழ்வ தறியார் கருதுப
கோடியு மல்ல பல.**

பதவுரை.

ஒருபொழுதும் —அறிவில்லாதவர், ஒருபொழு தளவும்
வாழ்வது —தம்முடம்பும் உயிரும் கூடி யிருக்கையை
அறியார் —அறியமாட்டார் (மாட்டா திருந்தும்
கோடியுமல்ல —கோடியளவுமன்றி
பல —(அதனிலும்) பலவாகிய நினைவுகளை
கருதுப—நினையா நிற்பார்.

(கருத்து) ஒருநாள் அளவும் வாழ்வதறி யாதவர்கள் அளவிலா எண்ணங்களை எண்ணு கிறார்கள் என்பதாம்.

ஒருபொழுதும் என்ற இழிவு சிறப்பும் மையால் இங்கே பொழுதென்பது கணக்கைக் காட்டி நின்றது. காரணமாகிய வினையினளவே

வாழ்தற்கும் அளவாகலால் அது அறியப் படாததாயிற்று. பலவாகிய நினைவுகளாவன:— அனுபவிக்கப்படும் இன்பங்களுக் குரியவை ஆகும் விதமும், அதற்குப் பொருள்வேண்டிய விதமும், அது தம்முயற்சிகளால் வரும் விதமும், அம்முயற்சிகளைத் தாம் செய்யும் விதமும், அவைகளுக்கு வரும் இடையூறுகளும், அவைகளை நீக்கும் விதமும், நீக்கியபின் அப்பொருளைச் சேர்க்கும் விதமும், அதைப் பிறர் கொண்டுபோகாமல் காப்பாற்றும் விதமும், அதனால் சிநேகித்தவரை ஆக்கும் விதமும், பகைத்தவரை அழிக்கும் விதமும், தாம் அவ்வின்பங்களை அனுபவிக்கும் விதமும், முதலானவையாம். அறிவில்லாதவரியல் பின்மேல் வைத்து நிலையாமை சொல்லியபடி. (அவ்வுடம்புகள் ஒரு கணமாயினும் நிற்குமென்பது நம்பப்படாமை சொல்லப்பட்டது.)

## விசேஷ ஞானவிருந்தி.

ஆன்மாக்களது வாழ்வு அவர்களது வினையின் அதிகாரத்துள் அடங்கியிருததலானும், அவ்வினை நல்வினை தீவினை என இரண்டு வகையினை உடையதாய் வர்த்தமான தேகத்திற் செய்யப்படும் புண்ணிய பாவமாகிய கருமத்திற் கேதுவாகிய ஆகாமிய மெனவும், அனந்தங்கோடி ஜன்மங்களுக்குக் காரணவடிவமாய் முன்னமே சம்பாதிக்கப்பட்டுள்ள கருமத்திற்கேதுவாகிய சஞ்சிதமெனவும், இச சரீரத்தை உண்டுபண்ணி இவ்வுலகத்தில் இவ்வாறு சுகதுக்காதிகளைத் தந்துகொணடிருக்கிற கருமத்திற்கேதுவாகிய பிராரத்தமெனவும், முத்திறப்பட்டு ஓயாது பிறந்திறந் துழன்றுகொண் டிருத்தல்பற்றி "ஒருபொழுதும் வாழ்வதறியார்" என்றும், ஆகாயத்திலிருநது காற்றுனது விசிரிம்பித்து எல்லாவிடங்களிலும், ஓடியாடித் திரிவதுபோலவே அந்தக் கரணத்திலிருந்து மனமானது விசிரிம்பித்துச

சிருஷ்டிகாலந் தொடுத்துப் பிறந்திறந்துழன்றுவரும ஜன்ம வாசனைப் பழக்கத்தினால் நான் என்று அகங்கரித்தும் எனது என்று மமகரித்தும் தனுகரண புவனபோகங்களுக்கேதுவாகிய பிறவியை ஈட்டிக்கொண்டு செல்லுதல்பற்றிக் "கருதுய கோடியுமல்ல பல" என்றும் கூறினார் என்ப. இதனை 'உண்பது நாழி உடுப்பது நான்குமுழம் எண்பது கோடி நினைந்தெண்ணுவன" என்ற ஒளவையார் திருவாக்கானும் உணரலாம். (எ)

குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
யுடம்போ டுயிரிடை நட்பு.

பதவுரை.

உடம்போடு —சரீரத்தோடு
உயிரிடை —உயிருக்கு உண்டாகிய
நட்பு — சிநேகமானது
குடம்பை —(முன்னே தனியாதிருந்த) முட்டையானது
தனித்தொழிய —தனித்துக்கிடக்க

புள் --(அதனுள்ளிருந்த) பறவை
பறந்தற்று—(பருவம் வந்த விடத்தே பறந்து போம் தன்மையை யுடையதாகும்

(கருத்து) முட்டைக்கும் பறவைக்கும் சம்பந்தமில்லாமைபோல் உடலுக்கும் உயிருக்கும் சம்பந்தமில்லை என்பதாம்.

முன்னே தனியாமையாவது — கருவும், தானும் ஒன்றாய்ப் பிறந்து வேறாகுமளவும் அதற்கு இடமாயிருத்தல், அதனால் அம்முட்டை உடம்புக்கு உவமானமாயிற்று. அதனுள்ளே வேறுபாடில்லாமலிருந்தே பின்பு திரும்பி நுழையாமற்போகலால், புள் உயிருக்கு உவமானமாயிற்று. நட்பு, நட்பில்லாமற் போகுகையைக் குறிப்பினாலே காட்டி நின்றது. அறிவாகியும், அருவாகியும், நித்தியமாகியும், உள்ள உயிரும், அறியாமையாகியும், உருவாகியும், அநித்தியமாகியும் உள்ள உடம்பும், தம்முள்ளே மாறாகலால் வினைவசத்தினாலே கூடிய தல்லாமல் சிநேகமில்லையென்பது அறிக
(இதனால் அவ்வுடம்புகள் உயிர் நீங்கியவிடத்துக்கிடக்குமாறு சொல்லப்பட்டது)

## விசேஷ ஞானவிருத்தி.

ஆன்மா ஜெனனமெடுக்கும்போது தந்தையின் உதரத்தில் இரண்டு மாதந்தங்கிப் பின்னர் தந்தையின்மூலம் தாயின் உதரத்தில் சேர்ந்து பத்துமாதந்தங்கிக் கரசரணுதி அவயவங்களோடு தானும் வளர்ந்து உருப்பெற்றுப் பிரபஞ்சத்திற்ரேன்றி வினைவசத்தினுலே உடலும் தானும் ஒன்றுபோலவே பாவனை பண்ணி வினைமுடிவில் தன்னை அருமையாகப் போஷித்து வைத்திருந்த உடம்பைத் தொப்பென்று போட்டுவிட்டு ஓடிவிடுவதைப் பிரத்தியட்சமாகப் பார்த்திருந்துங்கூட ஆன்மாக்கள் தாமே பிரமமென்பதை மறந்து தங்கள் தங்கள் உடம்பையே தானெனன அகங்கரித்துத் துன்பமயங்களையே இன்பமயங்களாக எண்ணி ஏமாறுகின்றனவாதலின் ஈங்கே உடலுக்கும் உயிருக்கும் உள்ள நட்பின்மையை முட்டைக்கும் குஞ்சுக்கும் உவமைகாட்டி "உடம்போடுயிரிடை நட்பு குடம்பை தனித்தொழியப் புட்

பறந்தற்றே" என்று விளக்கினரென்ப. இதனை "முட்டையும் தானுமாக முதலில் வந்துதித்த குஞ்சும், விட்டதைப் பறந்து சென்றால் மீணடதைத் தேடாவாறே, கட்டையும் தானுமாகக் கலந்துவந் துதித்த சீவன், ஒட்டுடல் கிடக்கப் பேசா தோடுதல் மோசந் தானே" என்ற சீவானுபூதி விளக்கச் செய்யுளாலும் தெரிந்து கொள்ளலாம். (அ)

உறங்குவது போலுஞ் சாக்கா டுறங்கி
விழிப்பது போலும் பிறப்பு.

பதவுரை.

சாக்காடு —(ஒருவனுக்கு) மரணம் வருதல்
உறங்குவதுபோலும்—தூக்கம் வருதல் போலு [ம்]
பிறப்பு -(அதன் பின்னே)பிறப்புவருதல்
உறங்கி விழிப்பது போலும் } தூங்கி விழித்தல் வருதல் போலும்

(கருத்து) மரணம் நித்திரையையும், பிறப்பு விழித்தலையும் ஒக்கும் என்பதாம்.

உயிர்களுக்கு உறங்கலும், விழித்தலும் போல் இறத்தலும் பிறத்தலும், இயல்பாகக் கடிதிலே மாறி மாறி வருமென்பது கருத்து. நிலையாமையே நிலைபெற்ற விதத்தை அறிவித்தற்குப் பிறப்பும் உடன் சொல்லப்பட்டது.

இதனால் அவ்வுடம்புகளுக்கு இறப்பும் பிறப்பும் மாறி வருமாறு சொல்லப்பட்டது.

## விசேஷ ஞானவிருத்தி.

சாக்கிராவஸ்தையில் தூலசரீரபிமானியாகிய விசுவனெனப்படும் சீவன் அத்தனதன் தூல சரீரப் பிரபஞ்சாதிகள் இருந்தபடியிருக்கச் சொப்பனவஸ்தையில் அவையொன்றுந்தோன்றாமல் பூர்வம் பார்க்கப் பட்டவைகளாலும், கேட்கப் பட்டவைகளாலும் உண்டாகிய வாசனையால் மனதின் வசப்பட்டுத் தைசஸன் என்னும் பெயருடன் மற்றொரு சரீரத்தையும் மற்றைய அண்டபிண்ட சராசரங்களையும், தானே

கற்பித்துக்கொண்டு கடல், மலை, காடு, வனாந் திரங்களில் சென்று சஞ்சரித்துக்கொண்டி ருந்து பின் விழிப்பு நேர்ந்துழி மீண்டும் வந்து பழைய தூலசரீரத்திற்புகுந்து கொளும் பாவனை போலவே மரணத்திற்குப் பின் புண்ணிய கருமத்திற்கேற்பச் சூக்குமசரீரத்தோடு பூத சார சரீரமாகிய தேவசரீரத்தை எடுத்துக் கொண்டு சுவர்க்கபோகங்களையும், பாபகர்மத் திற் கேற்பச் சூக்கும சரீரத்தோடு பூதசரீர மாகிய யாதனு சரீரத்தை எடுத்துக்கொண்டு நரகபோகங்களையும் அனுபவித்துவிட்டு, மீண் டும் வந்து இம்மத்திய லோகத்தில் பழய பிறவியிற் புகுகின்றதாதலானும், ஆன்மாக் களுக்கு அபரோக்ஷஞானம் உண்டாகும் வரை இப்பிரவிர்த்திக்கோர் முடிவில்லையாதலானும், மரணத்திற்குப் பின் மனிதர் நிலையைப்பற்றிப் பல பல மதங்கள் பலபலவாறு கூறித்தடுமாறு கின்றபடியினாலும், அவற்றின் உண்மையை இங்கு விளக்குவதற்காகவே சாக்கிர சொப்பன

அவஸ்தாத் திரயங்களை விழிப்பு உறக்கத்தி லடக்கி அவற்றைப் பிறப்பிறப்பிற்கு உவமை யாக்கினாரென்ப. இதனைத் "தூங்கையில் நமக் கோ தூலங்கிடுமுலகு சொப்பனம் பொய்போ லும், ஈங்கிது சாக்கிர உலகிதும் பொய்யா மினி யிவற்றினை யான்மா நீங்கிமற் றுலகில் நிலவு தல் பிரிதல் நிலையிலை நாடோறும் எங்கியு முறங்கல் விழித்தலுக் கொப்பா மிப் பிறப் பிறப்பாமே" என்ற ஞானசாகர தீபிகைச் செய்யுளாலும் அறிந்துகொள்ளலாம். (௬)

குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
உடம்பொ டுயிரிடை நட்பு. -- (?)

புக்கி லமைந்தின்று கொல்லோ வுடம்பினுட்
டுச்சி லிருந்த உயிர்க்கு.

பதவுரை.

உடம்பினுள் —(வாதமுதலானவைகளது வீடுகளாகிய) உடம்புகளுள்
துச்சிலிருந்த —ஒதுக்குக்குடியிருந்து வந்த
உயிர்க்கு —உயிருக்கு

புக்கில் —என்றைக்கும் இருப்பதாகிய
ஒரு வீடானது
அமைந்தின்று கொல்-(இதுவரையில் அமைந்
தில்லை போலும்

(கருத்து உடலுள்ளே ஒதுக்குக் குடி
யிருந்த உயிர்க்கு என்றுமிருக்க வீடமைந்த
தில்லை என்பதாம்.

உயிரானது அவ்வாத முதலான நோய்கள் அமைந்த காலத்திலே இருந்தும், கோபித்த காலத்திலே விட்டுப்போயும் ஒருடம்பிலும் நிலைபெறாமல் வருதலால் துச்சிலிருந்த வென்றார். பின்னே புறப்படாமல் புகுந்தேவிடுகிற இல் அமைந்ததாயின் பிறர் இற்களிலே ஒதுக்குக்குடி இராவென்பதாம். ஆகவே உயிரோடு கூடி நிற்பது ஒருடம்பும் இல்லையென்பது கூறப்பட்டது.

இதனால் அவ்வுடம்புகள் உயிருக்கு உரியவை அல்லவென்பது சொல்லப்பட்டது.

நாளெனவென்பது முதலாகிய எழுபாட்டுக்களாலும், யாக்கை நிலையாமை சொல்லப்பட்டது என்றறிக. (ட)

விசேஷ ஞானவிருத்தி.

அநித்தியமாகிய உடம்பு ஒன்றே அதன் காலவரைக்குத் தக்கவாறு குழந்தை, பாலன், யௌவனன், விருத்தன் என வெவ்வேறு பெயர் பெறுவதுபோல நித்தியமாகிய சுத்த சைதன்னியம் ஒன்றே மறதியினால் அஞ்ஞானத்தில் அழுந்தும்போது உயிர் என்றும், 'இது அஞ்ஞானம்' என்று அறிகின்றபோது சீவன் என்றும், மெஞ்ஞானத்தைப் பெற முயலும் போது ஆன்மாவென்றும், அது மெஞ்ஞானத்தைப் பெற்றுவிட்டால் பிரமம் என்றும், வெவ்வேறு பெயர் பெறுகின்றபடியானும், அத்தகைய முமூட்சுத்துவம் பெறுகிறத, கேதுவாகிய ஆன்மாவானது ஸ்தூல சூக்கும காரண சரீரங்களுக்கு வேறாயும் பஞ்சகோசங்

களுக்கு அப்பாற்பட்டதாயும் மூன்று அவஸ்தைகளுக்கும், சாட்சியாயும், சசிதானந்த சொரூபமாயும், இருத்தல்பற்றி அவ் ஆன்மா தங்கியிருக்கும் பிறந்திறந்துழலும் இயல்பினையுடைய உடம்பை நாயனார் 'துசசில்' என்றும், சர்வதுக்க நிவர்த்தியும் பரமானந்தப் பிராப்த்தியுமாகிய பேதமற்ற ஜீவேஸ்வர ஐக்கிய நிலையான வேறு ஒரு நித்தியமான வீடு ஆன்மாக்களுக்கு உண்டு என்பதை விளக்கும் பொருட்டே "புக்கில் அமைந்தின்று கொல்லோ" என்றும், கூறியருளினாரென்ப. இதனை "ஏகபரிபூரணமா யென்சொரூப மென்னுளத்தில் இறுகும வண்ணம் ஆகமங்கள் சொன்னபடி என்னை யகண் டார்த்தமா வறிந்தேனையா" என்ற கைவல்லிய மஹாவாக்கியத்தினாலும் காணலாம்.

34-ம் அதிகாரம் நிலையாமை
முற்றிற்று.

# 35-ம் அதிகாரம் துறவு.

அஃதாவது புறமாகிய செல்வத்திலும், அகமாகிய உடம்பிலும், உண்டாகியவற்றை அவைகளது நிலையாமையைப் பார்த்து விடுதலாம். அதிகாரம் அமைத்த முறைமையும் இதனாலே விளங்கும்.

**யாதனின் யாதனி னீங்கியா னோத**
**லதனி லதனி னிலன்.**

பதவுரை.

| | |
|---|---|
| யாதனின்யாதனின் | — (ஒருவன்) யாதொரு பொருளின் யாதொரு பொருளின் |
| நீஙகியான் | —நீங்கினான் (அவன்) |
| அதனின தனின் | — அப்பொருளினாலே அப்பொருளினாலே |
| நோதல் | —துன்பத்தை அநுபவித்தலை |
| இலன் | —உடையவனல்லன் |

(கருத்து) ஐம்பொறி விடயங்களை ஒவ்வொன்றாக விடின் விட்டவையால் துன்பமடையான் என்பதாம்.

இங்கே துன்பமென்றது இப்பிறப்பிலே அவைகளைத் தேடுதலாலும், காப்பாற்றலாலும், இழத்தலாலும், வருமவையும், மறுமையிலே பாவத்தால் வருமவையும் ஆகிய இருவகைத் துன்பங்களையும் ஆம். எல்லாப் பொருள்களையும், ஒருமிக்க விடுதலே தலைமையான துறவாகும், அப்படிக்கல்லாமல் ஒவவொன்றாக விட்டாலும் அவைகளால் வருந்துன்பம் அவனுக்கு இல்லையென்பது கருத்து. (௧)

விசேஷ ஞானவிருத்தி.

பஞ்சவிஷயங்களை நிக்கிரகஞ் செய்யாதவர்களுக்கு ஆன்ம விஷயமான அறிவு உண்டாவதில்லையாதலானும், அஃதின்றெனில் மெய்யுணர்வாலாகிய ஆன்மத்தியானம் உண்டாவதில்லையாதலானும், அஃதின்றெனில் சாட்

சாந் காரரூபமான சித்தசாந்தி உண்டாவ தில்லையாதலானும், அஃதின்றெனில் சித்த சாந்திக்குப் பயனாகிய ஜீவபரம ஐக்கிய மோட்ச சாதன சுகமும் உண்டாவதில்லையாதலானும், அவ்வாறு பஞ்ச விஷயங்களையும், ஒருங்கே நிக்கிரஞ்செய்தல் அகம்பிரம நிச்சயார்த்தி களுக்கேயன்றி எனையோர்களுக்கு அரிதாதல் பற்றி அவற்றுள் தன்வயப்படுதற்கேதுவாகிய ஒன்றையாவது முதலில் வசம் பண்ணிக் கொண்டால் மற்றை நான்கும் இலகுவாக வசம்பண்ணக்கூடும் என்கிற ஆரோபக்கிரம சாதனம்பற்றியே ஈங்கு "யாதெனின் யாதெ னின் நீங்கியான்" என்றும் உதாரணமாகக் காமத்தை நிக்கிரகஞ்செய்த ஒருவனுக்கு அது சம்பந்தமாகத் தோன்றக்கூடிய குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரியம் என்கிற துன்பம் எதுவுமே அணுகுவதில்லை என்கிற நிச்சயம்பற்றி "நோதல் அதனின தனினிலன்" என்றும் கூறினரென்ப. இதனை "ஐம்பொறி

யடக்க மிக்க அரிதெனில் அவற்றொன்றேனும் மொய்ம்புற அடக்கி நின்றால் முற்றுமாங் கொடுங்குங்கண்டாய்'' என்ற அத்தியாத்தும ஞானவிளக்கச் செய்யுளாலும் அறியலாம். (க)

வேண்டினுண் டாகத் துறக்க துறந்தபி
னீண்டியற் பால பல

பதவுரை.

துறந்தபின் —(எல்லாப் பொருள்களையும்) துறந்தபின்
ஈண்டு —(ஒருவனுக்கு) இப்பிறப்பிலே
இயற்பால —உண்டாகுமுறைமையுடைய
பல —பலவாம் [இன்பங்கள்
வேண்டின் —(அவ்வின்பங்களை) வேண்டினால்
உண்டாக —(காலம்) உண்டாக
துறக்க —(அப்பொருள்களைத்) துறக்கக் கடவன்

(கருத்து) துறந்தபின் உண்டாகும் பல இன்பத்தை வேண்டினுல் துறக்கக்கடவன்.

அவ்வின்பங்களாவன:-அப்பொருள்களுக்காக மனமும், வாக்கும், காயமும், அலையாது நிற்கையாலும், அவை நல்வழியிலே செல்லுதலாலும், வருவன். இளமையிலே துறந்தவன் அவ்வின்பங்களை நெடுங்காலம் அநுபவிப்பானுகலால் உண்டாகத் துறக்க வென்றபடி. இன்பமும் காலமும் வருவிக்கப்பட்டன. இப்பிறப்பிலே துன்பங்கள் இல்லாமற் போதலே அல்லாமல் இன்பங்களும் உண்டாமென்பதாம்.

## விசேஷ ஞானவிருத்தி.

மண்ணுசை பெண்ணுசை பொன்னுசை என்கிற ஆசை மூன்றனுள் நடுவணமைந்துள்ள பெண்ணுசை காரணமாகவே மற்றைய ஆசைகள் எழுந்து புத்திர பௌத்திர களத்திராதி சம்சார சாகரத்தில் மூழ்கவைத்து

அதிலிருந்து நீந்திக் கரையேறவொட்டாமல் அலக்கழித்து மூப்பும் பிணியும் முடுகிவரக் கூனிக்குறுகிக் கோலுங்கையுமாயத் தவித்துருண்டு மாண்டழிந்து ஒழிந்துங்கூட, அத்துடன் தொலையாமல் பின்னரும் அவ்வாசை காரணமாகவே ஆன்மாக்கள் பிறந்திறந்துழல்கிறபடியினாலும், 'காமமில்லையெனிற் கடுங்கேடெனும் நாமமில்லை நரகமும் இல்லையே' என்றபடி இவ்வளவு அல்லலுக்கும் ஆதியாயிருந்துவருகிற இப்பெண்ணாசையானது பாலப் பருவமுழுதும், அணுகாமல் மறைந்திருந்து பின்னரது எவ்வன பருவத்தில் வந்து பற்றிக் கொள்வதினாலும், அது பற்றுகின்ற எவ்வன பருவம் வருவதற்கு முன்னரே துறவியாக வேண்டுமென்கிற நியமம்பற்றி ஈங்குவேண்டின் (காலம்) உண்டாகத் துறக்க என்றும் அவ்வாறு துறந்தால் அதனால் அடையக்கூடிய இன்பம் அது அளவிட முடியாத பேரின்பம் என்கிற நிச்சயம்பற்றித் "துறந்தபின் ஈண்டி

யற் பால பல" என்றுங் கூறினாரென்ப. இதனைப் "பாலகனா யஞ்ஞானத் தழுந்துவனற் காளையாய்ப் பாவை மாராற் சாலவருந்துவன் விருத்தன்றானாகிக் குடும்பத்தாற் றளர்ந்து சாவான்" என்ற வாசிட்ட மகா வாக்கியத்தாலும் "நரைவருமென்றெண்ணி நல்லறிவாளர் குழவியிடத்தே துறந்தார்" என்ற நாலடியார் திருவாக்காலும் உணரலாம். (உ)

அடல்வேண்டு மைந்தன் புலத்தை விடல்
வேண்டிய வெல்லா மொருங்கு. [வேண்டும்

பதவுரை.

ஐந்தன் —(முத்தியை அடைவோர்க்கு செவி முதலாகிய ஐம்பொறிகளுக்கு உரிய
புலத்தை — ஓசை முதலாகிய ஐம்புலன்களையும்
அடல்வேண்டும் — கெடுத்தல்வேண்டும் (கெடுக்கும்போது)

வேண்டிய வெல்லாம் — (அப்புலன்கள் அநுபவித்தற் பொருட்டுத்) தாம்படைத்த பொருள்களையெல்லாம்

ஒருங்கு —ஒருமிக்க

விடல்வேண்டும்—விடுதல்வேண்டும்

(கருத்து) ஐம்பொறிகளுக்குரிய புலன்களைக் கெடுத்தல்வேண்டும் என்பதாம்.

புலன்களை அநுபவித்தலைப் புல னென்றார். அவ்வநுபவிப்பு மனத்தைத் துன்பத்தினுலும், பாவத்தினுலும், தேடப்பட்டுவரும், பொருள் களின்மேல் அல்லாமல் முத்திவழியாகிய போக ஞானங்களிலே செல்லவொட்டாமை யால் அடல்வேண்டும் என்றும், அம்மனம் அப்பொருள்களிலே சென்றால் அவ்வநுபவிப்பு வளர்வதல்லது கெடுக்கப்படாமையால் வேண் டிய வெல்லா மொருங்கு விடல்வேண்டும் என்றும் சொல்லினுர்.

## விசேஷ ஞானவிருத்தி.

அண்டம் என்கிற உலகும், பிண்டம் என்கிற உடலும், சரம் என்கிற உயிரும், அசரம் என்கிற சடங்களும், ஐம்பூதம் என்கிற கூறுபாட்டினலே உண்டாய் அவற்றை நுகரத்தக்க ஐம்பொறிகளின் வாயிலாகவே புலன்களாக அனுபவிப்பதாயினும், அவை அனைத்தும் பிரமத்தினிடத்து ஆரோபமாகத் தோற்றப்படுகிற வெறுந்தோற்றமேயன்றி எதார்த்தமல்ல. என்கிற திடஞானம் பெறவேண்டுமானல் அவற்றிற்குக் காரணமாயுள்ள பஞ்சேந்திரியங்களையும் ஒடுக்கி ரேசக பூரக வாயுக்களைத் தடுத்துக் கும்பித்திருந்து பிராணவாயுவைச் சுழுமுனையில் நிறுத்தித் தமது சரீரத்துள்ளே அமைந்திருக்கிற மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி ஆஞ்ஞை என்கிற ஆறுதாரங்களையும் அறிந்து அவற்றில் பத்மதளம் அதி

தேவதை அக்கரங்களாகிய பொருளை உணர்ந்து மூலாதாரத்தில் அக்கினியைச் சொலிப்பித்து நாபித்தானத்தில் குண்டலி சத்திசொரூபமாயிருக்கிற அமுதத்தை உருகப்பண்ணி மற்றைய ஆதாரங்களில் அதோமுகமான பதுமங்களை அததனைக்கொண்டு பேதித்து மேலேசென்று விந்துத்தானத்தின் வழியே இறங்கி ஆங்குப் பெருகுகின்ற அமுததாரையைத் தமது சரீர முற்றும் நிறையச்செய்து அசம்பிரமாதி தியானமாய் அமரவேண்டுமென்பதுபற்றி "அடல் வேண்டும் ஐந்தன்புலத்தை" என்றும், அந்நிலையினின்று சிறிது தவறினும், மோசம் என்பதுபற்றி "விடல்வேண்டும் வேண்டியவெல்லாம் ஒருங்கு" என்றும், கூறினரென்ப. இதனை "ஆங்காரமுள்ளடக்கி ஐம்புலனைச் சுட்டறுத்துத் தூங்காமல் தூங்கிச் சுகம்பெறுவதெக் காலம்" என்ற பட்டினத்தடிகளது திருவாக்காலும் உணரலாம். (௩)

இயல்பாகு நோன்பிற்கொன் றின்மை யுடைமை
மயலாகு மற்றும் பெயர்த்து.

பதவுரை.

நோன்பிற்கு—தவம்செய்வோர்க்கு
ஒன்று —பற்றப்படுவது ஒருபொருளும்
இன்மை —இல்லாதிருக்கை
இயல்பாகும் —சுபாவமாகும்
உடைமை —(ஒன்ருயினும்)உடைமை
பெயர்த்து —(அத்தவத்தைப்)போக்குதலால்
மற்றும் —மீண்டும்
மயலாகும் —மயக்கத்துக்கு ஏதுவாகும்.

(கருத்து) தவஞ்தோர்க்குப் பற்றற்றிருப்பது இயல்பாகும். என்பதாம்.

நோற்பவரை நோன்பு என்றும், மயலுக்கு ஏதுவை மயல் என்றும், சொல்லுதலால், ஆகு பெயர்கள். எல்லாப் பொருள்களையும் விட்டு ஒருபொருளை விடாத விடத்தும், அது

சார்வாக விடப்பட்டவையெல்லாம் திரும்பி வந்து தவத்துக்கு விரோதமாய் மனக்கலக்கம் செய்யுமென்பது கருத்து.

இவை நான்குபாட்டாலும் எனதென்னும் புறப்பற்று விடுதல் சொல்லப்பட்டது.

## விசேஷ ஞானவிருத்தி.

நூற்கப்படுவது நூலென்றாலும், அந்நூலை நூற்பதற்குப் பஞ்சு முதலிய சாதனங்களின்றி அமையாததுபோல் மனம் பொறிவழிச் செல்லாமல் நிறுத்துதல்பொருட்டுச் சிரவணமனன நிதித்தியாசனங்களினாலே நோற்கப் படுவன வாகிய நோன்பிற்கும், அதுபற்றிக் கொள்ளு தற்கேற்ற ஒருசாதனம் வேண்டுமென்றும், அசசாதனம் வாச்சியார்த்தத்தினின்று வேறு பட்டு அகமுகநாட்டமாக நிச்சயார்த்த மான தன்னையே பிரம மென்று ஸ்திரம் பண்ணி அவ்வஸ்துவைப் பற்றுதலைத் தவிரப் புறமுக நாட்டமாகச் சரீராதிப் பிரபஞ்சங்களில் அனுப்

பிரமாணமாயினும், பற்றக்கூடா தென்பது பற்றி இங்கே நாயனாரும் "இயல்பாகும் நோன்பிற்கொன்றின்மை" என்றும், அவ்வாறு புறமுகமாக மனது ஒன்றைப்பற்றினால் அது அற்பமான பஞ்சினால் நூலும் அந்நூலினால் வஸ்திரமும் அவ்வஸ்திரத்தினால் இடமும், அவ்விடத்தினால் வீடும் அவ்வீட்டினால் பெண்ணும் அப்பெண்ணினால் பொருளும் அப்பொருளினால் வினையும் அவ்வினையினால் ஜனன மரணங்களும், என விரிந்துகொண்டே போவதன்றி அதற்கோர் எல்லை இல்லை என்பது பற்றி "உடைமை மயலாகும் மற்றும் பெயர்த்து" என்றும், கூறினரென்ப. இதனைக் 'கோமணம் வேண்டுமென்று குழம்பிய ஞானியத்தால் பூமண மாதராசை பொருந்திடக் குடும்பனானான்" என்ற லன்யாலக் கிரம விளக்கச் செய்யுளாலும், "கேளாகின்ற னிவனென்ன வொருவன் கிட்டாமையினாலே தோளாலுயரக் கையெடுத்துத் தோன்ற னின்று

சொல்கின்றோம் மீளாதான வசங்கற்பம் விமல மான பரமபதம் வாளாவுள்ளே பாவிக்க மாட் டாரதனை என்னம்மா" என்ற வாசிட்ட மகா வாக்கியத்தாலும் அறிந்துகொள்ளலாம். (ச)

மற்றுந் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்க லுற்றார்க் குடம்பு மிகை.

பதவுரை.

பிறப்பறுக்க லுற்றார்க்கு — பிறவியை நீக்குமுயற்சியை மேற்கொண்டவருக்கு
உடம்பும் — (அதற்கு உதவியாகிய) உடம்பும்
மிகை — அதிகமாம். (ஆனபின்)
மற்றும் — அதற்கு மேலும்
தொடர்ப்பாடு — சம்பந்தமில்லாதவையுஞ் (சில பொருள்கள்) பற்றப்படுதல்
எவன் — என்னாகும்.

(கருத்து) பிறவியை நீக்க முயல்வோர்க்கு உடல் பாரமாம். அங்ஙனமாயின் மற்றவையா லென்ன பயன் என்பதாம். கொல் — அசை.

பொதுப்பட உடம்பென்றதனால், உரு உடம்பும், அரு உடம்பும் கொள்ளப்படும். அரு உடம்பு இந்திரிய வுணர்வுகளோடும், பிராணவாயுக்களோடும், காமவினை விளைவுகளோடும் கூடிய மனம்—இது சூட்சும சரீரமெனவும்படும். (ரு)

## விசேஷ ஞானவிருத்தி.

உடலிலிருந்து உலகும் உலகிலிருந்து சம்ஸ்காரமும் சம்ஸ்காரத்திலிருந்து உணர்வும் உணர்விலிருந்து நாமரூப விபரீதமும் அவ் விபரீதத்தி லிருந்து அவித்தா காரணமான பொறிகளும், அப்பொறிகளிலிருந்து புலன்களும், அப்புலன்களிலிருந்து வேட்கையும், அவ்வேட்கையிலிருந்து பற்றும் அப்பற்றிலிருந்து பவமும், அப்பவத்திலிருந்து பிறப்பும், அப்பிறப்பிலிருந்து மூப்பு வலி துன்பம் கவலை ஏக்கம் முதலிய காரணங்களுடன் தோய்ந்த மரணமும், அம்மரணங் காரணமாக

மறுபடி ஜெனனமும் என இவ்வாறு சக்கரஞ் சுழல்வதுபோன்று மாறி மாறிச் சுழன்று கொண்டிருக்கிற அனர்த்தங்களுக்கெல்லாம் உடம்பே மூலகாரணமாதல்பற்றி ஈண்டு ஆன்மாக்களுக்கு மோட்சசாதானத்திற் கேதுவாயிருந்துவருகிற இவ் அரிய உடம்பையும், முமூட்சுத்துவ முடையார்களுக்கு ஒரு பாரமென விளக்கிப் "பிறப்பறுக்கலுற்றார்க்கு உடம்புமிகை" என்றும், அவ்வாறு உடம்பே மிகையாம்போது அது சம்பந்தமான பிரபஞ்சாதி விஷயங்களெல்லாம் மிக அனர்த்தமான மிகை என்பதை விளக்கவும் வேண்டுமோ என்கிற நியமம்பற்றி "மற்றுந் தொடர்ப்பா டெவன்கொல்" என்றும், கூறினாரென்ப. இதனை எல்லாப்படியாலு மெண்ணினு லிவ்வுடம்பு பொல்லாப் புழுமலிநோய் புன்குரம்பை—நல்லார் அறிந்திருப்பா ராதலினால் ஆங்கமல நீர்போல் பிறிந்திருப்பார் பேசார் பிறர்க்கு" என்ற ஔவையார் வாக்காலும் அறியலாம்.

யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோ
துயர்ந்த வுலகம் புகும். [ர்க்

பதவுரை.

யானென தென்னும் — (தானல்லாத வுடம்பை) யானென்றும் (தன்னோடு சம்பந்தமில்லாத பொருளை எனதென்றும் நினைத்து அவைகளிலேபற்றுச் செய்தற்கு ஏதுவாகிய

செருக்கு —மயக்கத்தை
அறுப்பான் —கெடுத்தவன்
வானோர்க்கு —தேவர்க்கும்
உயர்ந்த —அடைதற்கரிதாகிய
உலகம் —முத்தியுலகத்தில்
புகும் —செல்லுவான்

(கருத்து) நான், எனது என்னும் மயக்கமற்றவன் முத்தி அடைவான் என்பதாம்.

மயக்கம்—அறியாமை. அதனைக் கெடுத்லாவது:—குரு உபதேசத்தாலும், யோகாப்பியாசத்தாலும், அவ்வுடம்பை யானல்லவென்

றும், அப்பொருளை எனதல்லவென்றும், தெளிந்து அவைகளிலே பற்றைவிடுதல். வானோர்க்குமென்னும், சிறப்பும்மை விகாரத்தால் தொக்கதாதலின் வருவிக்கப்பட்டது.

இதனால் இருவகைப்பற்றையும் விட்டவர்க்கே மோக்ஷம் உண்டென்பது சொல்லப்பட்டது. (சு)

## விசேஷ ஞானவிருத்தி.

அண்டபிண்ட சராசரங்கள் அனைத்தினும், சர்வபரிபூரணமாக நிறைந்து நின்று நான் நான் என்று துலங்கிக்கொண்டிருக்கிற சுயம்பிரகாசமான சுத்த சைதன்னிய பிரமவஸ்து ஒன்றே உடம்பின்கண் அந்தக்கரணமென்கிற மதிலினிடத்து மாட்டப்பட்டிருக்கிற அவ்வியத்த மென்கிற கண்ணாடியினுள் பிரதிபலித்து ஜீவனாகத்தோன்றி அது புறமுகநாட்டமாக நான் கண்டேன், நான் கேட்டேன், நான் முகர்ந்தேன், நான் உணர்ந்தேன், நான்

உண்டேன், நான் தொட்டேன் என்று அகங்கரித்தும், எனது கண், எனது காது, எனது மூக்கு, எனது வாய், எனது உடைமை என்று மமகரித்தும், சிருஷ்டிகாலந் தொடங்கிப் பிறந்திறந் துழல்கின்றபடியினால் அவ்வுண்மை தோன்ற "யானெனதென்னும் செருக்கு" என்றும், இவ்வாறு அந்தக்கரண பிரதிபிம்ப சைதன்னியமாகிய ஜீவன் தனது அறிவு என்கிற கடப்பாரையினாலே அந்தக் கரணமென்கிற மதிலை இடித்துப் பாழாக்கிவிட்டால் அதில் மாட்டப்பட்டிருக்கிற அவ்வித்தயமென்கிற அக் கண்ணாடியும் பல சுக்கலாகிப் பாழடையும்போது அதில் பிரதிபலித்துத் தோன்றக்கூடிய சிதாபாசன் என்னும் ஜீவனும் தோற்றப்படாமல் பழய பிம்பப்பொருளாகிய பிரமமே பிரமமாக மிஞ்சி நிற்கும் என்கிற உண்மைதோன்றச் "செருக்கறுப்பான் வானோர்க் குயர்ந்த உலகம்புகும்" என்றும், கூறினாரென்ப. இதனை "நானென்றெனா

தென்று நாடுமக மொழிந்தால் வானோர்க் குயருலகம் வாய்க்குமிது நிச்சயமே" என்ற, சிவோற்பத்தி விளக்க வாக்கியத்தாலும், "யான் றெனனுஞ்சொல் லிரண்டுங் கெட்டாலன்றி யாவருக்குந் தோன்றாது சத்தியம்" என்ற கந்தரலங்கார வாக்கியத்தாலும் அறியலாம்.

பற்றி விடாஅ விடும்பைகள் பற்றினைப்
பற்றி விடாஅ தவர்க்கு.

பதவுரை.

பற்றினை—(இருவகைப்) பற்றுக்களையும்
பற்றி —இறுகப்பற்றி
விடாதவர்க்கு—விடாதவரை
இடும்பைகள் —துன்பங்கள்
பற்றி —இறுகப்பற்றி
விடா —விட்டு நீங்காவாம்.

(கருத்து இருவகைப் பற்றையும் விடாதவர்களைத் துன்பங்கள் விடா என்பதாம்.

இறுகப்பற்றல் - ஆசைமிகுதல். விடாதவர்க்கென்பது வேற்றுமை மயக்கம்.

இதனால் பற்றுக்களை விடாதவர்க்கு மோக்ஷம் இல்லையென்பது சொல்லப்பட்டது.

விசேஷ ஞானவிருத்தி.

அந்தக்கரணத்தின் பிரதிபிம்ப சைதன்னியமாகிய ஜீவன், என்பு, தோல், நரம்பு, சத்துமாம்ஸம், சுக்கிலம், சுரோணிதம், சிலேத்துமம், கண்ணீர், மலம், மூத்திரம், வாதம், பித்தம், கபம் முதலிய அசுத்தங்களால் போர்த்தப்பெற்ற தனது உடம்பையே நான் என்று அகங்கரிப்பதும், மனைவி, மக்கள் சுற்றம், பொருள், காமம், உலோபம், அதிகாரம், வேட்கை முதலிய அனித்தியங்களால் சார்ந்தப்பெற்ற உலகவாழ்வையே எனது என்று மமகரிப்பதும், ஆகிய இருவகைப் பற்றுக்களிலும், தோய்ந்து அவை காரணமாக விசிரிம்

பித்த மனமானது தனது தேகத்தையே ஒரு தோணியாக்கி ஐம்பொறிகளையே ஐந்து சுக்கான்களாக அதிற்பூட்டி ஐம்புலன்களையே ஐவகைச் சரக்குகளாக அதிலேற்றிச் சினக் குறும்பையே பாய்மரமாக உயர்த்தி மாயாகானப் பிரபஞ்சமாகிய கடல் நிடல் தீவாந்திரங்களில் சஞ்சரித்துக்கொண்டு திரிதல்பற்றி அவற்றைப் பற்று எனத்துலக்கிப் "பற்றினைப் பற்றி விடா அதவர்க்கு" என்றும், அப்பற்றின்காரணமாக நல்வினை தீவினை என்னும் இரண்டு வினைகளையும், ஈட்டிப் பிறந்தும், இறந்தும், நல்வினையின் முடிவில் தீவினையின் பயனையும், தீவினையின் முடிவில் நல்வினையின் பயனையும், கடலில் தோன்றி மறையும், அலைகளைப் போன்று தோன்றி மறைந்து அனுபவித்துக் கொண்டே செல்லுதற்கோர் எல்லையின்றாதல் பற்றி அவற்றை இடும்பை என விளக்கிப் "பற்றிவிடாஅ விடும்பைகள்" என்றும் கூறினாரென்ப. இதனைப் "பிறந்தோருறுவது பெரு

இய துன்பம் பிறவாருறுவது பெரும்பேரின்பம் பற்றின் வருவது முன்னது பின்னது அற்றோருறுவது ' என்ற மணிமேகலைச் செய்யுளாலும் உணர்ந்துகொள்ளலாம். (எ)

தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர்.

பதவுரை.

தீரத்துறந்தார்—முழுதுந் துறந்தவர்
தலைப்பட்டார்—(முத்தியை) அடைந்தவராவார்
மற்றையவர் —அப்படித் துறவாதவர்
மயங்கி —மயக்கமுற்று
வலைப்பட்டார்—(பிறப்பாகிய) வலையிலே அகப்பட்டவராவார்.

(கருத்து) முற்றத் துறந்தவர்கள் முத்தி பெறுவர், துறவாதவர், பிறப்பில் அழுந்திக் கிடப்பார் என்பதாம்

முழுதுந் துறத்தலாவது பொருள்களையும் இருவகை உடம்புகளையும் வெறுத்துப்பற்றற விடுதல். அப்படித் துறவாமையாவது அவை களிலே ஒன்றனிடத்தே சிறிதாயினும் பற்றுச செய்தல். துணிவுபற்றி தலைப்பட்டார் என்றும் பொய்வழிகண்டே பிறப்புவலையுள் அகப்படு தலால் மயங்கி என்றும் சொல்லினர்.

## வி.சேஷ ஞானவிருத்தி.

ஐம்பொறிகளாகிய முரட்டுக்குதிரைகள் ஐம்புலன்களாகிய கடிவாளங்களுக் கடங்கா மல் தேகமென்னும் தேரின்மீது வீற்றிருக் கின்ற மனமென்னும் அரசனை உலகவிஷய விபகாரங்களென்னும், சம்சாரபந்தக் காட்டி னுள் நாளுபக்கங்களிலும், இழுத்தடித்து அவ் அரசனை நற்கதி அடையுமாறு விடாமல் தடு மாறும்படி செய்துகொண்டே இருப்பதால் அறிவென்னும் ஆசான் மதியென்னும் மந்திரி யைக்கொண்டு கடிவாளங்களைத் தான் கையில்

பிடித்துக் குதிரைகளின் கொட்டத்தைமடித்து அவைகளை நடத்திக்கொணர்ந்து பிரமான்ம சைதன்னிய பதியிலே சேர்ப்பிக்கச் செய்தா லன்றி நிவர்த்தியின் முதலால் சர்வான்மாக் களும், இவ்விரகஸியத்தை அவசியம் உணர்ந் துய்யக் கடமை என்ற துணிபுபற்றித் "தீரத் துறந்தார் தலைப்பட்டார்' என்றும், ஆவ்வாறு உணர்ந்துய்யும் மார்க்கத்தை நாடாமல் தேக மே சித்தி போகமே முத்தி என மருண்டு பேதமையிற் செய்கையும், செய்கையில் உணர் வும், அவ்வுணர்வில் உருவும், உருவில் ஊறும், அவ்வூறினது சார்பாக நுகர்ச்சி, வேட்கை, பற்று, கருமமும், அக்கருமத்தினது சார்பாகத் தோற்றம், அழிவு முதலியனவும் அடுக்கடுக்கா யமைந்து அல்லற்படுவதை உள்ளவாறறிந்த நாயனார் அத்தகைய அபக்குவ ஜீவான்மாக் களுக்காகப் பச்சாத்தாபமடைந்து "மயங்கி வலைப்பட்டார் மற்றையவர்" என்றும் கூறினா ரென்ப. இதனை "ஒன்றிய மனத்தினாலே

யானுரைக்கின்ற உண்மை நன்றிதென்றுணராயாயின் நாசமே அடைதி" என்று பகவான் பச்சாத்தாபத்துடனே பார்த்தனுக்குபதேசித்த கீதாசார வாக்காலும் உணரலாம். (அ)

பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கு மற்று
நிலையாமை காணப் படும்.

பதவுரை.

பற்றற்ற கண்ணே — (ஒருவன் இருவகைப்)பற்றுக் களையும் அற்றபொழுதே அப் பற்றறுதியானது)
பிறப்பு —(அவனது) பிறவியை
அறுக்கும் —ஒழிக்கும்
மற்று — அவை அறாதபொழுது
நிலையாமை — (அவற்றால் பிறந்தும், இறந்தும், வருகிற நிலையாமையானது
காணப்படும் — அறியப்படும்.

(கருத்து) பற்றற்ற பொழுதே பிறப்பறும், பற்றுற்றபொழுதே பிறப்புறும் என்பதாம்.

காரணம் அற்றபொழுதே காரியமும் அற்றதா முறைமைபற்றிப் பற்றற்ற கண்ணே என்று விரைவுப் பொருளமையக் கூறினர்.

இவை இரண்டு பாட்டாலும் அவை இரண்டும் சேர்த்துச் சொல்லப்பட்டது. (கூ)

## விசேஷ ஞானவிருத்தி.

பிருதிவிமயமாகிய அகங்காரமும், அப்புமயமாகிய சித்தமும், தேயுமயமாகிய புத்தியும், வாயுமயமாகிய மனமும், இவை அனைத்தினுக்கும், இடங்கொடுத்த வண்ணமா யிருக்கிற ஆகாச மயமாகிய உள்ளமும் கூடியே அந்தக்கரணமெனப் பெயர்பெற்று ஜீவான்மாக்களை உலக காரியங்களில் பிரவேசிக்குமாறு செய்கின்றபடியானும், அறிவு ஆங்கே சிற்றறிவாகத்தோன்றி அவற்றைத் தடுக்கும்

போது சிறிய தீபச்சுடரைக் காற்றணைப்பது போன்று காற்றுமயமாகிய மனது அச்சிற் றறிவை அணைத்துவிட்டு மேலும் மேலும் நிலையற்றதாகிய உலக காரியங்களிற் பிரவேசித்துப் புண்ணிய பாவங்களை ஈட்டி அவைகாரணமாகப் பிறந்திறந்துழல்கின்றனபற்றி ஈண்டு 'மற்றும் நிலையாமை காணப்படும்" என்றும், அறிவு ஆங்கே பேரறிவாகத்தோன்றி அவற்றைத் தடுக்கும்போது பெரிய அக்கினிச சுடருக்கு அது சுடர்விட் டெரியக் காற்று உதவிசெய்வதுபோன்று அப்பேரறிவின் வசப்பட்டு உலக காரியங்களில் பிரவேசிப்பதிலிருந்து திரும்பி இலகுவாக ஆன்ம சாட்சாத்கார மடைதற்கனுகூலமாவது நிச்சயம் ஆதலாலும், ஆன்மஞானமானது, சத்தியமான பிரமத்தை அடையச்செய்வது சத்தியமாதலால் அவ் ஆன்மஞானத்திற்கே சத்தியம் என்ற பெயர் வந்துள்ளதாதலானும், இத்தகைய துணிவு பற்றிப் "பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும்" என்றும், கூறினரென்ப. இதனைப் "பொய்ம் மாயப் பெருங்கடலில் புலம்பாநின்ற புண்ணியங்கா டீவினைகா டிருவே நீங்கள் இம்மாயப்

பெருங்கடலை அரித்துத் தின்பீர்க் கில்லை"
என்ற திருநாவுக்கரசுநாயனார் தேவாரத் திருப்
பதிகத்தாலும் தெரிந்துகொள்ளலாம். (௬)

**பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்**
**பற்றுக பற்று விடற்கு.**

**பதவுரை.**

பற்றற்றான் —(எல்லாப் பொருள்களையும் பற்றி நின்றே) பற்றில்லாத
பற்றினை —(கடவுளாலே சொல்லப்பட்ட) முத்திவழியை
பற்றுக—(இதுவே நல்வழியென்று) மனத்திற் கொள்ளக் கடவர் (கொண்டு)
அப்பற்றை —அதனிடத்து உபாயத்தை
பற்றுக —மனத்தினாலே செய்யக்கடவர்
பற்று —(விடாது வந்த) பற்று
விடற்கு —விடுதற்கு

(கருத்து) பற்றற்றான் சொல்லிய முத்தி வழியைப் பற்றக்கடவர் என்பதாம்.

கடவுள் வாழ்த்துக்கேற்ப இங்கும் பொது வகையினாலே பற்றற்றான் என்றார். அதனிடத்து உபாயமும், தியானமும், சமாதியும் ஆம். விடாதுவந்த பற்று என்பது அநாதியாய் வரும் உடற்பற்றமென்ப.

இதனால் அப்பற்று விடுதற்கு உபாயம் சொல்லப்பட்டது.

## விசேஷ ஞானவிருத்தி

கடலில்லாமல் உப்பில்லையாயினும், அவ்வுப்புக் கடலோடு சம்பந்தப்படாததுபோலும், மனதில்லாமல் சொப்பனம் இல்லையாயினும், அச்சொப்பனம் மனதோடு சம்பந்தப்படாதது போலும், தானல்லாமல் நினைவில்லையாயினும், அந்நினைவு தன்னோடு சம்பந்தப் படாதது போலும், ஆகாயமில்லாமல் காற்று, நெருப்பு, நீர், மண் இல்லையாயினும், அவைகள் அவ்வாகாயத்தோடு சம்பந்தப்படாதது போலும், பிரமவஸ்து இல்லாமல் பிரபஞ்சஙகள் இல்லையாயினும், அப்பிரபஞ்சங்கள் பிரமவஸ்தோடு சம்பந்தப்படாதல் பற்றி இங்கே நாயனாரும்,

அப்பிரம வஸ்துவைப் "பற்றற்றான்" என்றும், சர்வஆன்மாக்களினது இதத்தைக் கருதியே ஈஸ்வரன் வேதாகம சுருதி விரதாதிகளை அருளிச் செய்திருக்கின்றானாதல்பற்றி இங்கே அவ் வேதாகம சுருதி விரதாதிகளைப் "பற்று" என்றும், அப்பற்றில் சிரத்தையற்ற அபக்குவ ஆன்மாக்களுக்கே உடற்பற்று, உலகப்பற்று முதலிய அவித்தா காரணப் பற்றுக்கள் சாருமாதல் பற்றி இங்கே "பற்று விடற்கு" என்றும் கூறினாரென்ப. இதனை "என்னுருவிற் புணராதே என்னைவிடத் தோன்றாதே மன்னுயிர்களையென்றும் சார்ந்துவரும் வகை கேட்கில் உன்னுமிட மெங்குநிறைந் தொளிர்கின்ற வானெங்குந் துன்னியற்கை செறிகாற்றின் தோற்றம்போல் சுடர்வேலோய்" என்ற பகவற்கீதா மகா வாக்கியத்தாலும் உணரலாம். (ய)

35-ம் அதிகாரம் துறவு முற்றிற்று.

# 36-ம் அதிகாரம்.

## மெய்யுணர்தல்.

அஃதாவது:—பிறப்பு, வீடுகளையும், அவற்றின் காரணங்களையும் *விபரீத சந்தேகங்களால் அல்லாமல் உண்மையால் அறிதல். இதை வடநூலார் தத்துவ ஞானமென்பார். இதுவும் பற்றற்றான் பற்றினைப் பற்றிய விடத்தே உண்டாவதாகையால், அக்காரண வொற்றுமை பற்றித் துறவின் பின் வைக்கப்பட்டது.

பொருளல் லவற்றைப் பொருளென் றுணரு
மருளானா மாணாப் பிறப்பு.

---

* விபரீத ஞானமானது கயிற்றைப் பாம்பென்று அறிதல் போல்வன. சந்தேக ஞானமாவது கயிறோ பாம்போ வெனத் துணியாதது போல்வன.

பதவுரை.

பொருளல்லவற்றை—மெய்ப் பொருள்களில் [லாதவைகளை

பொருளென்று—மெய்ப்பொருள்களென்று

உணரும்—அறிகின்ற

மருளான்—விபரீத ஞானத்தினாலே

மாணாப்பிறப்பு—மாட்சிமைப் படாத பிறவி (இன்பமில்லாத பிறவி யென்றபடி)

ஆம்—உண்டாகும்

(கருத்து) பொய்ப் பொருள்களை மெய்ப் பொருளென்றெண்ணு மயக்கத்தாற் பிறப்புண் டாம். என்பதாம்.

இங்கே பொருளல்லவற்றைப் பொருளென்றுணர்தலாவது, மறுபிறப்பும், இருவகைப் பயன்களும், கடவுளும், இல்லையென்றும், மற்றும் இப்படிப் பட்டவைகளைச் சொல்லுகிற மயக்கநூல் வழக்கத்தை மெய்ந்நூல் வழக்கமென்று துணிதலும். நரகர், விலங்கு, மக்கள், தேவர் என்கிற நால்வகைப் பிறப்புக்

களிலும் உள்ளது துன்பமேயாதலால் மாணைப் பிறப்பு என்ருர். இதனால் பிறப்புத்துன்ப மென்பதும், அதற்கு முதற்காரணம் விபரீத ஞானமென்பதும் சொல்லப்பட்டது.

## விசேஷ ஞானவிருத்தி.

சுத்த சைதன்னிய நித்திய வஸ்துவாகிய பிரமத்தினிடத்து அவாந்திரமா யுள்ள ஒரு வித சத்தியே மாயை எனப் பெயர்பெற்று ஆகாயத்தில் நீல முதலிய பல வண்ணமும், கோலமுதலிய பல வடிவமும், தோன்றினற் போன்று பிரமச் சாயையையே உலகாகத் தோன்றுமாறு செய்வித்துக் கொண்டிருத்தல் பற்றியும், பிரத்தியட்சமான கடத்தைக் கொண்டு அக்கடத்தை ஆக்குதற்கோர் கட சத்தி அக்கடத்தினுள் அடங்கி யிருக்கிறதென் று அனுமானித்தாலும், அக் கடமே அனித்திய மாகும்போது அக்கடசத்தியும் அனித்திய மாய்க் கடத்திற்கும், கடசத்திக்கும், முதற்கார ணம் கூடமாயிருக்கும் கடசத்தியோடு கூடிய

மண்ணே என்று தெளிவதுபோலவே இவ்வுலகு அனித்தியமாகும்போது உலகாகப் பரிணமித்துத் தோன்றுமாறு செய்யவல்ல உலக சத்தியாகிய மாயையும், அநிர்வசனீயமாய், உலகிற்கும், உலக சத்தினுக்கும், முதற்காரணம் பிரமமே என்று உணரவல்ல அபேதஞான ஆன்மாக்களே பிரமான்ம ஐக்கியம் பெறுவார்கள் என்ற துணிபுபற்றியும், அப்பிரமத்தைத் தவிர மற்றை அனைத்தையும் "பொருளல்லவற்றைப் பொருளென்றுணரும் மருள்" என்றும், அவ்வாறு மருளுந்தன்மையே ஓயாத தனுகரண புவன போகங்களையும் மாயாத பிறப் பிறப்புக்களையும், தந்துகொண்டிருத்தல்பற்றி "மருளானு மாணாப்பிறப்பு" என்றும், கூறினரென்ப. இதனை "வாராயென்மகனே தன்னை மறந்தவன் பிறந்திறந்து தீராத சுழல்காற்றுற்ற செத்தைபோல் சுற்றிச் சுற்றிப் பேராதகால நேமிப் பிரமையிற் றிரிவன் போதம் ஆராயுந் தன்னைத் தானென்றறியுமவ் வளவுந்தானே" என்ற கைவல்லிய மகாவாக்கானும் காணலாம்.

**இருணீங்கி இன்பம் பயக்கு மருணீங்கி**
**மாசறு காட்சி யவர்க்கு.**

**பதவுரை.**

மருள் — அவ்விபரீதஞானத்திலிருந்து
நீங்கி —நீங்கி
மாசறு —குற்றமற்ற
காட்சியவர்க்கு—மெய்யறிவை யுடையவராயினவர்க்கு அம்மெய்யறிவானது
இருள் —பிறவியை
நீங்கி —நீங்கச் செய்து
இன்பம் —முத்தியை
பயக்கும் —கொடுக்கும்

(கருத்து) விபரீத ஞானத்தை விட்டோர்க்கு முத்தி இன்பம் உண்டு என்பதாம்.

இருள்—நரகம். அது தன் காரணமாகிய பிறவிக்கு ஆகுதலால் ஆகுபெயர். நீங்கி என்னுந் தன்வினை நீக்கியென்னும் பிறவினைப் பொருளில் வந்தது மாசறுகாட்சி—கேவல ஞானம் இதனால் வீடாவது உயர்வொப்பில்

லாத இன்பமென்பதும், அதற்கு நிமித்த காரணம் கேவலப் பொருளாகிய பிரமமென்பதும் சொல்லப்பட்டன.

## விசேஷ ஞானவிருத்தி.

கிளிஞ்சலில் வெள்ளியும் கயிற்றில் அரவும், கானலில் நீரும், தாணுவில் புருடனும் போன்று சர்வசாட்சியாகிய சுத்த பிரமத்தினிடத்து உபாதி பேதங்களால் தோற்றப்படுகிற இவ் உலகும் உலக காரியங்களும், என்றும் பொய்யே யன்றி மெய்யல்ல எனத் துணிந்து கிளிஞ்சலை வெள்ளி என்று பேதப்படுகிற விபரீத ஞானத்தையும், கிளிஞ்சலோ வெள்ளியோ வென்று மிரளுகிற சந்தேக ஞானத்தையும், அறவே தொலைத்து வெள்ளியல்ல கிளிஞ்சலே என்று திடம் பெறுவது போலவே ஆகாயத்திலிருக்கும் சூரியன் கடத்திலிருக்கும் ஜலத்தில் பிரதிபலிப்பதுபோல் அந்தக்கரணவச் சின்னர்களாகிய ஜீவர்களிடத்தில் மலினசலப் பிரதிபிம்பமாய்ப் பிரதிபலித்

றாக்கொண்டிருக்கிற பரிபூரண சைதன்னிய பிரமமே நான் என்று அதில் லயமடைந்து அனைத்துந்தானாய்க் கண்டுகளிக்கின்ற திட ஞான அதிகாரிகளின் பெருமைதோன்றஇங்கே அவர்களை "மருணீங்கி மாசறுகாட்சியவர்க்கு" என்றும், அத்தகைய திடஞானமற்ற ஜீவான்மாக்களே இருள்மயமாயிருக்கிறமலமூத்திராதிகளான ஆபாசங்கள் பொதிந்த அன்னையின் கருக்குழியில் அடிக்கடி வந்து புகுந்து அலைமோதிப் பிறந்திறந் துழன்று திரிவாராதல் பற்றி அவற்றை இருள் என உருவகித்து அவ் "இருள்நீங்கி" என்றும், அவ்விருள் நீங்கினால், "இன்பம் பயக்கும்" என்றும், கூறினாரென்ப. இதனைப் "பறப்புவைத்திவண் பற்றுறுஞ் சீவர்காள் இறப்புவந்திடில் என்பெறுவீருங்கள் மறப்புநீங்கியுண் மாசதும் நீங்கினல் பிறப்பு நீங்கிடும் பேரின்பக் காட்சியே" என்ற அபரோட்சஞானவிளக்கச் செய்யுளாலும் அறியலாம். (உ)

ஐயத்தி னீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வான நணிய துடைத்து.

பதவுரை.

ஐயத்தின் —சந்தேகத்திலிருந்து
நீங்கி —நீங்கி
தெளிந்தார்க்கு—மெய்யுணர்ந்தவர்க்கு
வையத்தின் —(அடைந்துநின்ற) நிலவுலகத்தினும்
வானம் —(அடையக்கடவதாகிய) வீட்டுலகம்
நணியது —அடைந்ததாதலை
உடைத்து —உடையதாம்

(கருத்து) சந்தேக ஞானத்தை விட்டோர்க்கு முத்தியுலகம் மிகச் சமீபமாகும் என்பதாகும் இங்கே ஐயமாவது மறுபிறப்பும் இருவினைப்பயன்களும், கடவுளும், உண்டோ இல்லையோ என்று ஒன்றிலே துணிவு பெறாமல் நிற்றல். ஒரு விதத்தினாலே பிறர் மதத்

தைக்களைந்து தமது மதத்தை நிறுத்துதல் சமய நூல்களுக்கெல்லாம் இயல்பாதலால் அந்நூல்களாலே சொல்லப்பட்ட பொருள்களிலே மெய் எதுவோவென்று உண்டாகிற சந்தேகத்தை யோகிகள் தமது அனுபவ ஞானத்தினாலே நீக்கி மெய்யை அறிவாராகலால் அவரை ஐயத்தி நீங்கித் தெளிந்தார் என்றும், அவ்வனுபவ ஞானம் மேலிடுந்தோறும் பழைய லோகாசார ஞானம் மறைபட்டுக் கொண்டே வருமாதலால் அதனைப் பயன் மேல் வைத்து வையத்தின் வானம் நணிய துடைத்து என்றும் சொல்லினார். சொல்லவே சந்தேக ஞானமும் பிறவிக்குக் காரணமாகுதல் இதனாற் சொல்லப்பட்டதாயிற்று. (௫)

## விசேஷ ஞானவிருத்தி.

உலகானுபவ விஷயங்களிலே மனதைச் செலுத்தி அதில் பற்றுதலை அதிகமாக வைத்து அதை அப்படிச் செய்வோமா அல்லது இப்படிச் செய்வோமா எப்படிச்செய்தால்

இதமாயிருக்கும் என்று குழம்பிக்கொண்டே இருப்பவன் அடைகிற அவஸ்தையைப்போல வே பிரமானுபவ விஷயங்களிலே மனதைச் செலுத்தி அதில் பற்றுதலை அதிகமாகவைத்து இகபர வைராக்கியங்களால் சகல போகங் களையும், சுகதுக்க கன்மங்களையும்விட்டு நிரா சையாயிருக்கிற ஜீவன்முத்தனு யிருப்பினும், பிரமந்தான் ஜீவனே ஜீவன்தான் பிரமமோ ஜீவனும் பிரமமும் அபேதமோ அல்லது பேத மோ என்ற விபரீத சந்தேக ஞானங்களில் குழம்பினல் அவன் "பிரமமே நான் நானே பிரமம்" என்கிற திடஞானத்தைப் பெறும் வரையிலும், கருவிற்புகுவதும், பிறந்திறந் துழல்வதுந்தவிர மோட்சம் என்பது இல்லை என்கிற உண்மையை ஆன்மாக்கள் அறிந்து சமுசய பிரமேய அசம்பாவனைகளை அற வே களைந்துய்யும்பொருட்டு "ஐயத்தினீங்கித் தெளிந்தார்க்கு" என்றும், ஈஸ்வரனிடத்தில் சித்தத்தை ஏகாக்கிரமாகவைத்து அப்பியாசித்

துவரும் அத்தகைய பிரமவித்துக்களுக்கே மோட்சம் உரித்தென்பது தோன்ற "வையத்தின் வான நணியதுடைத்து" என்றும், கூறினாரென்ப. இதனை "விபரீத ஞானமென்றும், விளம்பு சந்தேகமென்றும், அபவாத மறத் தெளிந்த ஆத்மஞானிகளே யீங்கு உபசிவ பிரமவைக்யம் உலையிரும் புண்ட நீர்போல் தபபல சிரவணத்தால் தற்பர ஞவார்தாமே" என்ற சச்சிதானந்த தற்பிரகாச விளக்கச் செய்யுளாலும் தெரிந்துகொள்ளலாம்.

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயனின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு.

பதவுரை.

மெய்யுணர்வில்லாதவர்க்கு—மெய்யையறித [லில்லாதவர்க்கு

ஐயுணர்வு—(ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் இவ்வைந்து புலன்களிலும் செல்லுதலால்) ஐந்தாகிய உணர்வு

எய்தியக்கண்ணும்—(அப்புலன்களை விட்டுத்)
தமக்கு வசப்பட்ட விடத்தும் (அதனால்)
பயன் —பிரயோசனம்
இன்று —இல்லை

(கருத்து) மெய்யை அறியாதவர்க்கு ஐம் புலன்களும் வசப்பட்டாலும் அவ்வாறு வசப் பட்டதினால் பிரயோசனமில்லை என்பதாம்.

ஐந்தாகிய உணர்வு மனம். அது வசப்படு தலாவது மடங்கி யோகக்குறியிடத்தே நிற்கை. அப்படி நின்றவிடத்தும், அது முத்தியைத்தா ராமையால் பயனின்றே என்றார். இவை இரண்டுபாட்டாலும் மெய்ம்மையுணர்ந்தவர்க்கே முத்தியுண்டென்று மெய்யுணர்வின் சிறப்புச் சொல்லப்பட்டது. (௪)

விசேஷ ஞானவிருத்தி.

நீந்துவதில் மஹா சமர்த்த னாயினும், உவரிப் பெருங்கடலில் விழுந்தவன் சிறிதள வேனும் நீரைக்குடியாமல் நீந்திக்கரையேறுதல் அரிதாவதுபோலவே பிறவிப் பெருங்கடலில்

விழுந்தவனும், எவ்வளவுகடந்த துறவியாயிருந்தாலும், பொறி புலன்களை விஷயபோகங்களிற் செலுத்தாமல், அடிக்கடி உதிக்கும் பிரதிபந்தங்களில் மலையாமல் பகீரதப் பிரயத்தனப்பட்டுப் பிரமத்தோடு கூடிநிற்கும் அப்பியாசத்தில் சிறிதளவேனும் நழுவாமல் திடம் பெறுவது அரிதென்பதுபற்றி இங்கு அதன் அருமைதோன்ற "ஐயுணர் வெய்தியக் கண்ணும்'' என்றுகூறி, அவ்வாறு பொறிபுலன்களை அடக்கித் தன்வசப் படுத்திக்கொண்ட பின்னருங்கூட நான் பிரமமோ அல்லவோ என்கிற ஐயத்தைப் பைய நுழைக்கின்ற அஞ்ஞானமும், சுருதிப்போக்கும், ஆசிரியர்வாக்கும் மெய்யோ பொய்யோ என்று குழப்புகிற சந்தேகமும், ஜகத்துப்பொய்யோ ஜகத்தைவிட ஆன்மா மெய்யோ என்று கிளப்புகிற விபரீதமும், தன்னைவிட்டு அறவே நீங்காத வரையிலும், தற்பதம் துவம்பதம் என்கிற துவிதகற்பனையும் இல்லாமல் தானொருவனே எங்கும்

நிறைந்த பரிபூரணமாய்த் துலங்குகிற தாகிய ஜீவபிரம ஐக்கியநிலை கிட்டாதாகவே அதன் பெருமையும்தோன்றப் "பயனின்றே மெய் யுணர் வில்லா தவர்க்கு" என்றும் கூறினா ரென்ப. இதனை "ஐயறிவறிந்தவை யடங்கின வரேனுமெய்யறிவிலாதவர்கள் வீடதுபெறுரே" என்ற சசிவன்னபோதத்தாலு முணரலாம்.

எப்பொருளெத்தன்மைத் தாயினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

பதவுரை.

எப்பொருள் —யாதொருபொருள்
எத்தன்மைத் தாயினும் —யாதோ ரியல்புடைத் தாய்த் தோன்றினும் (அத்தோன் றிய விதத்தைக்கண்டு விடாமல்)
அப்பொருள் —(தோன்றிய அப்பொருளி [டத்திருந்தும்

மெய்ப்பொருள்—மெய்யாகிய பொருளை
காண்பது —காண்பது
அறிவு —மெய்யுணர்வு

(கருத்து) எந்தப் பொருளிடத்தும் உண்மைப் பொருளை அறிவதே அறிவு என்பதாம்.

சராசரமாகிய பொருள்களி னெல்லாம் உலகத்தார் கற்பித்துக் கொண்டு வழங்குகின்ற கற்பனைகளைக் கழித்து நின்ற உண்மையைக் காண்பதே மெய்யுணர்வு என்றபடி யாயிற்று. அதாவது: அரசன், சேரமான் என்றவிடத்தே அரசனென்பது ஓர் சாதியும், சேரமானென்பது ஓர் குடியும், ஒருவனிடத்தே கற்பனையாதலால் அக் கற்பனையை விட்டு அதனை நிலமுதல் உயிரீறாகிய தத்துவங்களின் கூட்டமென்று அறிந்து அத தத்துவங்களை நிலமுதலாக அதனதன் காரணங்களுள் ஒடுக்கிக் கொண்டுபோய் முடிவிலே காரணகாரியமிரண்டும் இல்லாமல் நிற்பதனை அறிதலாம். இதனால் மெய்யுணர்வினது இலக்கணம் இன்னதெனச் சொல்லப்பட்டது.

## விசேஷ ஞானவிருத்தி.

மரத்தினுற் செய்யப்பட்டிருக்கிற ஓர் யானையைப் பார்த்தவர்கள் இந்த யானைக்கு மதம் பிடித்திருக்கிறதென்றும், சமீபத்திற் சென்றால் அது நம்மைப் பிடித்துக்கொள்ளு மென்றும், விலகி நின்றே பார்க்கவேண்டு மென்றும், சஙகற்பித்துக் கொண்டிருப்பது போலவே மாயையினுலே பிரதிபலித்துத் தோன்றக் கூடிய இவ்வுலகைப் பார்த்தவர் களும் உலகு நிலேத்திருக்கிறதென்றும், சூரிய சந்திரர்கள் அதனைச் சுற்றிவருகின்றனவென் றும், அதனுல் நாள், வாரம், மாதம், வருஷம் முத லியன உண்டாய்க்கொண்டிருக்கின்றனவென் றும், சங்கற்பித்துக் கொண்டு வீண்காலம் போக்கிக்கொண்டிருத்தல்பற்றி அவ்வுண்மை தோன்ற "எப்பொருள் எத்தன்மைத் தாயி னும்" என்றும், மரத்தினுற் செய்யப்பட்டிருக் கிற யானையைப் பார்த்தவர்கள் இவ் யானை அசையவே இல்லே, ஆதலால் இது மரத் தினுல் செய்யப்பட்டிருக்கிறது என்று தெளி

தல்போலவே ஆன்மாக்கள் சிரவண மனன நிதித்தியாசனங்களினால் இவ் உலகு நிலைக்கவே இல்லை, ஆதலால் இது மாயையாற் பிரதிபலித்துத் தோன்றக் கூடிய பிரமத்தினது சாயையேயன்றி சத்தியமன்று என்கிற திடஞானம்பெற்று அப் பிரமத்தோடு லயமடைகின்றன வாதலால் அதன் பெருமைதோன்ற "அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு" என்றும், கூறினரென்ப. "இதனை மரத்தை மறைத்தது மாமதயானை மரத்தில் மறைந்தது மாமதயானை பரத்தை மறைத்தது பார்முதற் பூதம் பரத்தில்மறைந்தது பார்முதற் பூதமே" என்ற திருமூலர்வாக்காலுந் தெரியலாம். (டு)

கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார்தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி.

பதவுரை.

ஈண்டு —இம்மையிலே பிறப்பினிடத்து

கற்று —(உபதேசத்தை ஞானாசாரியரிடத்தே) கேட்டு (அதனால்)

மெய்ப்பொருள் – உண்மைப்பொருளை
கண்டார் —உணர்ந்தவர்
மற்றீண்டு —திரும்பி இப்பிறப்பினிடத்து
வாராநெறி —வாராதவழியை
தலைப்படுவர் —அடைவார்

(கருத்து) இப்பிறப்பிலுபதேசத்தைக் கேட்டு அவற்றைச் சிந்தித்து உண்மைப் பொருளை அறிந்தவர் பிறவார் என்பதாம்.

கற்றென்றதனால், பலரிடத்தும் பலதாமும் பழகுதலும், ஈண்டு என்றதனால் மோக்ஷத்தை அடைதற்கு உரிய மனிதப்பிறப்புப் பெறுதற்கு அரியதென்பதும் கொள்ளப்பட்டன. ஈண்டு வாரா நெறி மோக்ஷமார்க்கம். மோக்ஷத்துக்கு நிமித்த காரணமாகிய முதற்பொருளை அறிதற்கு உபாயம் மூன்று. அவை கேட்குதல், சிந்தித்தல், தெளிதல் என்பன. [அவற்றுள் இதனாலே கேட்குதல் சொல்லப்பட்டது.]

## விசேஷ ஞானவிருத்தி.

ஆன்மாக்கள் அரிய இம் மானுட தேகத்தை எடுத்ததன் பயனாக உரியமெய்ப் பொருளாகிய பிரமத்தை உள்ளவா றுணர்ந்துய்ய வேண்டுமென்றும், அவ்வாறு உணர்தற்பொருட்டுச் சற்குரு சன்னிதானத்தில் வேதாந்த சாஸ்திரார்த்தங்களை ஐயந்திரிபறக் கேட்டறிதல் சிரவணமென்றும், அங்ஙனம் கேட்ட சிரவணார்த்தத்தினால் உபாதியை, அன்னிய பக்தி, அவத்தாத்திரயங்களை அனித்தியமாக்கிச சொரூப தரிசன நிச்சயத்தை நித்தியமாக்கி நிரந்தரம் அனுபவித்தல் மனன மென்றும், அங்ஙனம் மனனஞ்செய்த பொருளை இஃதிப் படியேயன்றிப் பிறிதுபடித் தன்றென அப் பொருளைச் சுவானுபூதியிற் காட்சிப் படுத்துதல் நிதித்தியாசன மென்றும் இம்மூன்றுங் கூடியே சிரவணதித்திரயம் என வேதாந்த நூல்கள் கூறப்படுவதுபற்றி நாயனாரும் ஈண்டு அவற்றைக் கற்றலில் அடக்கிக் "கற்றீண்டு

மெய்ப்பொருள் கண்டார்'' என்றும், அத்த கையாரே மீண்டும் பிறவியில் புகார் என்னும் நிச்சயம்பற்றித் ''தலைப்படுவர் மற்றீண்டு வாரா நெறி'' என்றும், கூறினரென்ப. இதனைத் ''தடையெவை யெனிலஞ் ஞானம் சந்தேக விபரீதங்கள் படர்செயு மிந்த மூன்றும் பலச ன்மப் பழக்கத் தாலே உடனுடன் வரும் வந்தக்கால் உயர் ஞானங் கெடு மிவற்றைத் திடமுடன் கெடுப்பாய் கேட்டல் சிந்தித்தல் தெளிதலாலே'' என்ற கைவல்லிய மஹா வாக்கியத்தினலும் காணலாம். (கூ)

ஓர்த்துள்ள முள்ள துணரி னொருதலையாப்
பேர்த்துள்ள வேண்டா பிறப்பு.

பதவுரை.

உள்ளம்—(அப்படிக் கேட்கப்பட்ட உபதேசப் பொருளை ஒருவனது) உள்ளமானது
ஒருதலையா— நிசசயப்பட
ஓர்த்து—(பிரமாணங்களாலும் யுத்தியினலும்) ஆராய்ந்து (அதனல்)

உணரின் —அறிந்தாயின்
பிறப்பு —(அவனுக்குப்) பிறவியுள்ளதாக
பேர்த்து —மாறி
உள்ளவேண்டா—நினைக்கவேண்டியதில்லை

(கருத்து) ஒருவன் மனம் உபதேசத்தால் உண்மைப் பொருளை அறியின் அவனுக்குப் பிறவி இல்லை என்பதாம். [இதனால் சிந்தித்தலின் தன்மை சொல்லப்பட்டது.

விசேஷ ஞானவிருத்தி.

கானலை "நீர் அன்று அது கானலே" என்று கண்ணாரக்கண்டறிந்த பின்னருங்கூட அக்கானலானது நீராகத் தோன்றும் விபரீத பாவனை எப்படி நிவர்த்தியாக மாட்டாதோ அப்படியே சாஸ்திர விசாரத்தினாலும் சற்குரு உபதேசத்தாலும் சாந்தியாதி குணங்களுடன் கூடிச் சமுசயமின்றிச சிரவணாதிகளைச்செய்து ஞானவடிவமென்கிற தன்னைத் தானே சம்பாதித்துச் சச்சிதானந்த சொரூபமான ஆன்மாவே தான் என்றறிந்து கேவலம் சொரூப மாத்திரமாயிருக்கிற கைவல்லிய பிரமவித்துக்

களாயிருந்தபோதிலுங்கூடப் பூர்வஜன்ம கன்ம வாசனையினல் எவருடைய புத்தியில் சற்றே அசம்பாவனை விபரீதபாவனை யாகிய தோஷ முண்டாகுமோ அவருடைய தோஷரூபமான களங்கத்தோடுகூடிய ஞானம் பலத்திற் கேது வாகாதென்பது பற்றியே ஈண்டு அச்சிரவண மனன நிதித்தியாசனங்களை மீண்டும் வலி யுறுத்தி "ஓர்த்துள்ளமுள்ளதுணரின்" என் றும், அவ்வாறு சுருதி யுத்தி யனுபவப் பிரமா ணங்களினல் சிந்தித்துத் தெளிவடைந்த அப்பி யாசிகள் பிரமாபரோட்ச ஞான முடையராய் ஐக்கிய நிலைபெறுவதன்றி மீண்டும் வந்து ஈண்டு இப்பிறவியில் புகவேண்டிய சந்தர்ப்பம் சேராதாகவே "ஒரு தலையாப் பேர்த்துள்ள வேண்டா பிறப்பு" என்றும், கூறினரென்ப. இதனைப் "பீனமாந் தறிபுமாணிற் பிரபஞ்ச மெல்லாம் பொய்யே ஞானமெய் மகனே யுன்னை நம்மானை மறந்திடாதே" என்னும் கைவல்லிய வாக்கியத்தினலும் காணலாம். (எ)

பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னுஞ்
செம்பொருள் காண்ப தறிவு.

பதவுரை.

*பிறப்பென்னும்*—பிறவிக்கு முதற்காரணமெனப்படுகிற
*பேதைமை நீங்க*—அஞ்ஞானமானது கெட
*சிறப்பென்னும்*—மோக்ஷத்துக்கு நிமித்த காரணமெனப்படுகிற
*செம்பொருள்*—செவ்விய பொருளை
*காண்பது*—அறிவதே
*அறிவு*—(ஒருவனுக்கு)மெய்யுணர்வாம்.

(கருத்து) பிறவிக்குக் காரணமாகிய அஞ்ஞானங்கெட உண்மைப் பொருளைக் காண்பதே அறிவாகும் என்பதாம்.

பிறப்பென்னும் பேதைமை என்றும், சிறப்பென்னும் செம்பொருள் என்றும், காரியங்களைக் காரணங்களாக உபசரித்தார். ஐவகைக் குற்றங்களுள் அஞ்ஞானம் மற்றை நான்குக்கும் காரணமாதலால் அசிறப்புப்

பற்றி அதனையே பிறவிக்குக் காரணமாக்கிச் சொல்லினர். எல்லாப் பொருள்களினும், சிறந்ததாகலால் மோக்ஷம் சிறப்பெனப்பட்டது. நித்தியமாகியும், பரிசுத்தமாகியும், எங்கும் நிறைந்துள்ள பிரம்மமெனப்பட்ட முதற்பொருள் விகாரமில்லாமல் எக்காலமும், ஒரே தன்மையதாயிருத்தல் பற்றி அதனைச் செம்பொருள் என்றார். முன்னே மெய்ப்பொருள் என்றும், உள்ளது என்றும், சொல்லியதும் இதுபற்றியே யென்றறிக.

அதனைக் காண்கையாவது உயிர் தன்து அஞ்ஞானங்கெட்டு அப்பொருளோடு ஒற்றுமையுற இடைவிடாமல் நினைத்தல். இதனைச் சமாதி என்பர். மரணகாலத்தில் நினைக்கிறபடி பிறவி வருமென்றிருத்தலால் மோட்சமடைவோர்க்கு அக்காலத்திலே தத்துவப் பொருளைப் பாவிக்கும்படி முன்னே பழகுதலாகிய இதனின் மிகுந்த உபாயம் இல்லையென்பதறிக. [இதனாலே, தெளிதல் சொல்லப்பட்டது.]

## விசேஷ ஞானவிருத்தி.

"கடவுள் எங்கே இருக்கிறார்? அவரைக் கண்டவர் யார்? கடவுளைக் காண்பிக்க முடியா விட்டாலும், அவரைக்கண்ட பிரதிநிதிகளை யாவது காண்பித்தால் அக்கடவுளையே கண்ட படி நாங்கள் கண்டு கொள்கிறோம். அங் ஙனமல்லாமல் 'பெட்டியைத் தச்சனும், சட்டியைக் குயவனும், உண்டாக்கியதுபோலவே, இவ்வுலகத்தைக் 'கடவுள் உண்டாக்கினார்' என்று இல்லாத ஒன்றை உண்டென்று கற்பித்துக்கொண்டு ஏனோ அதில் இடரடைய வேண்டும்?" என்று கூசாமல் பேசிக் "கண்டதே காட்சி கொண்டதே மாட்சி" என்று தேகாதிப்பிரபஞ்சங்களில் மிகப் பற்று வைத்து உழைப்பதும், உண்பதும், உறங்குவதுமாய்த் திரிகின்ற அஞ்ஞன்மாக்களே ஈண்டுப் பிறப் பிறப்பிற் குரித்தாதல்பற்றி அவற்றைப் பேதமை என உபசரித்துப் "பிறப்பென்னும் பேதமை" என்றும், அவ்வாறு கண்ணுக்குப் புலனாகும் இவ்வுலகை எண்ணி எண்ணி

யாராய்ந்து உலகு காரிய வடிவமென்றும், இக் காரிய வடிவமாகிய உலகுக்கோர் காரண வடிவமாகிய பிரமம் இருந்துதான் தீரவேண்டு மென்றும், அப்பிரமமே சித் என்றும், அச் சித்தை அறியும் அறிவே சத் என்றும், அச் சத்தும், இச்சித்தும், பேதமறக் கூடியவிடமே ஆனந்தம் என்றும், அதுவே சத்துச் சித்தா னந்தம் (செம்பொருள்) என ஒரு பொருளில் அகலமும், நீளமும், உயரமும் பிரிவின்றிக் கிடத்தல் போன்று ஒன்றிப் படைகிற ஜீவ பிரம ஐக்கிய நிலை என்றும் அறியவல்ல ஆன் மாக்களே அப்பிறப்பிறப்பு நீக்குதற் குரிய ராதல்பற்றி அப் "பேதமை நீங்கச் சிறப்பென் னும் செம்பொருள் காண்பதறிவு" என்றும். கூறினரென்ப. இதனைத்"தானுமறிவே சகமாகி யன்றாகி யானுவொளியா யமைந்திருக்க—என்னே அறியாதுமாந்த ரகமமதையாகி வெறிகொண்டு போனமிகை" என்ற சுவானுபூதி விளக்கச் செய்யுளாலும் அறிந்துகொள்ளலாம். (அ)

சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின் மற்றழித்
சார்தரா : சார்தரு நோய். [துச்

பதவுரை.

சார்பு—(ஒருவன் எப்பொருள்களுக்கும்) சார்பாகிய அச்செம்பொருளை
உணர்ந்து—அறிந்து
சார்பு—இருவகைப் பற்றுக்களும்
கெட—நீங்க
ஒழுகின்—நடக்கவல்லவனாயின்
சார்தரும்—(முன் அவனைச்)சேர்தற்குரியவையாய் நின்ற
நோய்—வினைகளாகிய துன்பங்கள்
அழித்து—(அவ்வுணர்வையும், ஒழுக்கத்தையும்) அழித்து
மற்றுச் சார்தரா—பின்சேர மாட்டாவாம்.

(கருத்து மெய்ப்பொருளை அறிந்து இருவகைப் பற்றுக்களுங்கெட நடப்பவனைத் துன்பங்கள் அணுகா என்பதாம்.

இங்கே ஒழுக்கமென்றது யோகவழி நடத்தலை, அது இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி, என எண்வகைப்படும். அத்துன்பங்களாவன பிறவி அநாதியாய்வருதலால் உயிரினுலே அளவில்லாமல் சம்பாதிக்கப்பட்டிருக்கிற வினைகளின் பயன்களுள் இறந்த உடம்புகளால் அநுபவிக்கப்பட்டவையும், பிறந்த உடம்புகளால் மொண்டுகொள்ளப்பட்டவையும், நீங்கலாகப் பின்னே அநுபவிக்கும்படி கிடந்தவையாம். அவை விளக்கின் முன் இருள்போல் ஞானயோகங்களின் முன்னே கெடுதலால் அழித்துச் சார்தரா என்றார். பிறவிக்குக் காரணமாதலால் நல்வினைப் பயனும் நோயெனப்பட்டது.

முன் மூன்றுபாயங்களாலும் பரம்பொருளை அறியப் பிறப்பறுமென்றார். அது அறுமிடத்தே பின்வரக் கிடந்ததுன்பங்களெல்லாம் எப்படிப் போமென்னும் வினவை எழுப்பிக்

கொண்டு ஞானயோக முதிர்ச்சியுடைய உயிரைச் சேரமாட்டாமையாற் கெட்டுவிடும் என்பது இதனாலே சொல்லப்பட்டது.

### விசேஷ ஞானவிருத்தி.

வித்திலிருந்து முளையும், முளையிலிருந்து கிளையும், கிளையிலிருந்து கப்பும், கப்பிலிருந்து கொப்பும், கொப்பிலிருந்து பூவும், பூவிலிருந்து பிஞ்சும், பிஞ்சிலிருந்து காயும், காயிலிருந்து பழமும், பழத்திலிருந்து திரும்பவும் வித்து என்று முன்னது பின்னதாய்ப் பின்னது முன்னதாய் மாறி மாறி வழங்குமாறுபோலவே சரீராதிப் பிரபஞ்சமனைத்தும், காரணகாரிய சம்பந்தப்பட்டுத் தோன்றி நின்று அழியுமாதல் பற்றியும் அவற்றி னிடையில் சீவான்மாக்கள் சிருஷ்டிகாலமிருந்து பேதமை முதல் வினைப்பய னீறாகப் பலவகைப்பட்ட சார்புகளாகி விவகார சம்பந்தப்பட்ட காரண காரியத் தொடக்குற்றுக் காற்றில் துரும்பு போல் கருப்பைக் குழியில் உருப்பெற்றெழுந்து தோன்றி நின்று உழல்வதாலும், ஈண்டு

நாயனாரும் அவற்றைச் சார்பென உருவகித்து ஆரோபமாக அவை ஒடுங்கும்போது கூடஸ்த பிரமைக்கியனிலை கிட்டுமாதல் பற்றிச் "சார் புணர்ந்து" என்றும், அவரோபமாக அவை விரியும்போது பிறப்பிறப்புத் துன்பம் ஒட்டு மாதல்பற்றி அவற்றை ஒழித்தலின்பொருட்டுச் "சார்புகெட ஒழுகின்" என்றும், தொன்மை யான மனத்தில் சொப்பன உலகு எப்படிக் கற்பனையோ அப்படியே உண்மையான பிரமத் தில் இச் சாக்கிர உலகும் கற்பனை என்ற திடஞானம் பெற்ற ஆன்மாக்களுக்கே பிறப் பிறப்பு இருவினைத் துன்பங்களாகிய நோய் நீங்குமென்பது பற்றி "மற்றழித்துச் சார்தரா சார்தரு நோய்" என்றும், கூறினரென்ப. இதனைத் "தொலையுநல் வினைப்பயன் றொலைந்த போதிலே தலையது கீழுற விழுகை தப்புமோ நிலையுறு முத்திநேர் படுதனெஞ்சிலே யலைவறு ஞானமுண் டாகிலல்லவோ" என்ற பிரம கீதைச் செய்யுளாலும் அறியலாம். (௬)

காமம் வெகுளி மயக்க மிவை மூன்ற
னாமங் கெடக்கெடு நோய்.

பதவுரை.

காமம்
வெகுளி
மயக்கம் — (ஞானயோகங்களின் முதிர்ச்சியுடையவர்க்கு) விருப்பம், வெறுப்பு, அஞ்ஞானம் எனப்படுகிற
இவை மூன்றன் — இக்குற்றம் மூன்றனது
நாமம் — பெயரும்
கெட — கெடுதலால்
நோய் — (அவைகளின் காரியங்களாகிய) வினைப் பயன்கள்
கெடும் — உண்டாதலில்லை

(கருத்து) ஞானவான்களுக்கு முக்குற்றங் களில்வரும் துன்பங்களில்லை என்பதாம்.

அநாதியாகிய அவித்தை யென்னும், அஞ் ஞானமும், அதுபற்றி யானென மதிக்கும் அகங்காரமும், அதுபற்றி எனக்கு இது வேண்டுமென்னும் அவாவும், அதுபற்றி அப் பொருளிடத்தே செல்லும் ஆசையும், அது பற்றி அதனது மறுதலையிடத்தே செல்லும்

கோபமும், என வடநூலார் குற்றம் ஐந்தென்பார். இவர் அவற்றுள் அகங்காரம், அவித்தையிலும், அவாவுதல் ஆசையிலும், அடங்குதலால் மூன்றென்றார். இடையறாத ஞானயோகங்களுக்கு முன்னே இக்குற்ற மூன்றும் காட்டுத்தீ முன்னே பஞ்சுபோலுமாம். ஆகலால் அம்மிகுதி தோன்ற இவை மூன்றனுமங்கெட என்றார். விகாரத்தாலே தொக்க நாமமும் என்னுமிழிவு சிறப்பும்மை வருவிக்கப்பட்டது. காரணமாகிய அக்குற்றங்களைக் கெடுத்தோர் காரியமாகிய இருவினைகளைச் செய்யாமையால் அவர்க்கு வருதற்குரிய துன்பங்களும் இல்லையென்பது இதனாலே சொல்லப்பட்டது.

முன்கிடந்த துன்பங்களும், மேல்வருந் துன்பஙகளும், இல்லாமற் போகுகை மெய்யுணர்வின் பயனாதலால் இவையிரண்டும் இவ்வதிகாரத்திலே சொல்லப்பட்டன. இவ்விதத்தால் மெய்யுணர்ந்தார்க்கு உள்ளவை எடுத்த உடம்பும் அதுகொண்ட வினைப்பயனுமே யென்பது பெற்றாம்.

## விசேஷ ஞானவிருத்தி.

மண் ஒன்றே அது மண் என்றும், கடம் என்றும், விவகார நாட்டத்தில் காரணமாகவும், காரியமாகவும் விவகரிக்கப்பட்டு, உதிப்பதும், உளதாதலும், அழிவதும், அலதாதலும், பலப்பதும், பலவாதலும், சிதைவதும், சிலவாதலும், காரணத்தை யன்றிக் காரியமின்றெனக் கூறற்கிடனாகி நிற்பதும், உண்மையாக ஆராயுங்காலத்தில் காரியமின்றாய்ப்போக அதன் காரணமும், இன்றாய்ப் பழய மண்ணே மண் என்று முடிவதும்போலவே பாரமார்த்திக சுத்த சைதன்னிய நித்திய வஸ்துவாகிய பிரமசத்து ஒன்றைத் தவிர மற்றைப் பிரபஞ்சங்கள் சீவான்மாக்கள் முதலிய அனைத்திற்கும் தனித்தொரு பொருளின்றென்பது உண்மையேயாயினும், இவ்வாறு இல்லாத ஒன்றை உண்டென்று கற்பித்துக்கொண்டு அவற்றைப் பிரமம் மாயை பிரபஞ்சம் ஆன்மா பந்தம் மோட்சம் எனப் பலவாறு பேதப்படுத்தி

ஆன்மாக்கள் அல்லோலமடைதற்குக் காரண மே காமம் வெகுளி மயக்கங்களாகிய இம் முக்குற்றங்களாதல் பற்றி ஈண்டு நாயனாரும் "காமம் வெகுளி மயக்க மிவைமூன்றன்" என்றும்; ஞானவான்களுக்கே இக்குற்றங்கள் மூன்றும், தீயிற் பஞ்சாய்த் தீய்ந் தொழிய அவைகளின் காரியங்களாகிய நல்வினை தீவினை இரண்டும் பிணைஞ்சுடுங்கோல் அப்பிணைத்தோடு தீய்ந்தொழிவது போன்று நசிந்தொழியு மாதல் பற்றி "நாமம் கெடக்கெடும் நோய்" என்றும் கூறினரென்ப இதனை "ஒத்தேறு முருவமில் லாப் பிரமமொன்று மேயொழிய வுருவமுள் ளார் எத்தேவராயினுமோர் பூங்கணையாற் றம் போத மெல்லாம் நீங்கி மத்தேறி யுடைதயிர் போல் மனஞ்சுழன்று செயன்மறந்து மடவா ராசைப் பித்தேறி யிதமுரைத்துப் பேதை யர்க்கும் பேதையராய்ப் பின்செல்வாரால்" என்ற பிரபோத சந்திரோதயச் செய்யுளானும் பிறவாற்றானும் உணர்ந்துகொள்ளலாம். (ம)

36-ம் அதிகாரம்

முற்றிற்று.

# 37-ம் அதிகாரம்.

## அவாவறுத்தல்

அஃதாவது மூன்னும் பின்னும் வினைத் தொடர்பு அறுத்தார்க்கு நடுநின்ற வுடம்பும், அதுகொண்ட வினைப் பயன்களும், நின்றமையால் அதுபற்றி ஒரோவிடத்துத் துறக்கப்பட்ட புலன்களின்மேலே பழைய பழக்க வசத்தினாலே நினைவு செல்லுமாகலானும், அந்நினைவும் பிறவிக்கு வித்தாமாகலானும், அதனை இடைவிடாத மெய்ப் பொருளுணர்வால் அறுத்தலாம். அதிகார முறைமையும் இதனால் விளங்கும்.

அவாவென்ப வெல்லா வுயிர்க்குமெஞ் ஞான்றுந்
தவாஅப் பிறப்பீனும் வித்து.

பதவுரை.

எல்லா வுயிர்க்கும்—சகல வுயிர்களுக்கும்
எஞ்ஞான்றும் —எக்காலத்திலும்
தவா —கெடாது வருகின்ற

பிறப்பு — பிறவியை
ஈனும் — விளைப்பதாகிய
வித்து — விதை
அவா — அவாவாகும்
என்ப — என்று (நூலோர்)
சொல்லுவார்.

(கருத்து) எவ்வுயிர்களின் பிறவிக்கு விதை ஆசை என்பதாம்.

உடம்பு நீங்கிப் போங்காலத்திலே அடுத்த வினையும், அது காட்டுங்கதி நிமித்தங்களும், அக்கதியில் அவாவும், உயிரினிடத்தே முறையே வந்து உதிக்க அறிவை மோகமானது மறைக்க அவ்வுயிரை அவ்வவாவானது அக்கதியினிடத்தே கொண்டு செல்லுமாகலால், அதனைப் பிறப்பீனும் வித்து என்றும், கதிவசத்தால் உளதாகிய அவ்வுயிரின் வேறுபாட்டிலும்

* உற்சர்ப்பிணி § அவசர்ப்பிணி யென்னுங் காலவேறுபாட்டினும், அது வித்தாகுகை வேறு படாமையால் எல்லாவுயிர்க்கும் எஞ்ஞான்றும், என்றும் இது எல்லாச் சமயங்களுக்கும் ஒத்த லால் என்ப வென்றுங் கூறினார்.

இதனால் பிறப்புக்கு அவா வித்தாதல் சொல்லப்பட்டது.

### விசேஷ ஞானவிருத்தி.

ஏரி நிறையத் தண்ணீர் நிரப்பி, நான்கு பக்கமும் கரை அமைத்து, சர்வ ஜாக்கிரதை யாகப் பாதுகாத்துவரும்போதும் அதில் ஒரு பக்கம் சிறிது தண்ணீர் கசிந்து முட்டி

---

* உற்சர்ப்பிணி உலகம், வாழ்நாள், போகம் இவை முதலானவைகளாலே வளர்பிறைபோல் பெருகுங்காலம். § அவசர்ப்பிணி, அது அவை களாலே தேய்பிறைபோல் சுருங்குங்காலம்.

மோதிக்கொண்டேயிருந்து சிறுகச் சிறுகப் பெரிய துவாரமாக்கி அதன்வழியே பள்ளங்கள் தோறும் பாய்ந்தோடல் போலவே சரீர மாகிய ஏரியின்கண் நிறைந்து ததும்புகின்ற ஆசையாகிய தண்ணீர் பொறிகளாகிய துவாரங் களின் வழியே கசிந்தோடி விஷயங்களிற் சென்று பாயாமல் காத்துவருகிற அதிகாரிகள் அவர்கள் எவ்வாறு காப்பினும் அவ்வாசை முட்டி நுழைந்து கட்டுப்படாமல் திரிந்து "நான் என்தேகம், என் மனைவி, என் மக்கள்" என்று சிருஷ்டியாதி காலந்தொடங்கி ஓடியோடிப் பாய்ந்து பிறவியை உண்டாக்கிச் சுத்தப்பிரமத்தையே உயிர் எனச் சொல்லு மாறு இப்படி அலங்கோலப் படுத்திக்கொண் டிருக்கிறபடியால் அதனை விளக்கி "அவாவென் பதெல்லா உயிர்க்கும்" என்றும், இத்தகைத் துன்பமயமான அனர்த்தங்களுக்கெல்லாம் வித் தாயிருப்பது அவ் அவாவேயாதலால் "எஞ் ஞான்றும் தவாஅப்பிறப்பீனும் வித்து" என்

றும் கூறினரென்ப. இதனை "ஆசையுமன்பு மறுமின் அறுத்தபின் ஈசனிருந்த விட மெளி தாமே" என்ற திருமூலநாயனர் திருமந்திரத் தினலுந் தெரிந்துகொள்ளலாம். (௧)

வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும்.

பதவுரை.

வேண்டுங்கால்—(பிறப்புத் துன்பமாயிருக்கையை அறிந்தவன்) ஒன்றை வேண்டினல்
பிறவாமை —பிறவாதிருக்கையையே
வேண்டும் —(இச்சிக்க) வேண்டும்
அது —அப்பிறவாமையானது
வேண்டாமை —(தான் ஒரு பொருளையும்) அவாவாமையை
வேண்ட —இச்சிக்க
வரும் —(அவனுக்குத்) தானே உண்டாம்.

(கருத்து) ஒருவன் பிறவாமையையே இச்சிக்கவேண்டும் என்பதாம்.

அநாதியாகத்தான் பிறப்பு, பிணி, மூப்பு, இறப்பு, இவைகளினாலே துன்பப்பட்டுக் கொண்டு வருகின்றமையை அறிந்தவனுக்கு இன்பத்தில் ஆசையுண்டாமாதலால் பிறவாமையை வேண்டும் என்றும் இவ்வுலகத்துச் சிற்றின்பத்தைக் குறித்து ஒரு பொருளை அவாவினால் அது பிறவியைத்தரும் வித்தாய்ப் பின்னும் முடிவில்லாத துன்பமே விளைத்தலாலே அது வேண்டாமையை வேண்டவரும் என்றுஞ் சொல்லினார்.

விசேஷ ஞானவிருத்தி.

ஜெனனகாலந் தொடுத்துத் துன்பத்தையே அனுபவித்துக்கொண்டிருக்கிற ஒரு ஆன்மா அத் துன்பத்தைத் தொலைத்து இன்பத்தை அனுபவிக்கவேண்டுமே என நினைப்பது சகசமாதலானும், இப்போது இன்பம் இன்பம் என அனுபவிப்பதெல்லாம் எதார்த்த

மாகத் துன்பமே எனத் துருவியாராய்ந் தறிந்த தின் பின்னர் உள்ளபடியுள்ள இன்பத்தை அனுபவிக்கவேண்டுமே என நினைப்பது நிச்சய மாதலானும், அவ்வாறு வேண்டுவதானால் பிற வாமையையே வேண்டுதல் வேண்டும் என சர்வ ஆன்மாக்களுக்கும் எச்சரிக்கவேண்டி இங்கு நாயனார் "வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை" என்றும், அப் பிறவாமையை வேண்டுதற்கேற்ற இலகுவான உபாயத்தை அதாவது பிரபஞ்சம் சத்தியமல்லவென்றும், தேகேந்திரியாதிகள் தானல்லவென்றும், புத்திர களத்திர தாராதிகள் தனதல்லவென்றும், ஆன்மாவாகிய தானே ஈதனைத்தும் என்றும் சர்வான்மாக்களும் அறிந்து ஆனைத்தையும் வெறுத்துய்யும் பொருட்டே மீண்டும் "மற்றது வேண்டாமை வேண்டவரும்" என்றும் கூறினாரென்ப. இதனைப் "பிறவா நெறியே வேண்டும் எனவே பேணி விரும்பி நிதம் மறவா நெறியே நினைநீ மனமே மற்றது வாய்த்திடுமே" என்ற தத்துவ நிஜானுயோக விளக்கச் செய்யுளாலும் அறியலாம். (உ)

வேண்டாமை யன்ன விழுச்செல்வ மீண்டில்லை
யாண்டு மஃதொப்ப தில்.

பதவுரை,

வேண்டாமை யன்ன — ஒரு பொருளையும் அவாவாமை போலும்
விழுச்செல்வம் — மேலாகிய செல்வமானது
ஈண்டு — (காணப்படுகிற) இவ்வுலகத்திலே
இல்லை — இல்லை (அவ்வளவேயன்றி)
ஆண்டும் — (கேட்கப்படுகிற) அவ்வுலகத்திலும்
அஃதொப்பது — அது போல்வது
இல் — இல்லை.

(கருத்து) இச்சியாமைக்கொப்பான செல்வம் இவ்வுலகத்திலும் மோக்ஷத்திலும் இல்லை என்பதாம்.

மக்களது செல்வமும், தேவரது செல்வமும், மேலு மேலும் நோக்கக் கீழாதலால் தனக்கு மேலில்லாத வேண்டாமையை விழுச்செல்வம் என்றும், அதற்கு இரண்டு உலகங்களிலும் ஒப்பதில்லை என்றும் சொல்லினர்.

இவ்விரண்டு பாட்டாலும் பிறவாமைக்கு வழியாமெனவும், மேலாகிய செல்வமா மெனவும், வேண்டாமையின் சிறப்புச் சொல்லப் பட்டது.

## விசேஷ ஞானவிருத்தி.

*பிரமத்தைத் தவிர மற்றை மாயா காரியமான தூல சூக்குமப் பிரபஞ்சாதி அனன்மாக்களனைத்தும் அப் பிரமத்தினது சாயையாதல் பற்றி அவை அனைத்தும் அசத்து என்பதை உணர்ந்து இவ்வுலகின்கண் காணப்படுவனவாகிய பெண்டு, பிள்ளை, பொருள், போகம் முதலியவைகளில் செல்லும் அவாவைத் தடுத்து "இதுவேண்டாம், இதுவேண்டாம்" என வெறுப்பதே ஆன்மாக்களுக்கோர்பெருஞ் செல்வமெனப் பரிகரித்து "வேண்டாமையன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை" என்றும், அவ்வெறுப்பு முழுவதும் பிரமத்தினிடத்தில் விருப்பாகமாறி முடிவில் தற்பதம், துவம் ..ம் என்கிற பேதமும் அற்று மரஞ்செடி ..ாடி முதலியவை மண்ணிலேயுண்டாய் ..ாணிலே யிருந்து மண்ணிலே அழிவது*

போலச் சாக்கிராதியவஸ்தைகளில் தோன்று கின்ற சரீராதிப் பிரபஞ்சங்கள் அனைத்தும் சாட்சியாகிய தன்னிலே யுண்டாய்த் தன்னி லேயிருந்து தன்னிலே யழிந்து தானே தானாய் முடிவதுபற்றியே மோட்சத்தினிடத்தும் இவ் விருப்புக் கூடாதென "யாண்டும் அஃதொப் பதில்" என்றும், இத்திட ஞானம் கேவலம் நித்தியா நித்திய வஸ்து விவேகம் இக மூத் ரார்த்த பலபோக விராகம் சமாதிசட்க சம்பத்தி முமூட்சுத்வம் என்கிற சாதன சதுட்டயம் பெற்ற அத்வைத அதிகாரிகளுக்கே சித்திக்கு மன்றி மற்றைச் சாமானிய சமயாபிமானி களுக்கு அந்நிலையிற் சித்தியாதென்பதை விளக் கவே "ஆண்டும்" என மோட்சத்தையும் சுட்டிக் கூறினாரென்ப. இதனை "ஓலப் பரவைச் செகமவித்தை யுற மெய்பாகு மொழி யாத மேலப் பிரம வித்தையுற மெய்யா மூலகம் பொய்யாமால்" என்ற மெஞ்ஞான விளக்கச் செய்யுளாலும் தெரிந்துகொளலாம். (ரு

தூஉய்மை யென்ப தவாவின்மை மற்றது
வாஅய்மை வேண்ட வரும்.

பதவுரை.

தூய்மையென்பது—(ஒருவர்க்கு) முத்தியென்று சொல்லப்படுவது

அவாவின்மை —அவாவில்லாமையாம்

அது —அவ்வவா வில்லாமை

வாய்மை —மெய்ம்மையை

வேண்ட —இச்சிக்க

வரும் —தானே யுண்டாம்.

(கருத்து) மெய்ம்மையை இச்சிக்கவருவது ஆசையில்லாமை. அதே முத்தி என்பதாம்.

வீடாவது உயிர் அஞ்ஞான முதலாகிய அழுக்கறுதலாகலால் அதனைத் தூய்மை என்றும், காரணத்தைக் காரியமாக உபசரித்துத் தூய்மையென்பது அவாவின்மை என்றும், வாய்மையையுடைய பாத்தை ஆகுபெயரால் வாய்மை என்றும், சொல்லினர். மற்று-அசை. வேண்டுதல்—இடைவிடாது பாவித்தல்.

அவாவறுத்தல் முத்திக்கு நேரே காரண மென்பதும் அது வருவழியும் இதனாலே சொல்லப்பட்டன.

## விசேஷ ஞானவிருத்தி.

தரையிற் படுப்பானொருவன் பாய்கிடைத் தாற் போதுமென்றும், அது கிடைத்தால் சமுக்காளமென்றும், அது கிடைத்தால் மெத் தை என்றும், அது கிடைத்தால் மஞ்சமென் றும், அது கிடைத்தால் மாடமென்றும், அது கிடைத்தால் மனைவி என்றும், அது கிடைத் தால் மக்களென்றும், இவ்வாறு அவா அதிகரித் துக்கொண்டே போவதன்றி இதுபோதும் எனத் திருப்தியடையப்படுவதில்லை யாதலா னும், ஏதாவதொரு காரியஞ் செய்துகொண் டிருப்பவன் அப்படியே உறங்கிவிடுவானானால் மீண்டும் விழித்து அக்காரியத்தையே தொட ங்குவான்போன்று இவ்வாறு ஓயாதவாவிக் கொண்டே இறப்பவனும், மீண்டும் வந்து

இவ் அவாவோடேயே பிறக்கின்றாருதலானும் இவ்வனர்த்தங்களுக்கெல்லாம் காரணம் அவா என்பதை அடக்கியே "தூஉய்மை என்பதவாவின்மை" என்றும், இவ் அவாவை அறுத்தவன் நிசசயமாக அடைவது கேவலம் ஆன்மபிரம ஐக்கியநிலை யாதல்பற்றி அதனை வாய்மை எனப் பரிகரித்து "மற்றது வாஅய்மை வேண்ட வரும்" என்றும் கூறினரென்ப இதனை "வேண்டாமை எனுஞ் சுடர்வே லொன்றுவயிராக்கியர்கோன் விடுத்த லோடு மாண்டானக் கடுலோப னிசசையுந்தன் மகிழ்நனொடு மடிந்து சாய்ந்தாள்" என்னும் பிரபோத சந்திரோதயச் செய்யுளாலும் அறிந்துகொள்ளலாம். (௪)

அற்றவ ரென்பா ரவாவற்றார் மற்றையா
 ரற்றாக வற்ற திலர்.

பதவுரை.

மற்றவரென்பார் —(பிறவி) அற்றவரென்று சொல்லப்படுமவர்

அவாவற்றார் —(அதற்கு நேரே ஏதுவாகிய அவ் வாசையற்றவர்

மற்றையார் —பிறவேதுக்கள் அற்றுஅது ஒன்றும் அறாதவர் (அவ்வேதுக்களாலே சில துன்பங்கள் அற்றவரல்லாமல்)

அற்றாக வற்றதிலர்—அவர்போற்பிறவியற்றிலர்

(கருத்து) பிறவியற்றவரென்று சொல்லப்படுபவர் ஆசையற்றவர் என்பதாம்.

(இதனால் அவாவற்றவரது சிறப்பு விதியினாலும், எதிர்மறையினாலுஞ் சொல்லப்பட்டது.)

விசேஷ ஞானவிருத்தி.

கருமி, முமூட்சு, அப்பியாசி, அனுபவி, ஆரூடன் என அதிகாரிகள் ஐவகைப் படுவாராதலானும், அவருள் சாதிகரும மாத்திரம் பிடித்துச சதசென்மத்தில் முத்தனாகிறவன் கருமி என்றும், சகம் அசத்தென்று தெளிந்து

ஆத்ம கரும நிட்டனாய் மூன்று சென்மத்தில் முத்தனாகிறவன் முமூட்சு என்றும், சொப்பனம்போலப் பிரபஞ்சம் மித்தையென்றறிந்து அப்பியந்தரத்தில் தியானாதி கருமயுக்தனா யிரண்டுசென்மத்தில் முத்தனாகிறவன் அப்பியாசி என்றும், விவகாராபேட்சை விட்டு விவேக தற்பரனாகி ஏக சென்மத்தில் முத்தனாகிறவன் அனுபவி என்றும், விசுவ விகிருதி தோன்றாமல் ஆத்ம ஞானத்தால் பிரமத்தோடு ஐக்கியப்படுபவன் ஆருடன் என்றும், அத்வைத நூல்கள் கூறுகின்றபடியானும் ஈங்கே நாயனாரும் முற்கூறிய நான்கு அதிகாரிகளையும், அடக்கி "மற்றையார் அற்றாக வற்றதிலர்" என்றும், ஐந்தாவது அதிகாரியை மாத்திரம் ஆமோதித்து "அற்றவ ரென்பா ரவாவற்றார்" என்றும் கூறினாரென்ப. இதனைக் "கருவிகரணாதியினீங்கிக் காணுந் தானே தானாகி மருவுமனுபூதியிற்கண்டு மற்றொன்றினையுங் காணமல் உரையுமிறந்து வானாதி யொழிய ஒழியா தேமன்னிப் பிரமம்

நானே எனத் தெளியும் பேறே பெரிய மெஞ்ஞானம்'' என்ற மெஞ்ஞான விளக்கச் செய்யுளாலும் அறிந்துகொள்ளலாம். (௫)

அஞ்சுவ தோரு மறனே யொருவனை
வஞ்சிப்ப தோரு மவா.

பதவுரை.

ஒருவனை-(மெய்யுணர்தல் முடிவாகியகாரணங்களெல்லாம் பெற்று அவைகளால் முத்தியை அடைதற்குரியவனாகிய) ஒருத்தனை
வஞ்சிப்பது } மறவழியினாலே நுழைந்து பின்னும் பிறவியிலே தள்ளிக்கெடுக்கவல்லது
அவா —அவாவாம் (ஆதலால்)
அஞ்சுவது—(அவ்வவாவை) அஞ்சிக் காப்பதே
அறன் —துறவறமாம்.

(கருத்து) ஒருவனைக் கெடுக்கவல்லதாகிய ஆசையை நீக்குவதே துறவறம் என்பதாம். ஒரும் என்பன இரண்டும் அசைகள்.

அநாதியாய்வந்த அவ்வவா ஓரோவிடத்து வாய்மையை வேண்டுதலை யொழிந்து பராக்கிறுலே காத்திடாஞயின் அது இடமாக அவன் அறியாமல் புகுந்து பழைய வியற்கையாய் நின்று பிறப்பினை உண்டாக்குதலால் அதனை வஞ்சிப்பது என்றார். காத்தலாவது, வாய்மை வேண்டலிலே இடைவிடாமற் பழகிப் பரிகரித்தல். (இதனல் அவாவின் குற்றமும் அதனைக் காப்பதே அறமென்பதும் சொல்லப்பட்டது.

## விசேஷ ஞானவிருத்தி.

ஒரு காரியத்தை முன்னிட்டு அதனை முடிப்பான் வேண்டி நண்பர் இருவர்கூடி ஒருவனை "நீ நாளை அதிகாலை என்னில்லம் புகின், நாமிருவரும் சேர்ந்து செல்வோம்" எனக்கூறி யகன்று அன்றிரவில் அவண் படுத்துறங்கும் போது உயிர்குடிக்கும் அணங்கெனும் பேய் அவன் நண்பனைப்போல் உருத்தாங்கி நடுயாமத்தில்வந்து அவனை எழுப்பி அவனுக்கிதம் புரியும்

நண்பனைப்போலவே பேசி நடித்து அவனை வஞ்சித்து வெகுதூரம் அழைத்துச் சென்று ஆங்கே தக்கதோரிடத்தில் திக்கென வெருளுமாறு செய்வித்து படுகுழியிற்றள்ளி உயிர் குடித்தேகுதல்போலவே ஈங்கே அவாவென்னும் பேயும் சென்மங்கடோறும் ஆன்மாக்களை யடுத்து அவற்றினுக்கு இதம்புரிவதுபோல் நடித்து அவற்றை வஞ்சித்துப் பாசமென்னும் மோசப்படுகுழியிற்றள்ளி உயிர்குடித் தேகுதலும் மீண்டும் வந்தணுகுதலுமாயிருத்தல்பற்றி அவ்வுண்மையை ஆன்மாக்கள் உள்ளபடி அறிந்துய்யும்பொருட்டே "ஒருவனை வஞ்சிப்பதோரும் அவா" என்றும், அவ் அவாவினாலடையும் இத்தகைக் கோரமுடை அனர்த்தங்களை எல்லாம் ஆன்மாக்கள் உணர்ந்து அவ் அவாவினுக்கஞ்சி அதனை அணுகவிடாமற் காப்பதொன்றே மற்றை எல்லாவித அறங்களும் செய்ததுபோல் ஒக்குமென்பதையும் தக்கவாறு வலியுறுத்தி "அஞ்சுவதோரு மறனே என்றும், கூறினு

ரென்ப. இதனை "ஆசையஞ்சுமின் அறன் பிறவெற்றிற்கோ பாசம் வந்தாங்கே பற்றலால் நீங்குமின் பேயினும் பெரிதே பேரவா என்பதை ஆய்மின், அறிமின், அறிந்தாற் பிறப்பின்று" என்னும் அத்தியாத்தும விளக்கச் செய்யுளாலும் அறிந்துகொள்ளலாம். (கூ)

அவாவினை யாற்ற வறுப்பிற் றவாவினை
தான்வேண்டு மாற்றன் வரும்

பதவுரை.

அவாவினை —(ஒருவன்)ஆசையினை

ஆற்ற வறுப்பின் — முழுது மறுத்தால் (வஞ்சித்தும் வாராமற் கெடுக்க வல்லவனாயினென்றபடி) (அவனுக்கு)

தவாவினை —கெடாமைக்கு ஏதுவாகிய செயல்

தான் வேண்டுமாற்றால் — தான் விரும்பும் வழியினாலே

வரும் — உண்டாகும்.

(கருத்து ஒருவன் இச்சையை நீக்கினால் அவன் கெடாமைக்கு ஏது உண்டு என்பதாம்.

கெடாமை—பிறவித் துன்பங்களால் அழியாமை. அதற்கு ஏதுவாகிய வினையென்றது மேற்சொல்லிய துறவறங்களை. தான் விரும்பும் வழி—மெய்வருந்தாத வழி. அவாவை முழுவதும் அறுத்தவனுக்கு மேலே தவஞ்செய்ய வேண்டுவதில்லை. அவனால் செய்யப்பட்டவையெல்லாம் அறமாம் என்பது கருத்து.

விசேஷ ஞானவிருத்தி.

அக்கினியின் சம்பந்தத்தினாலே தண்ணீர் வெந்நீரானாற் போன்று நித்தியமான ஆன்மாக்கள் அனித்தியமான தேக சம்பந்தத்தினாலே உண்ணல், உறங்கல், சஞ்சரித்தல், முதலிய தொழில்களைத் தம்முடையன வாகப் பாவித்தலானும், தமக்கு வேறான இந்திரியக் கூட்டங்களின் தொழில்களைத் தம்முடையனவாகப் போஷித்தலானும், மன முதலியன

யான் என தெனச் சங்கற்பிப்பதைத் தமதாக மோகித்தலானும், தானல்லாததைத் தானுகக் கருது மகங்கார மமகாரத்தைத் தமதாக நேசித்தலானும், அவன் இவன் அது இது எனப் பல விதக் கோரமூடவேறுபாடுகளையடைந்து இத் தகைய பிறப்பிறப்புத் துன்பங்களில் ஈடுபட்டு அல்லோலமடைகின்ற தாதல்பற்றியும், அவை அனைத்தினுக்கும், காரண கருவியா யிருந்து ஆன்மாக்களைக் காற்றாடியைப்போல் ஓயாமல் சுழலுமாறு செய்வித்துக்கொண்டுவருவது இவ் அவா ஒன்றேயாக முடிதல்பற்றியும், ஈண்டு நாயனுரும் "அவாவினை யாற்ற வறுப்பின்" என்றும், அவ்வாறு அவாவை அடியோடறுத்து அது நசிந்தொழியுமாறு செய்துவிட்டால் அதன் நாசத்தால் வேறொரு நிமித்தத்தை அபேட்சியாமலே விருத்திகள் அனைத்தும் நாசமாய் ஆறத்துவாக்களிலும் கட்டுப்பட்டுக் கிடக்கிற போகங்களெல்லாம் ஏககாலத்திலே நெருப்பிற்பஞ்சுபோல் உருக்குலைந்து ஜீவபிரம

ஐக்கியம் சித்திக்குமென்பதே சத்தியமென்பது பற்றித் "தவாவினை தான் வேண்டு மாற்றான் வரும்" என்றும், கூறினரென்ப. இதனை "ஆசையெனும் பாச மறவே தொலைத் தொழிந்தால் மோசஉல கெங்கே முளைக்குங்காணுய்வீரே" என்ற அத்வைத விளக்கச் செய்யுளாலும் அறிந்துகொள்ளலாம். (எ)

அவாவில்லார்க் கில்லாகுந் துன்பமஃ துண்டே
றவாஅது மேன்மேல் வரும். [டேற்

பதவுரை.

அவாவில்லார்க்கு — ஆசையில்லாதவர்க்கு
துன்பம் — (வரக்கடவதொரு) துன்பம்
இல்லாகும் — இல்லையாகும் (ஒருவனுக்குப் பிற காரணங்களெல்லாம் இல்லாதிருந்தும்)
அஃதுண்டேல் — அவ்வொன்று மாத்திரம் உண்டாயின் (அதனால் எல்லாத் துன்பங்களும்)

தவாது —முடிவில்லாமல்
மேன்மேல் —மேலும் மேலும்
வரும் —வந்துகொண்டிருக்கும்.

(கருத்து) ஆசையற்றவர்களுக்குத் துன்பமில்லை என்பதாம்.

உடம்பு மொண்டுகொண்ட துன்பம் முன்பே செய்து கொள்ளப்பட்டதாகலின் இங்கே துன்பமென்பது இப்போது அவரவராலே செய்துகொள்ளப் படுகின்றவைகளே. மேன்மேல் வருமென்றதனால், தன்னைப்பற்றி வருவதும், பிறவுயிரைப்பற்றி வருவதும், தெய்வத்தைப்பற்றி வருவதும் ஆகிய மூவகைத் துன்பங்களென்பது பெற்றும். (இதனால் ஆவாவே அத்துன்பத்திற்குக் காரணமென்பது சொல்லப்பட்டது.)

## விசேஷ ஞானவிருத்தி.

ஞானமே அஞ்ஞானத்தைக் கெடுக்குமன்றி அஞ்ஞானத்திற்கு அணுவும் விரோதமில்லாத கர்மம் அஞ்ஞானத்தைக் கெடுக்காதாதலானும் நிரந்தரம் அகண்டாகார பிரமம் நானே என்று தியானித்து வருகிற ஒப்பற்ற தியானமுங்கூட விதி விசுவாசம் இச்சை என்கிற மூன்றனுள் அடங்கி அநகேயும் இச்சையாகிய அவாவென்பது தோன்றுகிறபடியானும் அத்தகைய காரணம்பற்றி அத் தியானமும், பிரதீகத் தியானம், தியேயானுசாரத் தியானம், அகங்கிரகத் தியானம் எனப் பல வேறுபாடுற்று முடிவில் தண்ணீரிலுள்ள சேற்றைப் பிரிக்கின்ற தேற்றான் விதையானது அத்தண்ணீரை சுத்தஞ் செய்துவிட்டுத் தானும் அச்சேற்றோடு கரைந்தொழிவதுபோலவே தியானமனைத்துங் கரைந்தொழிந்து அகண்டாகார பிரமமய மாத்திரமேயாய் ஆன்ம பிரம ஐக்கியம் பெறவேண்டுமென்பது பற்றியும் ஈங்கே நாய

ஞர் ஆவை அனைத்தையும் சுருக்கியும் விளக்கியும் "அவாவில்லார்க் கில்லாகுந் துன்பம்" என்றும், யாதொரு ஆன்மா அபரோட்ச ஞானமடைந்த பின்னரும் இயான சம்பந்தத்தினாலேனும், இவ் அவா ஆங்கே புகுவதாயின் சிருஷ்டியாதி காலந்தொட்ட பழக்க வழக்க வாசனையால் இலகுவிலே சர்வ அனர்த்தங்களையும், மீண்டும் உண்டாக்கிவிடுமாதல் பற்றியும் "அஃதுண்டேல் தவாஅது மேன்மேல் வரும்" "என்றும், கூறினரென்ப. இதனை "வீஙகியவா சைகளெல்லா மிறந்தகாலை விரிந்த மன மிறப்பதுவே வீடென்றோதும், ஓங்கிய வீ டெனக்குளதென் றுள்ளே எண்ணம் உண்டாகில் மீண்டுமன முற்பவிக்கும்" என்ற ஞானவாசிட்ட வாக்காலும் உணரலாம். (அ)

இன்ப மிடையறா தீண்டு மவாவென்னுந்
துன்பத்துட் டுன்பங் கெடின்

பதவுரை.

அவா வென்னும் — அவாவென்று சொல்லப்படுகிற

துன்பத் துட்டுன்பம் — துன்பங்களுள்ளே மிகுந்த துன்பமான து

கெடின் — (ஒருவனுக்குக்) கெடுமாயின் (அவன் முத்திபெற்ற விடத்தே யல்லாமல்

ஈண்டும் — இங்கேயும் (உடம்போடு கூடி நின்ற விடத்து மென்றபடி)

இன்பம் — ஆனந்தமான து

இடையறுது — நடுவே நீங்காது.

(கருத்து) மிகத்துன்பந் தருவதாகிய ஆசை கெடின் இவ்வுலகத்திலும் இன்பம் என்பதாம்.

துன்பத்துட் டுன்பமாவது மற்றைத் துன்பங்களெல்லாம் இன்பங்களாய்த் தோன்றும் படியாக வருங் கொடிய துன்பமாம். அவா வானது பயனைக் கொடுக்கும்போதேயல்லாமல் தோன்றும்போதும், துன்பமாகலால் இப்படிச

சொல்லப்பட்டது. அவாவென்னுந் துன்பத் துட்டுன்ப மென்று காரணத்தைக் காரியமாக உபசரித்தார். அவ் வவாக் கெட்டவர்க்கு மனந் தடுமாறுது நிரம்பி நிற்குமாகையால் ஈண்டும் இன்பமிடையறாது என்முர். இதனால் அவா வறுத்தவர் முத்தியின்பத்தை உடம்போடு நின் றே அடைவாரென்பது சொல்லப்பட்டது.

## விசேஷ ஞானவிருத்தி.

பிரமத்தைத் தவிர மற்றைப் பிரபஞ்ச மாதியனைத்தும் அனித்தியமாதல்பற்றித் துன் பமயமேயன்றி இன்பம் எள்ளளவு மின்ருத லானும் "இத்துன்பத்திற் கிடையில் இன்ப மும் இருக்கின்றதே" என எண்ணுவதாயின் அவ் வின்பம் ஒரு கருடன்வாயில் அரவும் அவ் அரவின்வாயில் தேரையும், அத் தேரை யின்வாயில் வண்டும், அவ்வண்டின் வாயில் மலரும், அம்மலரின் வாயில் துளியளவு தேனும் இருக்க அத்தேனை அவ்வண்டானது

அந்த அவசரத்தில் உண்டு இன்பம் அனுபவிக்க அவாவுவது போலவே ஆன்மாக்கள் இப்பிரபஞ்சத்தில் அனுபவிக்கப்படுகிற இன்பமாதல்பற்றியும் இன்பம் என்பது வாச்சியார்த்தமே யல்லாமல் லட்சியார்த்த மன்றென முடிந்து இவ்வளவு துன்பத்திற்கும் வித்து அவாவாதல்பற்றி அதனை "அவாவென்னும் துன்பத்துள் துன்பம்" என்று விளக்கியும் அத்துன்பந் தொலைந்தால் இடையறா இன்பமாகிய ஜீவபிரம ஐக்கிய நிலையே கிட்டுமாதலால் அந்நிலை உடம்போடுகூடிய தென்றாவது அல்லது உடம்போடு கூடாத தென்றாவது ஆண்டு என்றாவது ஈண்டு என்றாவது அடிமுடி நடு சுட்டிக் கூறுதற்கிடனன்றி அண்டபகிரண்டமும் அடங்க ஒரு நிறைவாகி ஆனந்தமான நிலைமையாயே முடியுமென்பது பற்றியும் நாயனாரும் அதனை ஈண்டும் என முற்றும்மை வைத்து முடித்தாரென்ப. இதனை "நிட்டையிலே யிருந்துமனத் துறவடைந்த பெரியோர்

கள் நிமலன்றாளைக் கிட்டையியே யிருந்து முத்தி பெறுமளவும் பெரியசுகங் கிடைக்குங் காம வெட்டையிலே மதிமயங்கிச் சிறுவருக்கு மணம் பேசி விரும்பித்தாலி கட்டையிலேயிருந்துநடுக் கட்டையிலே கிடத்துமட்டுங் கவலைதானே" என்ற ஒரு அத்வைதப் பெரியார் கூறிய அமுத மொழியானும் அறியலாம். (கூ)

ஆரா வியற்கை யவாநீப்பி னந்நிலையே
போரா வியற்கை தரும்.

பதவுரை.

ஆராவியற்கை—(ஒருபோதும்)நிரம்பாத இயல்பையுடைய
அவா —ஆசையை
நீப்பின்—(ஒருவன்)விடுவானாயின் (அவ்விடுகை அவனுக்கு)
அந்நிலையே —அப்போதே
பேராவியற்கை—(எப்போதும்) ஒரு நிலைமையனாந் தன்மையை
தரும் —கொடுக்கும்.

(கருத்து) நிரம்பாத ஆசையைவிடில் அது பிறவாமையைத் தரும் என்பதாம்.

நிரம்பாமையாவது:—தாமேயல்லாமல் தம் பயனும் நிலையாமையால் வேண்டத் தகாத பொருள்களை வேண்டி மேலும் மேலும் வளர்த்தல். அவ்வளர்ச்சிக்கு அளவில்லாமையால் விடுதலே தக்கதென்பது கருத்து. களிப்புக் கவலைகளும், பிறப்புப்பிணி மூப்பிறப்புக்களும் முதலானவை இல்லாமல் உயிர் ஒப்புயர்வில்லாத இன்பத்தை அடைந்து நிற்கையால் வீட்டினைப் போாவியற்கை என்றும், அதை அவாவைவிட்ட விடத்துப் பெறுதற்கு ஐயமில்லாமையால் அந்நிலையே தரும் என்றும், சொல்லினர். அந்நிலைமையை யுடையவனைச் சீவன் முத்தன் என்பர் (இதனால் வீடாவது இதுவென்பதும், அது அவாவறுத்தவர்க்கு அப்போதே உண்டாமென்பதும் சொல்லப்பட்டன.)

## விசேஷ ஞானவிருத்தி.

அவாவை நாயனார் ஆராவியற்கை உடையது என்றும், ஆன்ம பிரம ஐக்கிய நிலையை ஆங்கே பேரா வியற்கை யுடையது என்றும், அடைமொழிதந்து பிரித்துக் காண்பித்தாராதல்பற்றி அவாவொன்றே ஆன்ம பிரம ஐக்கிய நிலைக்கு நேர் விரோதமுடையது என்பது பெறப்படுகின்றபடியினாலும், இவ்வதிகாரத்தில் இரண்டுதவிர எட்டுச் செய்யுள்களில் அவா என்கிற சொல்லையே விடாது பிரயோகித்திருக்கிறபடியினாலும் இவ் அவாவைப்பற்றி இன்னுஞ் சற்று ஆழ்ந்து சிந்திப்பேமாயின் அது அ என்னும் பாரமார்த்திக பிரம சைதன்னியத்தின் முதலக்கரமே ஈங்கு விகாரமுற்று நீண்டு ஆ என்று தேகாதிப் பிரபஞ்சமாகி இவ்விரண்டும் தம்முள் கூட அ-ஆ என்றாய், அவை இரணடையும் ஒன்றிக்குமாறு இடையில் வகர ஒற்று ஒன்று தோன்றி அவ்வா என ஓர் மொழியாகிப் பின்னரது நடுக்குறைந்து அவா என நிற்

கின்றதெனை அறியக் கிடக்கின்றவாதலானும், ஈங்கே அ-என்கிற பிரமமே ஆ என்கிற தேகாதிப்பிரபஞ்சஙகளாக வ் என்னும் அந்தக் கரண ஸ்படிகத்தில் பிரதிபலித்துத் தோற்றப் படுவதன்றி இத்தோற்ற பேதங்கள் அனைத்தும் முக்காலத்தும் எதார்த்தமாக இல்லை என்கிற அத்வைத ஐக்கிய நிலைமையே எம்மதத்தார்க்கும் சம்மதமாமெனை ஆன்மாக்கள் அறிந்துய்யும்பொருட்டு முற்றமுடிவாய் ' ஆராவியற்கை யவாநீப்பி னந்நிலையே பேராவியற்கை தரும்'' என்றும்கூறி முடித்தாரென்ப. இதனை ''மாளாத காதலெனும் வர்ச்சனுபிக் கொடியின் வனத்தைச்சுட்டு நீளாசையனைத்துமறுத்தவர்க் கன்றோ விப்பயன்று னேரா நிற்கும்'' என்னும் ஞானவாசிட்டச் செய்யுளாலும் அறியலாம்.(ய)

துறவறவியல் முற்றிற்று.

இவ்விதத்தால் மோட்சத்தை உண்டாக்கும் சிறப்புடைய துறவறத்தை அருளிச்செய்தார்.

இனி மோட்சத்திற்கும் பந்தத்திற்கும் காரணமாகிற ஊழின்வலி சொல்லுகிறர்.

## 38-ம் அதிகாரம் ஊழ்.

அஃதாவது:—நல்வினைப் பயனாகிய இன்பமும், தீவினைப் பயனாகிய துன்பமும், அவ்வினைகளைச் செய்தவனையே சென்று அடைதற்கு ஏதுவாகிய நியதியாம். ஊழ், பால், முறை, உண்மை, தெய்வம், நியதி, விதி, என்பவை ஒரு பொருட் சொற்கள்:—இது பொருளின்பங்களிரண்டுக்கும் பொதுவாய் ஒன்றனுள் வைக்கப்படாமையாலும், முன் சொல்லப்பட்ட அறத்தோடு சம்பந்தமுடைமையாலும், அதனிறுதியிலே சொல்லப்பட்டது.

ஆகூழாற் றேன்று மசைவின்மை கைப்பொருள்
போகூழாற் றேன்று மடி.

**பதவுரை.**

கைப்பொருள் —(ஒருவனுக்கு) கையிலிருக்கும் பொருள்
ஆகூழால் — ஆகுதற்குக் காரணமாகிய ஊழினாலே
அசைவின்மை — முயற்சியானது
தோன்றும் — உண்டாகும்
போகூழால் — போகுதற்குக் காரணமாகிய ஊழினாலே
மடி — சோம்பலானது
தோன்றும் — உண்டாகும்

(கருத்து) ஒருவனுக்குப் பொருள்வரும் விதியால் முயற்சியும், பொருள் அழியும் விதியால் சோம்பலும் உண்டாகும் என்பதாம்.

ஊழானது ஒரு பொருளினது ஆக்க வழிவுகளுக்குத் துணைக்காரணமாகிய முயற்சி, சோம்பல்களையும் தானே தோன்றச் செய்யுமென்பது கருத்து.

## விசேஷ ஞானவிருத்தி.

மெய், வாய், கண், செவி, மூக்கு, என்னும் பஞ்சேந்திரியங்களினால் அனுபவிக்கப் படுகிறபிரத்தியட்சமான இத்தேகாதிப்பிரபஞ்சங்களைத் தவிர "அப்பிரத்தியட்சம் அனுமானம் முதலியவைகளால் மூடநம்பிக்கை வைத்து கடவுள் ஆன்மா முற்பிறப்பு பிற்பிறப்பு புண்ணியம் பாவம் சாதி சமயம்" எனப் பேசப்படுவன அனைத்தும் இல்பொருளே யன்றி உள் பொருள்கள் அல்லவென்றும், அகலிடம் அப்பு தேயு வாயு என்கிற நான்கு பூதங்களின் கூட்டுறவால் கரும்பிற் சுவை போல் காயத்தில் உயிர் உண்டாய்ப் பின்னரது கெடும் என்றும், பொருள் இன்பம் இவ்விரண்டுமே புருஷார்த்தமாதலின் அவ்வுயிர் அவ்வாறு கெடுமுன் "உயர்ந்தோர் தாழ்ந்தோர் தமக்குரியார் பிறர்க்குரியார் இரவு பகல் முதலிய தாரதன்மியங்களைக் கருதாமல் கண்டதே காட்சி கொண்டதே கோலம்" என உண்டுடுத்துக்

கண்டு களிப்பதுதான் பரம புருஷார்த்தம் என்றும் ஆன்மாக்கள் மயங்கி இவ்வாறு அனர்த்தங்களைப் பெறுகின்றதாதலின் மண்ணுண்ட பிள்ளைக்கு மாதா மருந்து கலந்த தின்பண்டமீந்து அதன் தோஷத்தை நிவர்த்திப்பது போல் ஈங்கே நாயனுரும் ஆஸ்திகத்தை ஆன்மாக்களுக்குப் போதிப்பான் வேண்டிப் பிறப் பிறப்பிற்குக் காரணமான ஊழைப் பொருளுக்குக் காரணங்காட்டிக் கைப்பொருள் ஆதற்குக் காரணமான முயற்சியை ஊழின்மீதேற்றி "ஆகூழாற் றோன்று மசைவின்மை" என்றும், அது போதற்காகும் சோம்பலையும் அவ் ஊழின் மீதேற்றிக் "கைப்பொருள் போகூழாற் றோன்றுமடி" என்றும் கூறினரென்ப. என்றுலும் ஈங்கே இவ் ஊழைப் புசிப்பவனே ஞானி என்பது அர்த்தாபத்தியாம். "இதனை ஆக்கமதர் வினய்ச் செல்லும் அசைவிலா ஊக்க முடையானுழை" என்ற திருக்குறளானும் தெரியலாம.

**பேதைப் படுக்கு மிழவூ ழறிவகற்று
மாகலூ ழுற்றக் கடை.**

**பதவுரை.**

அறிவு—(ஒருவனுக்கு) எல்லாவறிவும் உண்டா யிருந்தாலும்
இழவு - (கைப்பொருள்) இழத்தற்குக் காரண மாகிய
ஊழ்—(உற்றக்கடை) ஊழ்பொருந்திய விடத்து
பேதைப் படுக்கும் } —(அதனை) அறியாமையாக்கும் (அவன் அறிவு சுருங்கியிருந் தாலும்)
ஆகல்—(கைப்பொருள்) ஆகுதற்குக் காரண மாகிய
ஊழ் —ஊழானது
உற்றக்கடை— பொருந்தியவிடத்து
அகற்றும்—(அதனை) விரிக்கும்.

(கருத்து) போகும் ஊழ் அறிவில்லா மையையும், ஆகும் ஊழ் அறிவையுந்தரும்.

கைப்பொருளென்பது அதிகாரத்தால் வருவிக்கப்பட்டது. ஊழ் இயற்கையாலாகிய அறிவையும் வேறுபடுத்துமென்பதாம்.

## விசேஷ ஞானவிருத்தி.

அன்று பிறந்த கன்றுயிருப்பினும் அதனையோர் பசுமந்தையினூடு விடப்பட்டால் அது தன் தாயையே தேடி அடைதல்போல ஆன்மாக்கள் முற்பிறப்பிற் செய்த நல்வினை தீவினைகளில் அனுபவித்ததுபோக எஞ்சி நின்ற வினைகள் இப்பிறப்பிலும், இப்பிறப்பில் செய்கிற நல்வினை தீவினைகள் இனிவரும் பிறப்பிலும், அவ்வவ் ஆன்மாக்களைத் தேடியடைந்து அவர்களை வருத்துமாதலால் இப்பிறப்பிலேனும் ஆன்மாக்கள் அவற்றை உணர்ந்து அது காரணமாகத் தீவினையை அஞ்சி நல்வினையை நாடும் பொருட்டு அவ்வினைகளினது ஆற்றலை உள்ளது உள்ளவாறு விளக்கி "ஒருவன் எவ்வளவு அறிவாளியாயிருந்தாலும் அவனது

செல்வம் போங்காலம் வருமானால் அவனது அறிவையும் அவன் முன்செய்துள்ள தீவினையாகிய ஊழ் கெடுத்துவிடும்'' என அதனைப் "பேதைப்படுக்கும் இழவூழ்''என்றும், ஒருவன் எவ்வளவு மூடனாயிருந்தாலும் அவனுக்குச் செல்வம் பெருகுங்காலம் வருமானால் அவனுடைய மூடத்தனத்தையும் போறி வாக்கிவிடும் என அதனை "அறிவகற்று மாகலூ ழுற்றக் கடை'' என்றும் கூறினரென்ப. இதனை "மருவினிய சுற்றமும் வான்பொருளும் நல்ல உருவும் உயர்குலமும் எல்லாம்-திருமடந்தை-ஆம்போ தவளோடுமாகும் அவள் பிரிந்து போம் போதவளோடும் போம்'' என்ற ஒளவையார் அருளிய வாக்காலும் அறியலாம். (உ)

நுண்ணிய நூல்பல கற்பினு மற்றுந்தன்
னுண்மை யறிவே மிகும்.

பதவுரை.

நுண்ணிய —(அறியாமை யாக்குவதாகிய ஆழு டையவனொருவன்) நுட்பமான பொருள்களையுடைய
நூல்பல —பல நூல்களையும்
கற்பினும் — கற்முனுயினும் (அவனுக்கு)
மற்றும் — பின்னும்
தன்னுண்மை — தனது ஊழினுலுளதாகிய
அறிவே — அறிவே
மிகும் —மேற்படும்.

(கருத்து) ஒருவன் நுட்பமாகிய நூல்களைக் கற்முலும் அவனுக்கு ஊழினுலாகிய அறிவே மிகும் என்பதாம்.

பொருளினுண்மை நூலின்மேல் ஏற்றப்பட்டது. மேற்படுதல்-கல்வியறிவைப் பின்னே இதை என் செய்தோமென்று துன்பப்படுதற்காக்கிச் செயலுக்குத் தான் முற்படுதல். செயற்கையாலாகிய அறிவையும் ஊழானது கீழ்ப்படுத்தும் என்பதாம்

## விசேஷ ஞானவிருத்தி.

நீண்டகாலமாக அத்வைத சாஸ்திர ஆராய்ச்சிசெய்து ஐயந்திரிபறக் கேட்டுணர்ந்து நிரந்தரம் நேசத்தோடும் அப்பியாசித்துச் சிரவண மனன நிதித்தியாசனங்களாகிய முயற்சியினது முதிர்ச்சியினல் பஞ்சகோசங்களையுங் கடந்து பாழையுந்தள்ளி இருதயத்தில் விரிந்த கொஞ்சமாம் இருப்பையும் விட்டு விழித்திருப்பவன் கைப்பொருள் அவன் உறங்கிய பின்னர் அவன் கையிலிருந்து நழுவுதல்போல் கூடஸ்தன் பிரமம் என்கிற நேசமும் நழுவித் துவித கற்பனை துக்கமற்று அத்துவிதவகண்டானந்த முற்று எங்கும் நிறைந்த பரிபூரணபாரமார்த்திக வஸ்து "நானேவே இருக்கின்றேன்" எனத்தெளிந்த தீவிர அதிகாரிகளின் பெருமைதோன்ற அவர்களை "நுண்ணிய நூல் பல கற்பினும்" எனக் கற்றலின் சிரமசிறப் பும்மைவைத்து வியந்தும், அத்தகைய அதிகாரிகளையும் அவர்கள் பூர்வ ஜென்மாந்

திரத்திற் செய்துள்ள ஊழ் போகூழாயிருப்பின் அது வந்து அவர்கள் ஞானத்தைக் கெடுத்து அஞ்ஞானத்தைக் கொடுத்து அவர்களைப் பிறப்பிறப்புக்களில் இழுத்தும் விடுதல் நிச்சயம்பற்றி "மற்றுந்தன் னுண்மை யறிவே மிகும்" எனத் தேற்ற ஏகாரம் வைத்துங் கூறினாரென்ப. இதனைத் "தானாகும் பிரமரூபஞ் சற்குரு நூலாற்றோன்றும் ஆனாலுந் தடைகளுண்டேல் அனுபவமுறைத்திடாதே" என்ற கைவல்லிய மஹா வாக்யத்தாலுங் காணலாம். (௫)

இருவே றுலகத் தியற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு.

பதவுரை.

உலகத்து — உலகத்தில்
இயற்கை — (ஊழினாலாகிய) இயற்கையானது
இரு வேறு — இரண்டு கூறாயிருக்கின்றது (ஆதலால்)

திருவேறு —செல்வமுடையவ ராதலும் வேறு

தெள்ளியரா தலும் வேறு } — அறிவுடையவ ராதலும் வேறு

(கருத்து) உலகில் ஊழின் இயல்பு செல்வ முடைமை அறிவுடைமை என இரண்டுவகை என்பதாம்.

செல்வத்தைப் படைத்தலும், காப்பாற்ற லும், பயன்கொள்ளுதலும், அறிவுடையவர்க் கல்லது கூடா வென்ற அவ்விதமல்லாமல் அறிவுடையவர் வறியவராகவும், மற்றவர் செல் வராகவும் காணுதலால் அறிவினராதற்கு ஆகிற ஊழ், செல்வராதற்கும், செல்வராதற்கு ஆகிற ஊழ், அறிவினராதற்கும் ஆகாவென்றதா யிற்று. ஆகவே செல்வத்தைத் தேடும்போது அறிவாகிய துணைக்காரணமும் வேண்டாமென் பது பெற்றும்.

## விசேஷ ஞானவிருத்தி.

அநாதிகாலந்தொடுத்து ஆன்மாக்கள் செய்துவருகிற நல்வினை தீவினை இரண்டும் தம்மைச் செய்த ஆன்மாக்களுக்குத் தம் பயன்களாகிய இன்ப துன்பங்களைப் பிறப்பிறப்புக்களில் தவறுமல் தந்துகொண்டிருக்குமென்றும், அவை சஞ்சிதம், பிராரத்தம், ஆகாம்யம் என மூத்திறப்புற்றுப் பிறப்பு அநாதியாய் வருதலின் அளவில்லாமல் செய்து சேர்க்கப்பட்ட வினைகளின் பயன்கள் சஞ்சிதமென்றும், அவற்றுள் இறந்த உடல்கள் அனுபவித்தற்கு எடுத்துக் கொள்ளப்பட்டன பிராரத்தமென்றும், அவையன்றிப் பின்னும் சம்பாதிக்கப்படுவன ஆகாம்யமென்றும் வேதவேதாகமங்கள் விதித்திருக்க இங்கே நாயனார் அவற்றினும் ஒருபடி மேனின்று நல்வினையை இரண்டு வகையாகப் பிரித்து,

"இருவேறுலகத் தியற்கை" என்றும், அவற்றுள் ஒன்று அழியுந்தன்மையோடு கூடிய இகபோகமாகிய பொருளைப்பற்றிய தாதலான் அதனை வேண்டா விருப்பாகத் "திருவேறு என்றும், மற்றொன்று அங்ஙனமன்றி என்றும் நின்ற பரமான்ம போகமாகிய கல்வியெனும் அருளைப்பற்றிய தாதலான் அதற்கோர் உயர்வு சிறப்பும்மைவைத்துத் தெள்ளியராதலும் வேறு என்றுங் கூறினாரென்ப. இதனைக் "காமிய கன்மம் கருதியதளிக்கும் நிஷ்காம கன்மம் நீள்பதமளிக்கும் பிறவியைத்தருவது முன்னது பின்னது பிறவாநெறிப்பே ரின்ப மென்றுணர்க" என்னும் அதிட்டான விளக்கச் செய்யுளானும் அறிந்துகொள்ளலாம். (௭)

நல்லவை யெல்லாஅந் தீயவாந் தீயவு
நல்லவாஞ் செல்வஞ் செயற்கு.

பதவுரை.

செல்வம் —செல்வத்தை

செயற்கு —உண்டாக்குதற்கு

நல்லவை யெல்லாம் —நன்மையுள்ளவை யெல்லாம்

தீய வாம் —தீயவையாய் அழிக்கும் (அது மாத்திரம் அல்லாமல்)

தீயவும் —தீயவை தாமும்

நல்லவாம் —நல்லவையாக்கும் (ஊழ்வசத்தால்)

(கருத்து) விதிவசத்தால் நல்லவையெல்லாம் தீயவாம், தீயவையெல்லாம் நல்லவாம்.

நல்லவை தீயவை என்றது, காலமும், இடமும் கருவியும், தொழிலும் ஆகிய இவை முதலானவைகளை. ஊழாலென்பது அதிகாரத்

தால் வருவிக்கப்பட்டது அழிக்தும் ஊழ் உற்ற விடத்துக் கால முதலானவைகள் நல்லவையா யிருந்தாலும் அழியும். ஆக்தும் ஊழ் உற்ற விடத்து அவை தீயவையாயிருந்தாலும் ஆகும் என்பதாயிற்று. ஆகவே ஊழ், காலமுதலான துணைக் காரணங்களையுங்கூட வேறுபடுத்து மென்பதாயிற்று.

## விசேஷ ஞானவிருத்தி.

நிலையில்லாத இவ்வுலகின்கண் நிலையில் லாத இவ்வுடம்போடு கூடி நிலையில்லாத பெண்டு பிள்ளை மனை வாழ்வை உத்தேசித்து, நிலையில்லாத பொருட் செல்வத்தைத்தேட முயலும்போதும் ஆன்மாக்கள் தாம் முற் பிறப்பிற் செய்த வினை நல்வினையாகவும், அத னினும் செல்வத்தையாக்குதற் கேற்ற வினை யாகவும் இருந்தால் மாத்திரம் ஒருவனது

காலம், இடம், கருவி, தொழில் முதலியன ஆகாதனவைகளா யிருந்தபோதிலும் அவை அனைத்தும் அவனுக்கு அனுகூலமாக முடிந்து மேலும் மேலும் அவன் செல்வஞ் சேர்த்தற்கு உதவி புரியுமென்பதுபற்றித் "தீயவும் நல்ல வாஞ் செல்வஞ் செயற்கு" என்றும், அங்ஙன மில்லாமல் அவன் வினை தீவினையாயிருக்கு மாயின் அவனது காலம், இடம், கருவி, தொழில் முதலியன ஆகுமவைகளாயிருந்த போதிலும், அவன் தொட்டவை அனைத்தும் பட்டவையாகி உள்ளதும்போய் வறுமையின் கண் அல்லலுறவிடுக்கும் என்பதுபற்றி "நல்ல வையெல்லாந் தீயவாம்" என்றும் கூறினு ரென்ப. இனி இந்நிலையற்ற உலகிலிருந்து நிலைபெற்ற அருட் செல்வத்தை ஆன்மாக்கள் அடைதற்கு ஆகும் வினை பொருட் செல்வத்தை யாக்குதற்காகும் நல்வினையைவிட அரியதாதல்

பற்றி அறம் பொருள் இன்பம் வீடு என்னும் புருடார்த்தம் நான்கையும் பயக்கவல்ல இம்மானிடப் பிறவியிலேயே ஆன்ம பிரம ஐக்யம் பெறுதற்கான அருளோடு கூடியநல்வினையைப் புரிதல் அவசியம் என்பது அருத்தாபத்தி. இதனை "அருட் செல்வஞ் செல்வத்துட் செல்வம் பொருட் செல்வம் பூரியார் கண்ணுமுள" எனும் திருக்குறளானும் தெரிந்துகொளலாம்.

பரியினு மாகாவாம் பாலல்ல வுய்த்துச்
சொரியினும் போகா தம.

பதவுரை.

பால் —ஊழினாலே
அல்ல —தம்முடையவை யாகாதபொருள்கள்
பரியினும் —வருந்திக் காப்பாற்றினலும்

ஆகாவாம் — (தம்மிடத்து) நில்லாமற்போகும்
தம — தம்முடையவையாகிய பொருள்கள்
உய்த்து — (புறத்தே) கொண்டுபோய்
சொரியினும் – பெய்து விட்டாலும்
போகா —(தம்மைவிட்டுப்) போகாவாம்.

(கருத்து) ஊழினல் தமக்குரித்தாகாப் பொருள்களைக் காப்பாற்றினலும் நில்லா. உரித்தாகும் பொருள்களைப் புறத்திற் போக்கினலும் போகா என்பதாம்.

பொருள்களது நிலையும், போக்கும் ஊழால் ஆவதல்லது காப்பினலும், இகழ்ச்சியினலும் ஆகாதென்பதாம்.

இவைஆறுபாட்டாலும் பொருள்களுக்குக் காரணமாகிய ஊழின்வலி சொல்லப்பட்டது.

## விசேஷ ஞானவிருத்தி.

சர்வ ஜீவான்மாக்களும் அஞ்ஞாநாதியினால் உண்டாகின்றபடியினாலும், அவ் அஞ்ஞானாதிகள் மறையினால் உண்டாகின்றபடியினாலும், அம்மறை எக்கியத்தினாலுண்டாகின்றபடியினாலும், அவ் எக்கியம் கருமத்தினால் உண்டாகின்றபடியினாலும், அக்கருமம் சுபாவத்தினாலுண்டாகின்றபடியினாலும், அச்சுபாவம் பிரமத்தினாலுண்டாகின்றபடியினாலும் இங்கே சூரியன் சந்திரன் முதலியனதத்தங் கருமங்களை யாதொரு சிந்தனையற்று நிஷ்காம கருமங்களாகச் செய்தல் போலவும் ஆன்மாக்கள் மூச்சுவிடுகின்றபோதும், அதனை உள்ளிழுக்கின்றபோதும், அதைப்பற்றிய யாதொரு சிந்தனையும் இல்லாமல் இழுப்பதும் விடுவதும் போலவும், தத்தமக்குற்ற கருமங்களையும் இக்கர்மத்தைச் செய்கின்ற கர்த்தா நானல்லவென்கிற நிர்ச்சிந்தையோடு செய்கிற நிஷ்காம கர்ம யோகிகளுக்கே அக் கர்மத்தின் பலாபலனாகிய நல்வினை தீவினை என்கிற

பிறப்பிறப்பிற் குரியனவாகிய ஊழ் சம்பந்தப் படாமல் நசிந்து போவதன்றி மற்றைய பற்றுத லோடுகூடிய கர்மிகளை அவ் ஊழ் விடாதென் பது பற்றியும் அவர்கள் அவ்வூழின்படியே தான் பிறந்திறந்து சக்கரம் சுழல்வதுபோல் சுழன்று திரிய வேண்டும் என்பது பற்றியும் அவர்களது உடல் பொருள் ஆவி வாழ்வு தாழ்வு அனைத்தினுக்கும் அவ்வூழையே கர்த்தாவாக் கிப் "பரியினு மாகாவாம் பாலல்ல உய்த்துச் சொரியினும் போகா தம" என்று கூறினு ரென்ப. இதனை "வருந்தியழைத்தாலும் வாராத வாராபொருந்துவனபோமினென்றாற்போகா" என்ற ஔவையார் வாக்காலும் அறியலாம்.

வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி
தொகுத்தார்க்குந் துய்த்த லரிது.

பதவுரை.

கோடி—(அனுபவிக்குப்படும் பொருள்கள்
கோடியை
தொகுத்தார்க்கும்—வருந்திச சேர்த்தவர்க்கும்

| | |
|---|---|
| வகுத்தான் | —தெய்வத்தினால் |
| வகுத்த | —வகுக்கப்பட்ட |
| வகையல்லால் | —வகையாலல்லது |
| துய்த்தல் | —அநுபவித்தல் |
| அரிது — | — உண்டாகாது. |

(கருத்து) கோடிபொருளைச் சம்பாதித்தவர்க்குங் கடவுளமைத்த அமைப்பன்றி அநுபவித்தல் அரிது என்பதாம்.

எந்தவினை எந்த உயிரினாலே செய்யப்பட்டதோ அந்த வினையின் பயனை அந்த உயிர்க்கே வகுத்தலால் வகுத்தான் என்றார். தொகுத்தார்க்கு மென்னுமும்மை தொகுக்காதவர்க்கு மாத்திரமல்லாமல் என்னும் பொருளைத் தருதலால் எச்சவும்மை. வேறு முயற்சிகளாலே பொருள்களைச் சேர்க்கலாமே யல்லாமல் அநுபவித்தல் கூடாது. அதற்கு ஊழ் வேண்டு மென்பதாயிற்று.

## விசேஷ ஞானவிருத்தி.

சாக்கிரப் பிரபஞ்சத்தில் காணப்படுகிற கடபடாதி சத்துக்கள் விதேக கைவல்லிய பரியந்தம் சுழுத்தி மூர்ச்சை முதலான அவஸ்தைகளில் தோன்றாமல் மறைந்தொழிந்து எழுந்தபொழுது முன்போலவே தோன்றுவதாலும், மற்றும் சொப்பனப் பிரபஞ்சத்தில் காணப்படுகிற கடபடாதி சத்துக்கள் வாசனையாற்பிறந்த பரிணாம விஷயாதி தோன்றுகிற காலத்தல்லாமல் பின்னர் விழித்தகாலத்தில் தோன்றாமல் மறைந்தொழிந்து இல்லாமற் போவதாலும் இப்படியே சரீராதிப் பிரபஞ்சமனைத்தும் அசத்து மித்தை பிராந்தி துச்சம் எனத்தள்ளி எவ்வித உபாதியுமற்று இரண்டென்பதிற்று நிர்விசேஷ சின்மாத்திரமாய்ச் சமஸ்த கற்பனைக்கும் அதிட்டானமாய்த் தோன்றா தடங்கா திருக்கிற பாரமார்த்திக பிரமமே சத் எனக்கொண்டு எதார்த்தான்ம சொரூபத்தை அப்பிரமத்தோடு ஐக்கியப்படுத்தி அசிபத

சோதனையில் இடைவிடாது பாவித்து ஆதார தரிசனம் நிராதார தரிசனமுங்கடந்து முடிவில் அபரோட்ச சைதன்னியமாய் நிற்கும் அதிகாரிகளைத் தவிர மற்றைய ஆன்மாக்கள் எவர்களாயினும் அவர்களை நல்வினை தீவினைகளாகிய இவ் ஊழ் விடாது பிடித்து அவர்களைச் சக்கரம்போல் சுழற்றிக்கொண்டு வருமாதலால் அவ் ஊழின் நியதியைவிட்டு ஆன்மாக்கள் ஒரு சிறிதும் பிசகமுடியாதென்பது தோன்ற அவற்றைச் சுருக்கியும் விளக்கியும் "வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி தொகுத்தார்க்குந் துய்த்தலரிது" என்று கூறினாரென்ப. இதனை "ஓடியுந் தேடியும் ஓயாதுழைத் துழைத்துக் கோடி தனந்தான் குவித்தென்ன—நாடி—நினைத்தாங் கனுபவிக்க நேருமோ மேலை வினைப்பய னல்லாக் கடை" என்ற அனுபூதிவிளக்கச் செய்யுளானும் அறியலாம். (எ)

துறப்பார்மற் றுப்புர வில்லா ருறற்பால
ஊட்டா கழியு மெனின்.

பதவுரை.

துப்புர வில்லார் —(வறுமையினாலே) அநுபவித்தல் இல்லாதவர்
துறப் பார் —(இல்வாழ்க்கையைத்) துறக்குங் கருத்துடையவராவார்
உறற் பால —அடையும் பகுதியையுடைய துன்பங்களை (ஊழ்கள்)
ஊட்டா —அடைவிக்காமல்
கழியுமெனின்—நீங்குமாயின்

(கருத்து) ஊழ்வினைகள் துன்பங்களை அடைவிக்காமல் நீங்கின் வறுமை அநுபவ மில்லார் துறப்பார் என்பதாம்.

தம்மால் விடப்படும் பற்றுகளெல்லாம் தாமே விடப்பெற்றிருந்தும் கருத்து வேறு பாட்டால் துன்பப்படுவது ஊழ் வலியாலென் னும் ஒழிந்த சொற்பொருளைக் காட்டலால் மன் ஒழியிசை.

## விசேஷ ஞானவிருத்தி.

ஜனன மரண ரூபமான சம்சார விர்த்திக் கேதுவாகிய நல்வினை தீவினைகள் இரண்டும் ஆன்மாக்களைப் பிறவிகள்தோறும் அணுகித் தத்தம் வினைப்போகங்களை அனுபவிக்குமாறு செய்யாமல் விலகிவிடுமானால் ஒரு துன்பமும் இல்லை என்பதுபற்றி "உறற்பால ஊட்டா கழியுமெனின்" என்றும், அவ்வாறு அவ் வினைகள் ஒழிந்துபோனால் இம்மையின்கண் குன்றாச் செல்வம்படைத்த குபேரரை ஒத்தவர்களும், அச்செல்வத்தினாலாகிய போகங்களைத் துச்சமென வெறுத்துப் பேரின்பத்தை அடைதற்கேதுவாகிய துறவறத்தையே நாடுவார்கள் என்பதுபற்றித் துறப்பார்மற் றுப்புரவில்லார் என்றும், கூறினாரென்ப. என்பினும் ஈங்கே அவ்வினைகள் விலகப்போவதுமில்லை, ஆன் மாக்கள் இன்பத்தை அடையப்போவதுமில்லை என்பது பெறப்பட்டது. அங்ஙனமாயின்

ஆன்மாக்கள் பிறப்பிறப் பறுதற்கு மார்க்கந் தான் ஏதோவெனில் இப்பிறப்பிலேனும் ஆன் மாக்கள் செய்கின்ற கர்மங்கள் அனைத்தை யும் ஈஸ்வரார்த்தமாகச் செய்யப்படுகிறதெனத் திடம்பண்ணிக்கொண்டு, அவற்றின் பலன் களைத் தாம் இச்சியாமல் சுத்தாந்தக்கரண முற்று, நிஷ்காமகர்ம யோகிகளாய்ப் புவன போகமுதல் சுவர்க்கபோக மீறுயுள்ள எல்லா இச்சைகளையும் பரித்தியாகஞ் செய்வார்களே யானால் இவ்வூழ் அவர்களையணுகாமல் மாயவே அவர்கள் பிரத்தியக பின்ன பிரமான்மா வாக வே துலங்குவார்கள் என்பது அர்த்தாபத்தி. இதனை "வினைப்போகமே ஒரு தேகங்கண்டாய் வினை தானொழிந்தால் தினைப்போதளவும் நில் லாது கண்டாய்" என்னும் பட்டினத்தடிகள் பாசுரத்தானும் அறியலாம். (அ)

நன்றாங்கா னல்லவாக் காண்பவ ரன்றாங்கா
லல்லற் படுவ தெவன்.

பதவுரை.

நன்று —நல்வினை
ஆங்கால் —இன்பங்களைக் கொடுக்கும்போது (அவ்வின்பங்களை நீக்கும் விதந் தேடாமல்)
நல்லவா —இவை நல்லவையென் றிசைந்து
காண்பவர் —அநுபவிப்பவர்
அன்று —மற்றைத் தீவினை
ஆங்கால் —துன்பங்களைக் கொடுக்கும்போது (அத்துன்பங்களையும் அப்படி அநுபவியாமல்)
அல்லற் படுவது —(நீக்கும் விதந்தேடித்) துன்பப் படுவது

எவன் —என்ன நினைத்து

(கரு) நன்மையை அநுபவிப்பதுபோலத் தீமையையும் அநுபவிக்கவேண்டும் என்பதாம்.

இவை மூன்று பாட்டாலும் இன்பதுன் பங்களுக்குக் காரணமாகிய ஊழின்வலி சொல் லப்பட்டது.

## விசேஷ ஞானவிருத்தி.

ஆன்மாக்கள் தாங்கள் செய்யும் கர்மங் களில் "இக்கர்மம் யான் செய்கிறேன்" என் னும் கர்த்திருத்துவாபிமானத்தைப் போக்கித் தம்மை அகர்த்தா அபோக்தாவாக அறிந்து அதிஷ்டான பிரம சாட்சாத்காரத்தினுல் கிரி யாகார முதலிய சர்வ வியவகாரங்களையும் தம் யாதமாக்கிக் கொள்ளுவதை மறந்துவிட்டு, அனித்தியமான இகபோக பரபோக சாதனங

களை நினைந்து அவற்றின் பலா பலன்களை இச் சித்துப் பிறவிகள்தோறும் செய்துவருகிற நல் வினை தீவினைகளுக்குத் தக்கபடியே இப்பிறவி யிலும் நன்மை தீமைகளை அனுபவித்து வரு தல்பற்றி அவற்றில் நல்வினை இன்பங்களைக் கொடுக்கும்போது மிக்க உற்சாகத்துடன் அனு பவிப்பாராதலின் அதனை "நன்றாங்கா னல்ல வாக் காண்பவர்" என்றும், அவற்றில் தீவினை துன்பங்களைக் கொடுக்கும்போது அவற்றையும் மிக்க உற்சாகத்துடன் அனுபவிக்கமுடியாமல் அவற்றை நீக்கும் விதந்தேடி தெய்வத்தை நொந்து மேலும் மேலும் அல்லற்படுவாராத லானும் அங்ஙனமாயினும் அவை தங்களைவிட்டு விலகாதலானும் அம்முயற்சி வீணே என்பது தோன்ற அதனை "அன்றாங்கால் அல்லற்படுவ தெவன்" என்றும், கூறினாரென்ப. இதனைச் "செய்தீ வினையிருக்கத் தெய்வத்தை நொந்

தாக்கால் எய்தவருமோ இருநிதியம்-வையத்-
தறும்பாவ மென்னவறிந் தன்றிடார்க் கின்று
வெறும்பானை பொங்குமோ மேல்'' என்னும்
ஔவையார் வாக்காலும் அறியலாம். (கூ)

---

ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்.

பதவுரை.

மற்றொன்று—(தன்னை விலக்குதற்பொருட்டு) தனக்குப் பகையாகிய மற்றுமோர் உபாயத்தை

சூழினும் —ஆராய்ந்தாலும்

தான் முந்துறும் } (அவ்வுபாயத்தையாவது மற்றொன்றையாவது வழியாகக்கொண்டு வந்து அவ்வாராய்ச்சிக்கு) முற்பட்டு நிற்கும் (அதனால்)

ஊழின் —ஊழ்போல
பெருவலி —மிகுந்த வலிமையுடையவை
யாவுள —எவையிருக்கின்றன?

(கருத்து) ஊழை விலக்க நினைக்கின் அது வே முன்னிற்கும். ஆதலால் அவ்வூழினும் வலி யவை இல்லை என்பதாம்.

பெருவலி அதனையுடைய ஊழுக்கு ஆகு தலால் ஆகுபெயர். சூழ்தல் பலருடனும் பழு தற வெண்ணுதல். ஊழானது அவ்வுபாயத் தைச் செய்தற்கே யல்லாமல் ஆராய்தற்கும் சமயங்கொடா தென்கிற பொருளைக்குறித்து நிற்கையால் உம்மை எச்சவும்மை. எல்லாம் வழியாக வருதலுடைமையால் ஊழே வலியை யுடைய தென்பதாம்.

இதனால் அவ்விருவகை ஊழ்களின் வல்லமையும் பொதுவாகச சொல்லப்பட்டது. (ய)

விசேஷ ஞானவிருத்தி.

பதினாயிரக் கணக்கான ஜனங்கள் கூடியிருக்கிற ஒரு பெரிய கூட்டத்தின் மத்தியில் ஒருவன் ஒரு பாம்பைக்கண்டு பாம்பு பாம்பு என்று அவன் கதறுவானானால் சர்வ ஜனங்களும் அவன் கதறுவதைக்கேட்டுப் பதறியடித்து ஓடாநிற்ப, அதில் கைத்தடியோடு நின்றுகொண்டிருக்கிற மெய்த்திடம்பெற்ற ஒரு சிலரே அத்தடியால் அம்பாம்பைத் தலையிலடித்துத் தலையில் வீசியெறிய மற்றவரும் பயம் அற்றவராகி மீண்டும் வந்து ஆண்டு கூடுவார்களாதல்லா அதுபோல் ஈங்கே நாயனாரும் அப்படியே சர்வ ஆன்மாக்களும் பாம்பினுங் கொடிய

இவ் இருவினைகளுக்கும் தாம் பயந்து அவற்றை விட்டப்பால் ஓடி ஒழியுமாறும் இகபர வைராக்கியங்களால் சகல போகங்களையும் சுக துக்காதிகளையும் நசித்துத் தாரணை தியானம் சமாதி என்கிற பூண்கள் பிடித்திருக்கிற நிராசை யென்னுந் தடியைக் கையில் அராவிப் பிடித்திருக்கிற அதிகாரிகளாகிய ஒரு சிலரே அவ் இருவினைப் பாம்பினை ஒருவினையாக்கித் தலையிலடித்துத் தூலையில் வீசியெறிய அதனை யறிந்த மற்றை யான்மாக்களும் ஆங்கே வினை என்கிற நினைவொழியுமாறு தாங்களும் நிராசை என்னும் அக் கைத்தடியை அளாவிப்பிடிக்க முயல்வாராதல்பற்றி 'ஊழிற் பெருவலியாவுள மற்றொன்று சூழினுந் தான் முந்துறும்' என்று திடுக்கிடக்கூறி இவ்வதிகாரத்தை முடித்தாரென்ப. இதனை "இருவினையாம் நச்சரவிங் கென்னைச்சீற இரு துண்டாய் நசித்ததனை

எடுத்தெறிந்தேன் மருவினைய அகம்பிரமம் நானே யாகி மற்றதெல்லாம் என்னிடத்தே வழங்கக் கண்டேன்" என்னும் அநுபவ ஞான விளக்கச் செய்யுளாலும் அறிந்துகொள்ளலாம்.

## 38-ம் அதிகாரம்

### முற்றிற்று.

திருக்குறள் அனைத்தினுக்கும் இவ்வாறு ஞான உரை எழுதலாமாயினும் அவற்றுள் இவ் வதிகாரங்களே ஞானபாகமாக ஆன்றோர் வகுத் திருக்கிறபடியால் இவ்வதிகாரங்களுக்கு இவ் விசேஷ ஞானவிருத்தியுரை எழுதநேர்ந்தது. அப்பியாசிகள் இந்நூலை ஆதரிப்பதே அவர் எமக்குச் செய்யுங் கைமாறு எனக்கருதுவேமாக.

ஓம் பரப்பிரம்மணே நம:

மறைமலையடிகள் நூல்நிலையம்
MARAIMALAI ADIGAL LIBRARY